இலண்டன்

# சுடரொளி


CHUDEROLI SEP - OCT புரட்டாசி - ஐப்பசி 2007





## காந்தித் தாத்தாவே !
## இந்திரா அன்னையே !

## மறுபடியும் பிறந்து வாருங்கள் !





இந்திய பிரதமர்
மன்மோகன் சிங்



அருள் பாலிப்பாரா ?
முதல்வர் கலைஞர்

பாரத மாற்றாந்தாய் ஈழத்தமிழர்களுக்கு இழைத்து வருகின்ற அட்டூழியங்களைத் தாங்க முடியவில்லை என்ற பரிதாப நிலையில், மகாத்மா காந்தியும், இந்திரா காந்தியும், மீண்டும் பிறந்து வந்தால் நீதி கிடைக்கும் என்று ஈழத் தமிழர்கள் நம்புகிறார்கள்



அகவை 80 இல்
அமிர்தலிங்கம்



' ஈழத் தமிழருக்கு உதவுங்கள் '
நெல்சன் மண்டேலா

£1.00 / இலங்கை ரூ. 35.00 / RM 4

# Tamil Community Centre Hounslow
# தமிழ் சமூக நடுவம்





## Family Group & Lessons for children and adults

Date: Every Saturdays Time: 2:00pm till 9:00pm



- **English** - Free
- **Maths** - Free
- **Science** - Free
- **Tamil** - Free
- **Yoga**
- **Story Telling** - Free

### Senior Citizen Drop-In Service

A variety of activities for senior citizens to enjoy. Tamil Community Centre is providing a number of services and advice to the senior citizens of the community. Tea, Coffee and snacks available.

Date: Every Wednesdays

Time: 10:00am till 3:00pm



- **Free Immigration Advice**

www.tccentre.co.uk

**10 School Road, Hounslow, Middlesex TW3 1QZ**

வாரம் தோறும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில்
பிற்பகல் 1 மணியில் இருந்து 3 மணிவரை நிகழும்.

முதியோர் ஒன்றுகூடல்

**Drop-in Service**

உங்களைப்பதிவு செய்து கொள்ளுங்கள்.

United Reformed Church, 114 Hanworth Road, Hounslow, Middlesex TW3

தொடர்புகளுக்கு:
07947 816 273, tccentre@googlemail.com
tamilcommunitycentre@googlemail.com

இலண்டன்
# சுடரொளி
# CHUDEROLI

*கலை இலக்கிய அரசியல் சமூக இதழ்*

சுடர் 4 ஒளி 20 புரட்டாசி-ஐப்பசி 2007

***கௌரவ ஆசிரியர் :***
*திரு. சி. சரவணபவன் (சிற்பி)*, M.A.,
***பிரதம ஆசிரியர் :***
*திரு. ஐ.தி. சம்பந்தன்*
***சிரேட்ட ஆலோசகர்கள் :***
*திரு. பொன் பாலசுந்தரம்*
*திரு. என். செல்வராஜா* ***(நூலகவியலாளர்)***
***ஆசிரியர் குழு ஆலோசகர்கள் :***
*திரு. மயில் மனோகரன்*
*திரு. எஸ். கருணாநந்தராசா*
*திருமதி. திருச்செல்வஉமா ஜெயக்குமார்*
***நிர்வாகம் :***
*திருமதி. செல்வதி சம்பந்தன்*, B.A,(Hons)
***வடிவமைப்பு :***
*உலகத் தமிழர் பதிப்பகம், சென்னை*
Email :utpmathi@yahoo.co.in
***கணினி :***
*திருமதி. சரோஜா இலட்சுமணன்*
***வெளியீடு :***
Chuderoli Publication Society,
15, Rutland Road, London E7 8PQ
United Kingdom
Tel : 0044 208 552 6992
Mob : 07957 666 598
Email : itsampanthan@hotmail.com
***தமிழகப் பிரதிநிதி :***
*திரு. இரா. மதிவாணன், எம்.எஸ்.ஸி.,*
4, Sourashtra Nagar, 7th Street,
Choolaimedu, Chennai - 600 094.
Tel : 0091 44 65180155/0 9444 111 951
E-mail : eramathi@rediffmail.com
***இலங்கைப் பிரதிநிதி :***
*திரு. V. தருமலிங்கம்*
***மலேசிய தொடர்பாளர்***
*திரு. இராஜசிங்கம்*, Tel : 017-3793997;
E-mail : Pooganesvari.Arumugan.nielsen.com

| Subscription | | Annual | Life |
|---|---|---|---|
| UK | : | £ 12 | 120 |
| Europe | : | £ 15 | 150 |
| India | : | Rs. 200 | 2000 |
| Sri Lanka | : | Rs. 300 | 3000 |
| Malaysia | : | RM 30 | 300 |
| Singapore | : | SG$ 15 | 150 |
| Other countries | : | £ 20 | 200 |

படைப்பின் கருத்துகளுக்குப்
படைப்பாளரே பொறுப்பு

## இந்த இதழில்

1. எமது நோக்கு - பாரதத்தின் பார்வை எங்கே...? 3
2. தமிழ் தந்த தாதாக்கள் 5
3. ஈழத்து நாடக மேதை வைரமுத்து 9
4. இராஜீவ் காந்தியின் படுகொலை! பின்னணி என்ன? 13
5. அமரர் அமிர்தலிங்கம் 80ஆவது பிறந்தநாள் சிந்தனைகள் 15
6. நான் தமிழ்த் தேசியம் பேசுவது ஏன்? - *பழ. நெடுமாறன்* 21
7. செல்வி சோபனாவின் ஆடல் அரங்கேற்றம் 23
8. Sri Lankan Tamils: Indian Involvement - A.K. Verma 29
9. நூறாண்டு காணும் சாரணர் இயக்கம் - *அரங்க முருகையன்* 31
10. சிற்பம் அழிவதைக் கண்ட சிற்பி - *சு.வே. கலைவாணன்* 35
11. தமிழ் சினிமாவின் வரலாறு - *கே.டபிள்யூ. செல்வராசா* 36
12. சிறுகதை - அவள் ஒரு வானொலி நடிகை - *கலைவாணி* 40
13. திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!!- *சோம. வள்ளியப்பன்* 46
14. சுவிஸ் நாட்டில் நடைபெற்ற தமிழர் விளையாட்டு விழா 48
15. கூட்டாளிகளா? - எச்சரிக்கை - *தி.க. சந்திரசேகரன்* 52

## அகஸ்தியார்



"நான் ஐஸ்வர்யங்களை அல்ல, பாவிகளை இரட்சிக்க அவர்களைத் தேடியே வந்திருக்கின்றேன்" என்று உபதேசித்த யேசு கிறிஸ்துவின் வாக்கினைப் போற்றி, ஏழ்மையை ஒழிப்பதற்கான பங்களிப்பைத் தனது எழுத்துகள் மூலம் செய்யமுனைந்தவர் எஸ். அகஸ்தியர்.

29-8-1926இல் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆனைக் கோட்டை சவரிமுத்து அன்னம்மா தம்பதியினிரின் மூன்றாவது மகனாகப் பிறந்த அகஸ்தியர் தமது ஆரம்பக் கல்வியை ஆனைக்கோட்டை ரோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலையில் கற்றிருந்தார். ஈழத் தமிழினம் புலம் பெயர்ந்து ஏதிலிகளாகி உலகெங்கும் சிதறிப்போன அக்காலகட்டத்திலே அதன் பாதிப்புக்கு அகஸ்தியரும் தப்பிவிடவில்லை. மக்கள் எழுத்தாளனான அகஸ்தியர் இலங்கையில் எழுந்த 1983 ஜூலை கலவரத்தின்போது, இலங்கை இராணுவ அடக்குமுறைகளினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகித் தான் வாழ்ந்திருந்த கீரிமலை மண்ணில் வைத்துத் தனது சொத்துகளுடன், மிக முக்கியமான வாழ்நாள் சேகரிப்பான ஏராளமான நூல்களையும் இவர் இராணுவத்திடம் துப்பாக்கி முனையில் இழந்திருந்தார். அதன் பாதிப்பினால், மனைவி மக்களுடன் ஐரோப்பாவுக்குப் புலம்பெயர்ந்த அகஸ்தியர், பின்னாளில் பிரான்சிலே 1986இல் அரசியல் தஞ்சமடைந்திருந்தார். புலம்பெயர் வாழ்விலும், தன் எழுத்துப் பணியைத் தளராது தொடர்ந்த அகஸ்தியர், தாம் 1995இல் அமரத்துவம் அடையும் வரை தனது பணியை நிறுத்தவேயில்லை. தமது இறுதிக் காலத்தில் மருத்துவமனைக் கட்டிலிலும் தம் இலக்கியப் படைப்புகளைத் தளராது வெளிக்கொணர்ந்த வண்ணமே இருந்தார். அகஸ்தியரின் படைப்புகள் மக்களுக்காகவே சிருஷ்டிக்கப்பட்டன. மக்களின் வாழ்க்கை அனுபவங்களை எடைபோட்டு, உணர்வுபூர்வ வெளிப் பாடுகளாக அகஸ்தியரின் படைப்புகள் அமைந்திருக்கின்றன.

கவிதையோடு இலக்கிய உலகில் பிரவேசித்த அகஸ்தியர் நாற் பதாண்டுக் கால இலக்கிய வாழ்க்கைக்குள் இன்றுள்ள படைப்பிலக்கிய வடிவங்கள் அனைத்திலும் தம் தடம்பதித்துச் சென்றவர். ஏறக்குறைய 360 சிறுகதைகள், 40 குட்டிக் கதைகள், 10 குறுநாவல்கள், 9 நாவல்கள், 100க்கும் மேற்பட்ட கட்டுரைகள், விமர்சனங்கள், ஆய்வுகள், 20 வானொலி நாடகங்கள், நாட்டுக்கூத்து நாடகங்கள் என்று இவர் கைவைக்காத துறையே இல்லை. "உணர்வூற்றுருவகச் சித்திரம்" என்ற புதிய இலக்கிய வடிவம் ஒன்றையும் பரிசோதனை முயற்சியாக இவர் படைத்துச் சென்றுள்ளார்.

பாரிசில் 8-12-1995இல் அமரத்துவமடைந்த அகஸ்தியரின் இறுதிக் கிரியைகள் பிரான்சின் புகழ்மிக்க பாரிஸ் கம்யூன் வீரர்கள் புதைக்கப்பட்ட பெயர்லாச்சேல் மயானத்தில் நிகழ்ந்தது. இந்த மயானத்திலேயே குர்திஷ் தேசிய இனவிடுதலை வீரரும் அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் நண்பரு மான இங்மஸ் குகே என்ற கலைஞரும் புதைக்கப்பட்டார் என அறிய முடிகின்றது.

சிந்தனைப் பகுதி

# கம்பரும் வள்ளுவரும்

- சி. மாசிலாமணி

தமிழ் கண்ட கம்பரும், வள்ளுவரும் உலகின் புலவர் வரிசையில் முன்னணியில் நிற்பவர்கள். அதன் அடிப்படையில் இவர்களை உலகின் தலைசிறந்த மனிதர்களாகக் கணிப்பதில் தவறில்லைதானே என்று கேட்டால் பதில் சொல்வது சற்றுக் கடினம். ஒப்பு வமைக்கு இவ் இருவரையுமே எடுத்து நோக்குவோ மானால் பதிலுக்கான கடினத்தின் காரணம் ஓரளவு தென்படும். புலமையில் கம்பனுக்கு நிகர் கம்பன்தான். வள்ளுவர்கூடக் கம்பனுக்கு அடுத்த நிலையிலேயே உள்ளார். அதற்காகக் கம்பர் வள்ளுவரைவிடச் சிறந்தவர் என்று சொன்னால் அது எங்கோ கொண்டு சென்று விடும். வள்ளுவர் அதி உச்சத்தில் உள்ளவர். தமிழுக்கு வான் புகழ் வந்ததென்றால் அது வள்ளுவரால்தான். அவருடன் ஒரு ஆரிய வம்சத்தின் புகழ்பாடிய கம்பரை ஒப்பிட முடியாது.

கம்பரோ வள்ளுவரோ மனிதர்கள் என்றால் அவர்களின் ஆற்றல் ஒரு வரையறைக்கு உட்பட்டது. ஒவ்வொரு மனிதரும் அந்த வரையறைக்கு உட்பட்ட ஆற்றலுடன்தான் வாழ்ந்தவர்கள், வாழுகிறார்கள். சிலர் செயல் கண்டு நாம் இவர்களால் எப்படி இதைச் சாதிக்க முடிகிறது என்று வியந்து, நிச்சயம் இவர்கள் கடவுளின் அவதாரமாகத்தான் இருக்கவேண்டும் என்று சிந்தை தளும்புவதுண்டு. அளப்பரிய செயல் புரியும் ஒருவரைக் கண்டு வியந்து இவர் அவதாரம்தான் என்று எப்போது முழுமையாக நம்புகிறோமோ அப்போதே மூட நம்பிக்கைக்கும் வித்திடுகிறோம். வள்ளுவரை தெய்வீகப் புலவர் என்று கருதி அவரின் 1330 குறள்களையும் வேத வாக்கு என்றுகூடப் பலர் நம்புகிறார்கள்? உலகில் இப்படியானவர்களின் இளக்காரத்தைப் பயன்படுத்தி சடை வளர்த்தும் முடி வழித்தும் எத்தனையோ அவதாரங்கள் தோன்றியிருக்கின்றன.

இந்த வகைப் பலம் குன்றிய சிந்தனைகளி லிருந்து தமிழ்கூடத் தப்ப முடியவில்லை. எத்தனை புலவர்கள், இலக்கியவியலாளர்கள் ஆகியோரின் ஆற்றலாலும் கடும் உழைப்பாலும் காலத்தால் அழியாத காவியங்களைத் தன்னகத்தே பெற்று உலகின் எட்டுச் செம்மொழிகளில் தானும் ஒன்றாகத் தமிழ் திகழ்கிறது. ஆனால் அதற்கு இழுக்கு உண்டுபண்ணுவதுபோல் ஆதி சிவன் பெற்ற மொழி என்று ஏதோ வானில் இருந்து தோன்றிய மொழிபோற் கதை கட்டப் பட்டுள்ளது.

விலைமகளிரே தஞ்சமென்று வாழ்ந்தவர் அருணகிரிநாதர். தன் தவற்றை உணர்ந்து திருந்தி தன் புலமை ஆற்றலைப் பயன்படுத்தி முருகன் புகழ் பாடி இறுதிக் காலத்தைக் கழித்தார். அவர் பாடிய பாக்கள் திருப்புகழ் என்ற பெயருடன் தமிழுக்கே ஒரு தனி அழகைக் கொடுக்கும் சந்தங்களாயின. ஆரம்பத்தி லிருந்து எவ்விதத் தடங்கலுமின்றி முடியும்வரை மதுர கானமாக ஒலிப்பவைதாம் இந்தப் பாக்கள். திருப்புகழை நாம் வியக்கலாம். அதற்காக அதை இயற்றியவருக்கு கோயில் கட்டி அவரைக் கடவுள் ஆக்குவது எவ்வள விற்குப் பொருந்தும்.

தான் பெற்ற இறையனுபவம் என்னும் பெரும் அனுபவத்தை மக்களுடன் பகிர்ந்து கொள்ள முனையும் திருமூலர் திருமந்திரங்களை இயற்றினார். இங்கும் வந்துவிட்டார்கள். அவர் ஆண்டுக்கு ஒரு மந்திரமாக அவற்றை எழுதி முடித்தாராம். அப்படியானால் அவர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்? காரணம் திருமந்திரம் மொத்தம் மூவாயிரம்.

திருஞானசம்பந்தரின் இறுதி முடிவையும், நந்தனாரின் இறுதி முடிவையும் ஒருமுறை பார்ப்போம். சம்பந்தர் பல சமணர்கள் கழு ஏற்றப்பட்டதற்குக் காரண மாயிருந்தவர். திருமண நாள் அன்று திருமணப் பந்தலில் இருக்கும்போதே மேல் உலகம் சென்றுவிட்டார். தீ மிதிப்பிற்காக விறகு எரிந்து கொண்டிருக்கும்போது சகாக்களுடன் சிதம்பர ஆலயத்தினுள் அனுமதிக்கப் பட்ட நந்தனார் அப்படியே சோதி வடிவில் விண் நோக்கிச் சென்றுவிட்டார். உண்மைச் சரித்திரம் எதுவாக இருந்தாலும் இவ் இருவரினதும் மரணங்கள் எமக்குச் சந்தேகம் உண்டு பண்ணக்கூடியவைதாமே. எந்தச் சம்பவத்தில் சந்தேகம் ஏற்பட்டாலும் அது பற்றிக் கேள்விகள் கேட்பதில் தவறில்லை.

தமிழ்கூறும் நல்லுலகு தன் வரலாற்றைச் செம்மை யானதாக மாற்ற வேண்டுமென்றால் இப்படியான ஆதாரமற்ற கதைகள் தொடர்வதைத் தவிர்க்கவேண்டும். எம் பாரம்பரியக் கதைகளை விடச் சிந்தனைத் தரத்திற்கு முன்னுரிமை அளிப்பதுதான் சிறந்த வழி. ✱

## பொன் பாலசுந்தரம் இல்லத் திருமணம்



சுடரொளி வெளியீட்டுக் கழகத் தலைவர் பொன் பாலசுந்தரம் அவர்களின் பெயர்த்தியும் திரு. த. கிரு பானந்தன் - திருமதி உமா இணையரின் புதல்வியுமான செல்வி **கேஷனாவிற்கும்** திரு. ஆ. கனகேஸ்வரன் -திருமதி வினித்தா இணையரின் மகன் **சுஜீவனுக்கும்** இலண்டனில் 19-8-2007 அன்று பல பெரியோர்களின் முன்னிலையில் திருமணம் இனிதே நடைபெற்றது. மண வாழ்வில் அடியெடுத்து வைத்துள்ள இந்த இணைப் பறவைகள் வாழ்வில் வசந்தம் பல கண்டு வாழ்வு மலரட்டும் என சுடரொளி சார்பில் வாழ்த்துகிறோம்.

# எமது நோக்கு

## பாரதத்தின் பார்வை எங்கே...?

பாரத நாட்டை இதயபூர்வமாக நேசிப்பவர்கள் ஈழத் தமிழர்கள். அது பாரதம் ஈழத்திற்கு அண்டை நாடு என்பதனால் மட்டுமல்ல. இருநாட்டு மக்களும் கலை, கலாச்சார, இலக்கியத் தொடர்புகளால் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளனர். இதுவே வரலாறு.

இது தவிர ஆறு கோடி தமிழர்கள் வாழும் தமிழ்நாடு இந்தியாவின் தென்பகுதியாகும். நாயன்மார் வாழ்ந்த காலத்திலிருந்து ஈழத்திற்கும் பாரதத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது. ஈழத்தில் சரித்திரப் பிரசித்திபெற்ற திருக்கோணேஸ்வரம், திருக் கேதீஸ்வரம் போன்ற ஆலயங்கள் பற்றி நாயன்மார் பாடியிருக்கிறார்கள். இது சமய கலாச்சாரத் தொடர்பின் வரலாறு. இது மூன்றாம், நான்காம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற நிகழ்வாகும். அக்காலம்தொட்டு ஈழத் தமிழர் பாரத நட்புறவு வளர்ந்து வந்தது.

ஈழத்தில் சைவத்தையும் தமிழையும் அந்நியர் ஆட்சியிலிருந்து பாதுகாத்த நாவலர் பெருமான், தமிழ் நாட்டில் சிதம்பரத்தில் ஒரு பாடசாலையையும் அச்சுக் கூடத்தையும் அமைத்து அங்கும் சைவமும் தமிழும் வளரப் பாடுபட்டவர். ஈழத்து விபுலானந்த அடிகளார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணி புரிந்தவர். இவ்வாறு ஈழத் தமிழர்களுக்கும் பாரதத்திற்கு மிடையில் நெருங்கிய உறவு பன்னெடுங்காலமாகப் பல வழிகளிலும் வளர்ந்து வந்திருக்கிறது.

பாரதத்தின் ஆத்மீகஞானி சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு வந்தபோது மகத்தான வரவேற்பளித்தவர் கள் ஈழத் தமிழர்கள். சுவாமி விவேகானந்தர் பெயரால் சமய நிறுவனங்களும் பாடசாலைகளும் அமைத்துக் கௌரவித்து வருபவர்களும் ஈழத் தமிழர்களே.

இந்திய சுதந்திர விடுதலைப் போராட்டம் நடத்திய மகாத்மா காந்தி 1928இல் இலங்கை வந்த போது யாழ்ப்பாணத்தில் மகத்தான வரவேற்பளித்தவர் களும் ஈழத் தமிழர்களே. இந்தியா சுதந்திரம் அடைந்த போது கோலாகலமாகக் கொண்டாடிக் குதூகலித்தவர் களும் ஈழத் தமிழர்களே.

1962இல் சீனா இந்தியாமீது போர்தொடுத்த போது சீனாவுக்கெதிராக ஆர்ப்பாட்டமும் ஊர்வலமும் நடத்தி இந்தியாவுக்கு ஆதரவு அளித்தவர்கள் ஈழத் தமிழர்களே. இலங்கை அரசு சீனாவுக்கு ஆதரவாகச் செயற்பட்டதை இன்று இந்திய அரசு மறந்துவிட்டதா?

வங்காளதேசம் தனிநாடாவதற்கு மறைந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மேற்கொண்ட நட வடிக்கைக்கு ஈழத் தமிழர்கள் முழுமையான ஆதரவு அளித்ததை இந்திய அரசு நினைத்துப் பார்க்க வேண்டும். அன்று இலங்கை அரசு பாகிஸ்தானுக்குத் துணைபோனதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

இலங்கை சுதந்திரமடைந்தபின்னர்த் தந்தை செல்வா தலைமையில் ஈழத் தமிழர்கள் நடத்திவந்த போராட்டத்திற்குத் தமிழ்நாட்டு மக்களும் அரசியல் கட்சிகளும் ஆதரவு நல்கிவந்தது ஏன்?

1958 இனக் கலவரத்தை அடுத்து இந்தியாவில் அறிஞர் அண்ணா தலைமையில் சிங்கள அரசுக்கெதி ராக இந்திய மண்ணில் நடத்திய எதிர்ப்புப் போராட் டத்தை ஈழத் தமிழர்கள் மறக்கவில்லை.

1969இல் தந்தை செல்வா இந்தியாவுக்கு வந்தபோது இந்திய அரசியல் கட்சித் தலைவர்கள் வரவேற்று ஈழத்தமிழர் போராட்டத்திற்கு அவர்கள் அளித்த ஆதரவு மறக்க முடியாத ஒன்று. இன்று தமிழ் நாட்டு முதலமைச்சராகவிருக்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் அன்று ஈழத்தமிழர் போராட்டத்திற்கு அளித்த ஆதரவும் ஒத்துழைப்பும் அளப்பரியது.

ஆனால், இன்று ஈழத்தமிழர்களை இனச்சுத்தி கரிப்புச் செய்துவரும் சிங்கள இனவாத அரசின் கொடு மையையும், இந்திய அரசினாலும் ஏனைய வல்லரசு களினாலும் வழங்கப்படும் ஆயுதங்களினால் ஈழத் தமிழர்கள் கொல்லப்படுவதையும் பார்த்துக்கொண்டு இந்திய அரசு அமைதியாக இருப்பது ஏன் என்று உலகத் தமிழர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். இன்று மத்திய அரசில் மிகச் செல்வாக்குமிக்க முதல்வராகவும் உலகத் தமிழர் தலைவராகப் போற்றப்படுபவருமாகிய கலைஞர் கருணாநிதி அவர்கள் மௌனம் சாதிப்பது ஏன்?

ஈழத்தமிழர் பிரச்சினையில் மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் காட்டிய ஆதரவையும் அவர் எடுத்த தீவிர நடவடிக்கையையும் மத்திய அரசு மறந்து விட்டதா?

தன் கையே தனக்கு உதவும் என்ற கொள்கை யுடன் போராட முற்பட்ட தமிழீழப் போராளிகள் வலு வான இராணுவ பலத்துடன் உள்ளனர். அவர்களால் சிங்களப் படைகளை எதிர்கொண்டு தமது உரிமையை

யும் பெறமுடியும். ஆனால், இந்தியா இலங்கை அரசுக்கு வழங்கியுள்ள ஆயுதப் பட்டியலைப் பாருங்கள்.

அதுதானே இன்று ஈழத் தமிழர்களை அழித்துவருகிறது. அகிம்சை வழியில் பாரத நாட்டிற்கு விடுதலை பெற்றுக் கொடுத்த மகாத்மாகாந்தி உருவாக்கிய பாரத அரசு ஆயுதம் வழங்கி ஈழத்தமிழர்களைக் கொல்லவைக்கிறது என்று உலகம் வியப்படைகிறது.

எப்பொழுதுமே இந்தியாவுடன் நட்புறவு கொண்டுவரும் ஈழத் தமிழர்களின் அவலம் போக்க முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களும் பிரதமர் மன்மோகன்சிங் அவர்களும் விரைந்து செயற்பட வேண்டிய காலம் வந்துவிட்டது. ஈழத் தமிழர்களுக்கு ஒரு சுயாட்சி பெற்றுக் கொடுக்கவேண்டும் என்ற சிந்தனையுடன் மறைந்த இந்திராகாந்தி அம்மையாரின் ஆவி இவர்களை துரத்தும்.

பாரதத்தின் பார்வை எங்கே என்று பொறுத்திருந்து பார்ப்போம். *



## காந்தி தேசத்தின் ஆயுத உதவி

ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்ய சிங்கள பாஸிச அரசுக்குக் காந்திதேசம் அள்ளித் தந்த கொலைக் கருவிகள் :

சி.ஜி.எஸ். வராகா எனற போர்க்கப்பல்

கண்ணி வெடியால் பாதிக்கப்படாத ஊர்திகள் - 80

எறிகணை குண்டுகள், உயர்வகை வெடிப்பொருள்கள் - 60

பாதுகாப்பு உடைகள் - 2,000

குண்டு துளைக்காத உடல்கவசம் - 8,550

பாதுகாப்புத் தலைக் கவசங்கள் - 12,300

குண்டு பாதுகாப்பு ஊர்திகள் - 10

ரூ. 10 கோடி மதிப்புள்ள உறைநிலைக் கொள்கலன்கள்

குண்டு துளைக்காத ஊர்திகள் - 10

இரவுப் பார்வைச் சாதனங்கள் - 400

ரூ. 125 கோடி மதிப்புள்ள தொலைத் தொடர்புக் கருவிகள் .

உயர் அலைவரிசை தொலைத் தொடர்புக் கருவிகள் - 35

ரூ. 250 கோடி மதிப்புள்ள பொறியியல் சாதனங்களும் உடைகளும் வழங்கப்பட்டுள்ளன.

# YES, IT'S, 'NEW, NEW LABOUR'




It's time for a change. A change is what it's time for. You've heard the word change. Now it's time to put change into action.

And the reason we need change is because we need a new approach. We need to rebuild trust bet ween the people and their govern ment. Because that is what has broken down.

The people have lost that sense of trust. For too long they have been let down. They have seen their pensions taken away from them. They have seen billions frittered away on schools and hospitals.

Their children cannot afford anywhere to live. They have noticed I haven't mentioned Iraq yet. And they rightly want to know who was responsible for all this. Well, let me tell you a story. When I was a wee brain growing up in the small British town of kircaldy. I went to the local school. And not Eton or Fetters, like some people who didn't listen to the British people when they demanded change, particularly at the top.

And do you know what the motto of that school was? It was one I can never forget: Usque conabor, which means 'I will try my utmost' and is an important change from some other people's school mottoes, which must have read 'I shall lie my utmost', But as I said, things have changed and I learned there, in that small, British state school, the most important lesson of my life - 'Try, try and try again until you become prime minister.'

And I think what we have seen today shows just how true those words are. As your new Prime minister, I am proud to say that I am filled with humility at the thought of the task that lies ahead. There is much needs to be changed. But I give you my solemn word that one thing will not change - whatever happens, I will do everything in my power to blame the previous government.

பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் எழுதிய

# தமிழ் தந்த தாதாக்கள்

## வரதபண்டிதர் தந்த அருங்கொடைகள்

வரதராசர் வடமொழி தென்மொழி கைவந்த வைத்தியர். அவர் பல துறைகளிலும் பலதரப்பட்ட மக்களுக்கும் பலவாய பிரபந்த நூல்கள் செய்தவர். மக்கள் இலக்கிய வரிசையிலும் அவர் பல தனிப் பாடல்கள் செய்தவர். அவை யாவும் எழுதி வைக்கப் பெறாமல் எமக்குக் கிடையாமற் போயின.

போர்த்துக்கேயர் செய்த பெரிய அழிவுகளால் பெருங்கோயில்கள் பல தரைமட்டமான காலத்தில் உற் சவங்கள் செய்யமுடியாத சூழ்நிலையில், பக்திவயப் பட்ட மக்கள் தங்களுள் மூலைக்கு மூலை வழிபாட்டு முறைகளை வகுத்து வணங்கி வந்தார்கள்.

அந்த வகையில் அரச மரங்களினடியிலும், குளத்தங் கரைகளிலும், வயலோரங்களிலும் பிள்ளை யார் வழிபாடு பெருமளவில் பெருகலாயிற்று. மூத்த கணபதிக்குத் தோத்திரங்கள் சொல்லி, முடியோடு தேங்காயைப் படியிலடித்து, மூன்று முறை தலையிலே குட்டி, கைமாறிக் காதுகளைப் பிடித்தவாறு குந்தி யெழும்பித் தோப்புக் கரணம் போட்டாலே போதும், பிள்ளையார் வழிபாடு மிகவும் இலேசானது; வரமும் பெருமளவில் கிடைக்கும் என்பது உறுதி.

தமிழ்நாட்டிலே இருமொழிப் பெரும் புலவரான சிவஞான சுவாமிகளின் மாணாக்கர்கள் வரிசையில் கச்சி யப்பமுனிவர் கவிராட்சதர். அவர் செய்த புராணங்களின் வரிசை பெரிது. அவர் விநாயக புராணம் எனப் பெரிய அளவில் ஒரு புராணம் செய்துள்ளார். அவருக்குப் பல ஆண்டுகளுக்கு முன் வரத பண்டிதர் யாழ்ப்பாணத்தில் பிள்ளையார் கதையென்னும் மகத்துவமான நூலைச் சிறிய அளவில் பெரியவிடயங்களை அடக்கிப் பாடி யுள்ளார்.

### 60 நாள் விரதம்

விநாயகர் விரதங்களுள் அவரைக் குறித்து இருபத்தொரு நாள்கள் அநுட்டிக்கும் விரதமும் ஒன்றாகும். கார்த்திகை மாதத்து அபர பக்கம் பிரதமை நாள் முதல், மார்கழி மாதத்துப் பூர்வபக்க சஷ்டி நாள் வரையுள்ள காலம், இவ்விரத நாள்களாகும்.

இருபத்தோர் இழைகளைக் கொண்ட காப்பை ஆடவர் வலக் கையிலும், மகளிர் இடக் கையிலும் கட்டித் தம்மைக் காவல் செய்து மெய்யன்போடு அநுட்டிக்கும் விரதம் இதுவாகும்.

மாலை நேரத்தில் மங்கலகரமாக ஆலயத்தில் பூசைகள் நடைபெற்ற பின், மக்கள் பக்தியோடு இருந்து கேட்பது இப்பிள்ளையார் கதை. காப்புச் செய்யுளிற் குறித்த வண்ணம் பிள்ளையாருக்கு நைவேத்தியமாகக் கரும்பு, இளநீர், எள், தேன், அவல் முதலியனவும் இன்னும் மோதகம் முதலியனவும் அங்கே குவியல் குவியலாகப் படைக்கப்பெறுவது வழக்கம்.

### நாட்டுக்கோட்டைச் செட்டிமார்

ஒரு காலத்தில் நாட்டுக் கோட்டைச் செட்டிமார் யாழ்ப்பாணத்தில் இவ்விரதத்தை நல்ல முறையில் கொண்டாடினார்கள். யாழ்ப்பாணத்து நீராவியடியில் உள்ள பெரிய பிள்ளையார் கோயில் நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களுடைய உபயங்களிலொன்று. அவர்கள் இக்கோயிலுக்குப் பல நிலங்களைத் தருமசாசனஞ் செய்ததும் உண்டு.

பிள்ளையார் கதையில் தோத்திர ரூபமான செய்யுள்கள் முன்னும் பின்னும் உள்ளன. திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல் பெருவாக்கும் பீடும் பெருக்கும் இந்த வகையில் அடியார்களை இவ் விரதம் உருவாக்கும் எனப் புலவர் வழிபாட்டுப் பயனை முற்பகுதியிலும் பாடியுள்ளார். இறுதியிலும் நூற்பயன் கூறுமிடத்திலும் நான்கு செய்யுள்கள் நயம் படத் தந்துள்ளார். இப்பிறப்பிலே பொன்மிகும், கல்வி புகும், புத்திரச் செல்வம் முதலியன வாய்க்கும் என்றெல்லாம் வரங்களைக் கூறிய வரத பண்டிதர், இந்தப் பிறப்பிலேயன்றி, இனிமேல் வரும் பிறப்புகளிலும் வாழ்வு நல்ல பெருஞ்செல்வம் எய்திச் சிறக்கும் என்பர்.

### 500 அடிகளிலான அகவற்பா

பிள்ளையார் கதை ஏறக்குறைய 500 அடிகள் நீளமுள்ள அகவற்பாவாலானது; எதுகை மோனை நயங் கனியப் பொருள் நனிசிறக்க வந்த பாடலில் போற்றித் திருவகவல் பகுதியும் ஒன்றுண்டு. அருள் புரிந்தருளும் அரசே போற்றி என்றெடுத்து, இருவினை துடைக்கும் இறைவனைப் போற்றுகின்றது. இதனையடுத்து வரும் வருகைக் கோவை அகர வரிசையில் செய செய என வெற்றிக் கீதம் ஒலிக்கிறது.

வரதபண்டிதர் செய்த நூல்களுள் பிள்ளையார் கதையே முதலில் வந்தது எனக் கருத இடமுண்டு. அதன் சிறப்பு நோக்கி இலங்கையில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பலர் அவ்வப்போது அதனை அச்சிட்டு மலிவுப் பதிப்பாக வெளியிட்டு வந்தனர். வரதபண்டிதர் தமது பிற்காலத்தில் செய்தது குருநாத சுவாமி கிள்ளைவிடு தூது என்னும் பிரபந்தமாகும்.

இது காங்கேயன் துறையைச் சேர்ந்த கண்ணிய வளை என்னுமிடத்தில் கோயில் கொண்டருளியுள்ள முருகப் பெருமான் மீது ஆன்மீகக் காதல் கொண்ட நாயகியாகிய ஆன்மா கிளியைத் தூது விடுத்த பாவனை யிலமைந்ததாகும். இந்நூல் பக்தி பூர்வமாக அமைந் துள்ள போதிலும் நூலின் இடையிடையே பிரதேசத்தில் அக்காலத்தில் புகழ் பூத்து நிலவிய பல ஊர்களின் பெயர்களையும் வரிசையாகக் கூறுகிறது.

கிள்ளைவிடு தூது துள்ளிப்பாடும் வகையில் கலிவெண்பாவினால் இருநூற்றுப் பதினாறு கண்ணிகளைக் கொண்டமைந்துள்ளது. நாயகி பாவனையில் நனைந்த புலவர் கிளியை விளித்துப் புகழ்ந்துரைத்துத் தூது செல்வதன் பெருமையைக் கூறுமிடம் பக்தி பூர்வமானது. முன்னர்த் தியாகப் பெருமானான சிவபெருமானே சுந்தரமூர்த்தி நாயனாருக்காகத் தூது சென்றருளியதை நினைப்பூட்டுவர். இன்னும் கிருஷ்ணன், அநுமான், நளன் முதலானோர் தூது சென்ற வைபவங்களையும் கூறுவர்.

காதலுள்ள மாதொருத்திக்காகத் தூது போவதால் வரும் புண்ணியத்தைப் புலவர் குறிப்பிட்டுக் கிளியைத் தூது சென்று காதலனாகிய குருநாத சுவாமியிடம் மாலை வாங்கி வருமாறு வேண்டுவர்.

காங்கேயன் துறையை அடுத்துள்ள நெல்லிப் பழையைத் தெல்லிநகர் என்றும், அயலில் மாவை, பழை, வீமன்காமம், மயிலை வயாவிளான், வறுத்தலையூர், தையிட்டி, பலானி முதலிய ஊர்களையும் கூறுவர்.

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா பாடியருளிய குமரகுருபரசுவாமிகள். முருகப்பெருமானின் திருவவதாரச் சிறப்புரைத்த வழியிலே வரத பண்டிதரும் பாடியுள்ளார். பாண்டியனை மன்னவன், மீனவன், பாண்டியன், தென்னவன், பஞ்சவன் என்றெல்லாம் புகழ்வர். இத்தகைய புகழ் பூத்த பாண்டியன் கோவலனை ஆராயாமற் கள்வன் எனக் கருதிக் கொலைத் தண்டனை விதித்தமையை ஆற்றாத கண்ணகி மதுரையை எரித்த வைபவத்தைத் ''திரிபுரத்தைச் சுட்ட சிவன்போற் சினந்து'' எனக் கூறுவர்.

மதுரைமாநகர் எரிந்தபின் நாட்டில் எழுந்த நோய்களால் மக்கள் வருந்தக் கண்டிரங்கிய சிவன், உமை இருவரும் நேசமுடன் தம் மைந்தனுக்குக் குருநாதன் எனத் திருநாமமிட்டு முடிபுனைந்து அனுப்பியருளினர். முருகனைக் கடம்பன், குறிஞ்சி வனநாதன், சீதை மருகன், குறவர் மகள் காந்தன், சேந்தன், முருகன், அமரர் முதல்வன் என்றெல்லாம் போற்றும் புலவர், அவர் தெற்கே எழுந்தருளி வந்து, கோயிற்கடவை முதலிய பதிகளடங்கிய சூழலில் கோயில் கொண்டருளியமையைக் கூறுவர். ''அறங்கண்ணிய பெரியோர் ஆதரித்துப் போற்ற விளங்கண்ணிய வளையில் என்றும் பிறங்கணியாய் உற்றுறையும் நாதன் உலகந்தொழு நாதன், கொற்றமிகுநாதன் குருநாதன்'' என்று காதல் வயப்பட்ட புலவர் தன் ஆன்ம நாயகனுக்குத் திருநாமங்கள் சூட்டிப் போற்றுவர்.

### இரத்தினசுவர ஐயர்

தாமே ஒரு பிராமணனாதலால் கோயிற் பூசை முறைகளை நன்கறிந்தவராதலால், வரதபண்டிதர், ''பூசாரியார்கள் புனிதப் புனலாட்டி, ஆசாரஞ் சேர்த்துப்'' பூசை செய்யும் முறைகளையெல்லாம் அடுக்கடுக்காக அருமையாக ஆகம விதிகள் தவறாமல் இத்தூதுப் பிரபந்தத்தில் நுணுக்கமாகக் கூறுவதை அறியலாம். பறங்கியரால் எங்கள் பாரம்பரியம் பட்டழிந்த வேளையில் வரத பண்டிதர் வரன் முறையைக் காத்துத் தந்த பிரபந்தம் இது. இப்பிரபந்தத்தின் மிகப் பழைய பதிப்பையும், அதனைத் திருத்தித் தாம் 1921ஆம் ஆண்டிற் பதித்த பதிப்பையும் வரத பண்டிதர் மரபில் வந்த இரத்தினேசுவர ஐயர் அவர்கள் தமது இறுதிக் காலத்தில் எமக்குத் தந்துதவினார்கள்.

## அமுதாகரம் தந்த அந்தணர் பெருமான்

வரதபண்டிதர் என்றும், வரதராசகவி என்றும் வழங்கிய புலவர் பெருமான் வடமொழி, தென்மொழி நிலை கண்டுணர்ந்த வரன்முறைப் புலமையோடு ஆயுர் வேதம், சித்தவைத்தியம் ஆகிய இரு துறைகளிலும் பெரும் பாண்டித்தியம் பெற்றதோடமையாது, விஷ வைத்திய முறைகளையும் துறைபோகப் பயின்று சகலாகம பண்டிதராய் விளங்கினார். அவர் தாமறிந்த வைத்திய நுணுக்கங்களைப் பிற்சந்ததியினர் பேணிப் பாராட்டும் வகையில் நிலையான தொண்டு செய்ய நினைத்து அமுதாகரம் என்னும் அரிய மருத்துவ நூலையும் 310 விருத்தப் பாக்களில் விரிவாகச் செய்துள்ளார்.

**''ஐயமின் முந்நூற் றையிரு விருத்தம்**
**செய்ய செந்தமிழாற் றெறிந்துரை செய்தனன்**
**கங்கை மாநதிசூழ் காசி மாநகரும்**
**பங்கமில் பங்கயப் பைந்துணர் மாலையும்**
**ஆதிநான் மறைசேர் அந்தண ரானையும்**
**கோதக லோதிமக் கொடியு மிங்குடையோன்**
**கன்னியங்க முகிற் கயலினங் குதிக்கும்**
**துன்னிய வளவயற் சுன்னை நன் நாடன்''**

என்றும்,

**''அரங்கநாதன் அருளிய புதல்வன்...**
**வரம் பெறு புதல்வன் வரத பண்டிதன்''**

என்றும் பாயிரப் பாடல்கள் இவர் நூல் செய்த பெருமையைப் புகழ்ந்து கூறுகின்றன.

### மருந்துதவும் வள்ளல்

மக்களை வருத்தும் நோய்களைவிட, விடப் பூச்சிகளும் பாம்பு முதலிய பிராணிகளும் தீண்டி விடம் பாய்ச்சி உண்டாக்கும் நோய்கள் வேதனையதிகமுள்ளன என்பதோடு மரணாபத்தையும் உண்டாக்குவனவாகும். எனவே விடவைத்தியர் ஒருவரின் சேவை நாட்டுக்கு அளப்பரிய துணையாகும். இதனைக் குறித்துப் போலும் அரவு முதல் பல் விடந்தீர்க்கும் மருந்து பல சாற்றல் உற்றேன் எனப் புலவனார் பாடியுதவினார்.

**''பொங்கரவக் கடலு லகோர் புகழமுதா**
**கரம் எனப்போர் புனைந்து சீற்றத்**
**தங்கரவு முதலிய பல்விடந் தீர்க்கும்**
**மருந்துபல சாற்ற லுற்றேன்''**

### அமுதாகரத்தின் அருமை கூறும் பாயிரச் செய்யுள்

நமக்கு விடமூட்டும் உயிரினங்களுள், பல்வேறு பாம்புகள், பூச்சிகள், குளவிகள், பூனை, எலி, அரணை, புலிமுகச் சிலந்தி முதலியனவின் விவரமும் அவற்றுக்

கொ...ம் உடனுக்குடன் உபயோகிக்க வேண்டிய மருந்து வகைகள், பூச்சுக்கள், நசியம், ஒத்தணம் முதலியவை யாவும் பொருத்தமாகக் கூறப்பெற்றுள்ளன.

''பார்மலி துத்திப் படவிட நாகம்
மண்டலி புடையன் வளர்கரு வளலை
எண்டரும் பணிகள் இவைமுதல் எவைக்கும்
அருந்திரு மருந்தோடு அஞ்சனம் குடோரி
பொருந்திய நசியம் பூச்சொடு துவாலை
முறுக்கிடு மருந்துகள் முறைமுறை துவைத்து
அறுத்தெடுத்து ஒற்றும் மருந்துகள் பலவும்
தேளொடு புலிமுகச் சிலந்தி செவ்வட்டை
தாழ்விலா அறணை தருநஞ்சுப்பல்லி
கண்டறி வாளை கடியன் காணாக்கடி
மண்டுகம் பொல்லா வலியுடைக் குளவி
புலிகடி நாய்கடி பூனைக் கடியுடன்
எலிகடி முதலா வியம்பிய எவைக்கும்
மருந்துடன் எண்ணெய் தூள்வகை பலவொற்றுத்
திருந்துள வஞ்சினம் சிறந்திடு நசியம்''

இத்தகைய வைத்தியப் பெருநூலை முதலில் ஆராய்ந்து வெளியிட்ட பெருமை கிழக்கிலங்கைத் திருகோணமலைத் தம்பையா பிள்ளை அவர்களுக்கே உரியது. அவர் இதனை 1892 ஆம் ஆண்டில் அச்சேற்றியுள்ளமை பெருவிருந்தாகும். இதனை இனிப்பல்கலைக் கழகத்தார் பயன்படுத்திப் பதித்துப் பரப்புதல் கடனாகும். சித்த வைத்தியத் துறை மெத்த புகழ் பெற்ற யாழ்ப்பாணத்தில் பரம்பரையாகப் பணி செய்த மரபினர் பலரிருந்தார்கள். அவர்களின் ஏடுகளைப் பல்கலைக் கழகத்தார். சேகரித்துக் கொள்வதில் காட்டி வரும் ஆர்வம் பாராட்டற்பாலது.

### ஈழத்து வைத்திய நூல் மரபுச் சிறப்பு

ஈழவள நாட்டவரின் உபகரிப்புகள் என்று எண்ணிப் பெருமைப்படக்கூடிய வகையில் முந்தையோர் தந்த செகராசசேகரம், பரராசசேகரம் ஆகிய வைத்தியப் பெருநூல்கள் காலத்தில் முந்தியனவாயினும் அவற்றைவிட வைத்திய முறைகளைப்பற்றி விரித்துக் கூறவில்லை. அந்தக் குறையைப் போக்குவதற்கு வந்தது சித்தர் ஆரூடம் என்னும் செவ்விய நூலாகும். சித்தராரூடத்தை முதல் நூலாகக் கொண்டெழுந்ததே அமுதாகரம் என்னும் அருமருந்தனைய நூல்.

பாம்பு, சிலந்தி முதலிய விடப் பிராணிகள் தீண்டினால் உண்டாகும் நோயின் குணங்கள் குறிகளை அமுதாகரம் கூறுகின்றதென்பதை ''ஊரும் உரகஞ் சிலந்தி தீண்டினால் வந்துறு குணப் பண்புரைத்து'' அதற்கு மருந்துகள் கூறுவதாகும் என்று நூல் பாடுகிறது.

அமுதாகரம் எழுந்த காலத்தை யடுத்து யாழ்ப்பாணத்தில் சித்த வைத்தியத்துறை நன்றாகப் பரவி நிலவியது என்று கருதுவதற்குப் போதிய சான்றுகள் உண்டு. அந்த வகையில் பருத்தித் துறை, அச்சுவேலி, நல்லூர், திருநெல்வேலி, குளப்பிட்டி, கந்தர் மடம், வண்ணார் பண்ணை, சில்லாலை முதலிய இடங்களில் பரம்பரை பரம்பரையாகச் சித்தவைத்தியர்கள் கண்டியரசனறியவும் தமிழ்நாட்டில் தஞ்சாவூர் அரசனறியவும் வைத்தியஞ்செய்தனர். தமிழ் வைத்தியம் எனப் புகழ்பெற்ற சித்தவைத்தியத்தில் குடிநீர் வகைகள், செந்தூர வகைகள், குளிகை வகைகள், மாத்திரை, கட்டு முதலியன யாவும் நோயை நீக்க வல்லனவாயிருந்தன. அன்று நான்கு தலைமுறைகளுக்கு முன்னர்ப் புகழ் பூத்த வைத்தியர்கள் தயாரித்த மருந்துகள் இன்றும் இளைய தலைமுறையினருக்குப் பயன் செய்கின்றன என்பது பிரமிப்புக்குரிய செய்தியாகும். யாழ்ப்பாணத்துச் சித்த வைத்தியர்கள் தயாரித்த மாத்திரைகள், எண்ணெய்கள் சக்தி வாய்ந்தவை.

சாதாரண மூலிகைகளின் அற்புதமான குண மகிமைகளை அவர்கள் இரகசியமாக அறிந்து அவற்றின் பெயர்களையே தமக்கு மாத்திரம் விளங்கும் வகையில் குழூஉக்குறியாக மாற்றி உபயோகித்து வந்தனர். ✱

(தொடரும்)

## அழகப்பா பள்ளி மாணவர்களின் சிங்கப்பூர் கல்விப் பயணம்

சென்னையில் உள்ள அழகப்பா பள்ளி மாணவர்கள் 15 பேரும் ஆசிரியைகள் 5 பேரும், உலகத் தமிழர் மையத்தின் பொதுச் செயலாளரும் படைப்பாக்கத் திட்டத்தின் தமிழக ஒருங்கிணைப்பாளருமான உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன் தலைமையில் செப்டம்பர் 21 இல் சிங்கப்பூருக்குக் கல்விப் பயணம் மேற்கொள்கின்றனர்.

சிங்கப்பூர் கல்வி அமைச்சின் ஆதரவில் நியூ டவுன் தொடக்கப்பள்ளி முதல்வர் திருதி லில்லி ஆங், அழகப்பா பள்ளி முதல்வர் திருமதி சீதாலட்சுமி ஆகியோர் கையொப்பமிட்ட மூவாண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாணவர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இவர்கள் சிங்கப்பூரில் பல பள்ளிகளையும், தமிழ் முரசு நாளிதழ் அலுவலகம், அறிவியல் மையம், ஜூரோங் பறவைகள் சரணாலயம், சிங்கப்பூர் விலங்கியல் கூடம், செந்தோசா தீவு முதலானவற்றைப் பார்வையிடுகின்றனர்.

சிங்கப்பூர் பள்ளிகளில் நிலவும் கற்றல், கற்பித்தல், பாடத் திட்டம், பயிற்று கருவிகள் முதலான கல்விச் சூழலை நேரடியாகத் தெரிந்து கொள்ளுவதோடு, அங்குள்ள தமிழ்க் கலை கலாச்சாரப் பண்பாட்டு நிலைகளையும் அறிந்துகொள்ளுவார்கள்.

மாணவர்களே உருவாக்கியும் நடித்தும் காட்டவிருக்கின்ற நாடகங்களும் நடைபெறுகின்றன. இவ்விரு பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவியர் களால் எழுதப்பெற்ற கதைகளைக் கொண்ட இரு நாட்டுக் கதைகள் (Tales from 2 cities) என்னும் இரு மொழி நூலும் சிங்கப்பூரில் வெளியிடப்படும். இதனை உலகத் தமிழர் பதிப்பகம் பதிப்பித்துள்ளது.

திட்ட இயக்குநர் சாந்தி, முதுநிலை ஆசிரியர் மருது ஆகியோர் இவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்.

# வித்துவான் வேலன் இலக்கிய வட்டம் ஆற்றிவரும் பணிகள்

**ஐ.தி. சம்பந்தன்**

சைவ முன்னேற்றச் சங்க (பிரித்தானிய) மண்டபத்தில் 22-07-07 அன்று நடைபெற்ற வித்து வான் இலக்கிய வட்டம் மாதாந்த இலக்கியக் கூட்டத்தில் முதற் தடவையாகப் பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

மலேசியாவில் வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழர் கள் 125 ஆண்டுகளாக ஆற்றிய பணிகள், சாதனைகள், உலக அரங்கில் நிலைநாட்டிய சாதனைகள் அடங்கிய **"Legacy of pioneers of 125 years of Jaffna Tamils in Malaysia"** என்ற நூல் பற்றி அறிமுகம் செய்வதற்காகத் தலைவர் திரு. சிறிக்கந்தராசா அவர்களின் அழைப்பின் பேரில் பங்குபற்றினேன். அன்றைய கூட்டத்தில் நல்லை ஆதீனம் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கு பற்றியிருந்தார்.

அன்று ஒரு நல்ல விடயம் அங்குக் கலந்துரை யாடப்பட்டது. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரங்களில் பொதிந்துள்ள இலக்கிய வாசனை பற்றி நல்ல கருத்துகள் பரிமாறப்பட்டன. திரு. வ.இ. இராம நாதன் அவர்கள் திருஞானசம்பந்தர் பாடல் தொடர்பாக விரிவான ஆய்வுரை நிகழ்த்தினார். தலைமை தாங்கிய தமிழறிஞர் திரு. சிறீக்கந்தராசா அவர்கள் பல புதிய கருத்துகளை முன்வைத்தார். தேவாரம் தமிழ்ச் சொல் இல்லையென திரு. சிறீக்கந்தராசா அவர்கள் கூறியதற்குத் திரு. திருமலைபாலா அவர்கள் கேட்டார்கள். இந்தச் சர்ச்சையைச் சாதுரியமாகச் சமாளித்துக் கொண்டார்.

திரு. சிறீக்கந்தராசா அவர்கள் திருஞான சம்பந்த நாயனார் பல தெய்வீகப் பாசுரங்களைப் பாடியிருந் தாலும் அவற்றில் இலக்கிய வாசனை மிகுந்து காணப் படுவதை அங்குக் கருத்து வழங்கிய அறிஞர்கள் தெளிவுபடுத்தியிருந்தனர்.

வித்துவான் வேலன் அவர்களின் பெயரால் மாதம்தோறும் நடைபெற்றுவரும் இலக்கியச் சந்திப்பு தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பயனுள்ளதாக இருந்து வருகிறது. மறைந்த தமிழ்ப் பேரறிஞர் வித்துவான் வேலன் அவர்கள் பலதுறை அறிஞர். தமிழ் இலக்கியத் துறையில் பெரும் பணியாற்றியவர். தமிழீழத்தில் நீண்டகாலம் ஆற்றிய தமிழ்ப்பணிகளை இலண்டன் வந்தபின்னரும் தொடர்ந்து மேற்கொண்டுவந்தவர். பேச்சாலும் எழுத்தாலும் தமிழை வளர்த்தவர். பல நூல்களை ஆக்கியதன் மூலம் எதிர்காலச் சமுதாயம் பயனடைய வழிசெய்தவர்.

அவர் விட்டுச் சென்ற தமிழ்ப் பணிகள் எதிர் காலத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் வித்துவான் இலக்கிய வட்டம் செயலாற்றி வருகிறது. இவ்வாறான பணிகளை மேற்கொள்வதற்குத் தமிழ் உணர்வுமிக்க மகள் இசையரசி மாலினியும் தமிழறிஞ ராகிய மருமகன் சிறீக்கந்தராசா ஆகிய இருவரும் அவருக்குக் கிடைத்த சொத்தாகும். பிள்ளைகளோ மருமக்களோ தந்தையினதும் மாமனாரதும் நற்பணிகளைத் தொடர்வது அரிது. ஆனால் அவர்கள் இருவரும் விதி விலக்காகச் செயற்பட்டு வருகிறார்கள். ஏனையோருக் கும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

வித்துவான் வேலன் அவர்கள் மறைந்தாலும் அவரின் தமிழ்ப் பணிகள் தொடர்கின்றன.

பிரித்தானிய நாட்டிலே சைவத்தை வளர்ப்பதற் காகப் பல ஆலயங்கள் தோற்றம் பெற்றுள்ளன. ஆனால், அவ்வாலயங்களால் சமய அறிவு ஊட்டப்படுகிறதா என்பது கேள்விக்குறி.

ஆனால் புலம்பெயர் தமிழர்களிடையே தமிழர் களுக்குக் கிடைத்துள்ள அரும்பெரும் பொக்கிஷங் களாக விளங்கும் தமிழ் இலக்கியங்களின் அறிவையும் உணர்வையும் வளர்ப்பதற்கு வித்துவான் வேலன் இலக்கிய மன்றம் ஆற்றிவரும் பணிகள் பாராட்டத் தக்கது.

*

## புன்னகைத்த இசை

**நவஜோதி ஜோகரட்னம், இலண்டன்**

**புலம் பெயர் வாழ்வில்**
**தமிழ் இசை கலந்த**
**கலை விழா இன்று - வளர்**
**கலைஞரை அணைத்து - பெரும்**
**கலைஞனைத் தோற்றுவிக்க... அரும்பணி செய்து**
**பிரமிக்க வைத்த பிரமானந்தாவே! உம்**
**பாடலை இழந்த நாதங்கள் இன்று**
**முகாரியுள் இசைக்கிறது...**
**நாகேஸ்வரியே அம்மா!**
**நீங்கள் தந்த கலை அறிவை...**
**பரிணமித்த கோலங்களை...**
**புன்னகைத்த இசையை...**
**என்றும் எம்முள் சுமப்போம்!**
**சென்று வாருங்கள் அம்மா!**

# ஈழத்து நாடகமேதை வைரமுத்து

- கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை

## வாழ்க்கை வரலாறு (16)

*கையசைவும் காலசைவும் கானமுடன் போயிசையும்*
*மெய்யசையும் மோடி விளங்கும் படிஇயைத்த*
*சைகைவழிப் பாணித் தரத்தை மறப்போமோ!*
*வைரமுத்து எங்கள் மனத்தைவிட்டுப் போகாதே.*

**- முருகையன்**

### இயல் பதினாறு
### பக்கவாத்தியமும் பக்கப்பாட்டும்

**நா**டக ஆரம்பத்தில் நடிகர்கள் காப்புப் பாடலைப் பாடுவர். இக்கடவுள் வணக்கப் பாடல் பெரும்பாலும் நாட்டை ராகத்தில் அல்லது ஹம்சத்துவனி ராகத்தில் பாடப்படும். இப்பாடலுடன் நாடக ஆரம்பம் சபையில் ஒரு கலகலப்பை ஏற்படுத்தும்.

ஒரு சங்கீதக் கச்சேரியைச் சிறப்புடன் செய்து முடிக்க வேண்டுமாயின், பாடவேண்டிய உருப்படிகளை அழகாக ஒழுங்குபடுத்தி வைத்திருக்க வேண்டும். கச்சேரி ஒவ்வொரு பாடலின் முடிவுடனும் உச்ச கட்டத்தை அடைந்து, பின்னர் அழகாக நிறைவு பெற வேண்டும். ஓர் இசை நாடகத்தின் வெற்றியும் இத்தகைய அமைப்பிலேயே தங்கியுள்ளது. அதாவது, ஆரம்பப் பாடல் தொடக்கம் மங்களம் பாடும் வரை பாடப்படும் பாடல்கள் அனைத்தும் சிறப்புற ஓர் ஒழுங்கில் வரிசைப்படுத்தப் படல் வேண்டும். இச்சம்பிரதாயத்தை நாடகத்திற்கும் அமைத்து வெற்றியீட்டிய பெருமை வைரமுத்து ஒருவரையே சாரும். இந்த அமைப்பை மீறி யாரும் அவருடைய நாடகத்தில் பாட முடியாது. அந்த வகையில் இவர் மிகவும் கண்டிப்பானவர்.

அந்தக் காலத்தில் ஆரம்பப் பாடல் முடிந்ததும், முன்திரை நீக்கப்படும். மேடையின் இருபுறமும் இரு ஆர்மோனிய வித்துவான்களும், இரு மிருதங்க வித்துவான்களும் காணப்படுவர். இவர்கள் சபை யோரின் கண்களில் தென்படும்படியாகவே இருப்பர். அப்பொழுது, பபூன் (Baboon) அல்லது கோமாளி என்பவன் தோன்றித் தாம் நடிக்கப்போகும் நாடகம் இதுவெனவும் இதில் வரும் சொற்குற்றம், பொருட் குற்றம் ஏதுமிருந்தால் சிறு குழந்தைகளாகத் தம்மை எண்ணி மன்னிக்கும்படியும் கேட்டுக் கொள்வான். பின்னர் ஏதாவது அர்த்தமற்ற நகைச்சுவைத் துணுக்கு களைச் சொல்லிச் சபையோரைச் சிரிக்க வைக்க முயல்வான்.

கோமாளி போனபின்னர், ஆர்மோனிய வித்து வான்கள் ஏதாவது கீர்த்தனைகளைப் பாடித் தங்களது வித்துவத் தன்மையைக் காட்டத் தொடங்குவர். இதன் பின்னரே கதாநாயகன் அல்லது கதாநாயகி மேடைக்கு வருவதற்கு அறிகுறியாக ராகம் பாடத் தொடங்குவர். பின்னர்த் தொகையறா பாடுவர். தொகையறா என்பது ஒரு பாடலின் முன்னர் விருத்தமாக, அதாவது தாள மின்றிப் பாடுவதற்கென அமைந்த பகுதியாகும். தொகையறா முடிந்ததும் பிரவேசதருவைப் பாடி மேடையில் தோன்றுவர். பக்கவாத்தியக்காரர்களும் அதற் கேற்ப அழுத்தம் கொடுத்து வாசிப்பர். தேவையேற் படும்போது தாமும் சேர்ந்து பாடுவர்.

பல்லவியைப் பலமுறை பாடும்போதும், ஒவ்வொரு பல்லவிக்கும் கற்பனைச் சங்கதிகளை அபாரமாக அள்ளி யிறைப்பர். அப்போது ஒவ்வொரு சங்கதியிலும் சாஸ்த் திரோக்தமான கமகப் பிரயோகங்களும், மந்த்தர, மத்திம, தாரஸ்தாயி, கற்பனாஸ்வரப் பிரயோகங்களும் பிர யோகிப்பர். இவ்வாறு பிரயோகிக்கும் போது ராக ரஸ பாத்திர பாவ பொருத்தமான இசைபிறக்க, இரசிகர்கள் மெய்ம் மறந்து கேட்டிருப்பர். சுருக்கமாகச் சொல்வதா னால், இது நின்றபடி செய்கின்ற ஆர்மோனியத் துணை யுடன் கூடிய ஓர் இசைக் கச்சேரியாகவே இருக்கும்.

எஸ்.ஜி. கிட்டப்பா பாகவதர், எம்.கே. தியாக ராஜ பாகவதர், பி.யூ. சின்னப்பா, கே.பி. சுந்தராம்பாள், செந்திவேல் தேசிகர், கைவெட்டு சுந்தரம் பிள்ளை, கிருஷ்ணாழ்வார், அச்சுவேலி இரத்தினம், கன்னிகா பரமேஸ்வரி, ரி.பி. இராமலட்சுமி ஆகியோரும் இப்படித் தான் பாடி நடித்து இசை நாடக மேடைக்குப் பெருமை சேர்த்தனர். இவர்களைப் போலப் பாடுவதில் எந்த வகையிலும் குறைந்தவரல்லர் வி.வி. வைரமுத்து. தொடக்க காலத்தில் இவரும் இவ்வாறுதான் பாடி நடித்தார். ஆனால் 1953 ஆம் ஆண்டின் பின்னர் இம் மரபை மாற்றியமைக்கத் தொடங்கிவிட்டார். இதனை இவர் படிப்படியாகவே மாற்றியமைத்தார் என்பதை இவரது வாயிலாகவே அறிய முடிகிறது.

பக்கவாத்தியக்காரர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் நாடக ஓட்டம் தடைப்படுவதுடன், நாடகத் தன்மையும் அற்றுப்போய் விடுகிறது. அதனால் வெறும் இசை மட்டும் மேடையில் ஆட்சி புரியக் காணலாம். ஆகவே அரங்கின் ஓரத்தில், பார்ப் போருக்குத் தெரியாதவாறு பக்கவாத்தியக்காரர்கள் இருக்கத் தக்கதாக வைரமுத்து ஏற்பாடு செய்தார். இதனால் கலைஞர்கள் அரங்க நிகழ்ச்சியை மட்டும் பார்க்கக்

கூடியதான வசதி ஏற்பட்டது. எனவே வைரமுத்து செய்த இந்த மாற்றம் இசை நாடகத்துக்கு ஒரு புதுப் பொலிவையும், புதிய பரிமாணத்தையும் தந்தது.

## நாடகத் தொடக்கம்

நாடகம் தொடங்குவதற்குமுன் கடவுள் வாழ்த்துப் பாடல் பாடப்படும். இப்பாடல் பாடி முடிந்தவுடன் வேறு நிகழ்ச்சிகளின்றி உடனடியாகவே நாடகம் தொடங்கும் மரபையும் இவரே ஆரம்பித்து வைத்தார். நடிகர் மேடையில் தோன்றுவதற்கு முன், திரைக்குப் பின்னால் நின்றபடி ராகம் பாடிப் பின்னர் பல்லவியையும் பாடி முடித்ததும் மேடைக்குவரும் வழக்கத்தையும் பூரணமாக நிறுத்தியவர் இவரேயாவர். எம்.ஆர். கோவிந்தசாமிப்பிள்ளை வரவுப்பாடல் பாடும் பொழுதுதான், அவருக்கு ஒப்பனை செய்வதுண்டு எனச் சொல்லப்படுகிறது. (தகவல் எஸ். வேணுகோபால்)

அக்காலத்தில், சில சமயம், நடிகர் பாடும் வரவுப் பாடலுக்கும் அவரேற்ற பாத்திரத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதில்லை. ஒரு சமயம் இராவணனாக நடித்த நடிகர் ''தசரதராஜகுமாரா'' என்ற பாடலைப் பாடிய வண்ணம் மேடைக்கு வந்தாராமெனச் சொல்லக் கேட்டிருக்கிறேன். (தகவல் வி.வி. வைரமுத்து) இத்தகைய பொருத்தமற்ற நாடக நிகழ்ச்சிகளை நீக்கிய பெருமையும் இவரையே சாரும்.

## நகைச்சுவைக் காட்சி

நகைச்சுவைப் பகுதியை நாடகத்தோடு ஒட்டியே இடம் பெறத்தக்கதாக இவர் அமைத்தார். எனவே கோமாளி அல்லது பபூன் எனும் தனிப்பாத்திரம் இவரது நாடகத்தில் இல்லாதொழிந்தது.

காட்சி மாற்றங்கள் இவரது நாடகங்களில் உடனுக்குடன் இடம் பெற்ற காரணத்தால், பக்க வாத்தியக்காரர்கள் இடையிடையே பாடி நாடகத்தின் ஓட்டத்தைக் குறைக்கின்ற குறைபாடும் நீக்கப்பட்டது. நாடக ஓட்டத்திற்கும் பாத்திரங்களின் மனோபாவம், சூழல் என்பனவற்றிற்குமேற்பவே பக்கவாத்தியங்கள் இசைக்கப்படல் வேண்டும் என்பதையும், சிறப்புற நெறிப்படுத்தியிருந்தார். எல்லா இசைக் கருவிகளையும் கையாளுந்திறன் இவருக்கிருந்த காரணத்தால் இது சாத்தியமாயிற்று.

நடிகர்கள் பாடியதும் பக்கப் பாட்டுக்காரர்கள் தொடர்ந்து பாடும் வழக்கம் முன்னர் இருந்தது. நடிகரே சொந்தமாகப் பாட வேண்டும் என்பதிலும், பக்கப் பாட்டுக்காரர்கள் பாடி உதவக்கூடாதென்பதிலும் இவர் மிகுந்த கவனஞ் செலுத்தினார். பக்கவாத்தியக்காரர்கள் பாடி உதவுவதாக இருந்தால் பாத்திரத்தின் இயல்பு கெட்டுவிடும் என்பதை வைரமுத்து நன்றாக உணர்ந்திருந்தார். எனவே, பாடல்களை நடிகர்கள் பாட அதற்கேற்பப் பக்க வாத்தியக்காரர்கள் இசைக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

ஒரு நாடகத்தின் வெற்றிக்கு இத்தகைய விதிமுறைகள் இன்றியமையாதன என்பதை அனுபவ வாயிலாக வெளிப்படுத்தியவர் வைரமுத்து என்பதை மறுக்கவியலாது.


ஒத்திகை, நாடகத்தின் வெற்றிக்கு இன்றியமையாதது. தொழில் முறை நடிகர்களாக இருந்தாலும்கூட, அடிக்கடி ஒத்திகை பார்த்து நடிப்பது அவசியமாகும். ஒத்திகையை எப்பொழுதும் இவர் பக்கவாத்தியங்களுடனேயே நடத்தி வந்தார். இதை வைரமுத்து கடைசி வரைக்கும் கடைப்பிடித்து வந்தார்.

ஒரு நாடகத்தின் வெற்றிக்குச் சிறந்த எழுத்துரு மட்டும் இருந்தால் போதாது, நல்ல தயாரிப்பாளரும், நெறிப்படுத்துநரும் அவசியம்.


அதேபோல் பாத்திரங்களுக்கேற்பப் பொருத்தமான நடிகர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி கொடுப்பதும் இன்றியமையாததாகும். இதில் வைரமுத்து மிகவும் கவனஞ் செலுத்தினார். சாரீர வளமும் ஓரளவு நடிப்பாற்றலுமுடையவர்களை இனங்கண்டு பிடித்துத் தனது அயராத முயற்சியினால் முழுமையான நடிகர்களாக்கிய பெருமையும் இவருக்குண்டு. மயான காண்டத்தின் வெற்றிக்குப் பொருத்தமான நடிகர்களைத் தேர்ந்தெடுத்தமையும் ஒரு காரணமாகும். பொருத்தமான பக்கவாத்தியக்காரர்களை வைத்திருந்தமையும் இவரின் வெற்றிக்கு இன்னொரு காரணமாகும்.

''நடிப்பின் இலக்கணங்களை நன்கு புரிந்தவராக வைரமுத்து இருந்தார். தன்னுள் பாத்திரத்தைச் சங்கமமாக்காது பாத்திரத்துள் தன்னைச் சங்கமமாக்கிக் கொண்டார். இதனால் அவர் ஏற்று நடித்த கதாபாத்திரங்கள் எல்லாம் தம் குணவியல்புகள் குன்றாத தனித்தன்மை வாய்ந்த பாத்திரங்களாக மேடையில் இயங்கின'' எனும் நாடகக் கலைஞர் நா. சுந்தரலிங்கத்தின் கூற்று மிகவும் பொருத்தமானதேயாகும். ❋

*(தொடரும்)*




மலேசிய சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கமும் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானமும் இணைந்து நடத்திய விழாவில் தவத்திரு. ஊரன் அடிகள் உரை நிகழ்த்துகிறார். ஏற்பாட்டாளரும் எழுத்தாளருமான திருமதி. க. பாக்கியம் உடனுள்ளார். இவ்விழாவில் பங்கேற்க ஆசிரியர் ஐ.தி. சம்பந்தன் அவர்களுக்கு பாக்கியம் அழைப்பு விடுத்திருந்தார்.



தவயோகி மலேசியா சுங்கை பட்டாணி ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் தங்கராசா அடிகளார், டத்தோ சரவணன், திருமதி. க. பாக்கியம், பொதிகைச் செல்வி சரோஜினி மற்றும் ஜீ.எம். சுப்பா ஆகியோர்.

நூல் நயவுரை

# பிரித்தானியாவும் ஈழத்தமிழரும்



**கே. இலட்சுமணன்,** தொழிலதிபர், கோவை அன்னபூர்ணா உணவக முகாமையாளர்

''**உ**லக அறிவு இல்லாமல், திசைகளைப் பற்றிய தெளிவு இல்லாமல் மனிதன் பயணப்படுவது கடினம். எந்த ஓர் அறிஞனும் பூரண அறிவோடு திகழ முடியாது. ஆனால், தேவைப்படுகிற அறிவை அவன் தேடித்தேடி அறிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. அந்த வாய்ப்பைப் பிரிட்டானிக்கா வழங்குகிறது''.

ஆனந்த விகடன் வெளியிட்டிருக்கும் பிரிட்டானிக்கா தகவல் களஞ்சியம் பற்றிய தமது கருத்துக் கணிப்பில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் இவ்வாறு கூறியிருக்கிறார்கள். (ஆனந்த விகடன் ஜூன் 20, 2007)

இன்று நம் மக்களில் அனேகர் வெளிநாடுகளைச் சுற்றிப் பார்க்கும் ஆவலில் இருப்பது தெரிகிறது. இவர்களுக்கெல்லாம் கவிப்பேரரசு கூறியிருப்பது சாலப் பொருத்தமானதே.

மிகச் சமீபத்தில் எனக்கு இலண்டனிலிருந்து ''பிரித்தானியாவும் ஈழத்தமிழரும்'' என்னும் ஒரு புத்தகம் அனுப்பப்பட்டிருந்தது. ஹோட்டல் தொழிலில் நான் இருப்பதால் இப்புத்தகம் எனக்கும் மற்றவர்களுக்கும் உதவியாக இருக்குமென நினைத்து இப்புத்தகம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கலாம் என நினைக்கிறேன்.

புத்தகத்தை எழுதியவரும் அனுப்பிவைத்தவரும் எனக்கு நீண்டகால நண்பர் பிரபல எழுத்தாளர் பொன் பாலசுந்தரம் அவர்கள்தாம் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன்.

பிரித்தானியா செல்பவர்கள் அங்குப் புறப்படுவதற்கு முன்னர் இப்புத்தகத்தைப் படித்துவிட்டுச் செல்வார்களானால் இலண்டன் வாழ்க்கையைப் பற்றிய எல்லா விடயங்களையும் அறிந்து கொள்ளலாம். பெரும் செலவில் மேற்கொள்ளப்படும் பயணம் சிரமமில்லாமல் அமைந்துவிடும். இலண்டனைப் பற்றிய சகல விடயங்களையும் இலகு தமிழில் தந்திருக்கிறார். இரத்தினச் சுருக்கமான தனித்தனிக் குறிப்புகள் புகைப்படங்கள் சகிதம் மனங்களில் பதியும்படி எழுதப்பட்டிருக்கிறது.



**உலக அறிவில்லாமல் பயணப்படுவது கடினம் என்கிறார் கவிஞர் வைரமுத்து**

## இலண்டன் வாழ்க்கையை அறிய படிக்க வேண்டிய புத்தகம்

இன்றைய மகாராணி அவர்கள் பதவி ஏற்றபோது தம்மை மக்களுக்கு அர்ப்பணித்ததைப் படிக்கும் போது இன்றைய அரசியல்வாதிகளும் தம்மை இப்படி அர்ப்பணித்தால் நாட்டுக்கும், நமக்கும் நன்றாக இருக்குமல்லவா என்ற ஏக்கம் உள்ளத்தைக் கிள்ளுகிறது.

பிரித்தானியாவின் பெருமைமிகு சரித்திரம் மிக விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பழக்க வழக்கங்கள் ஒவ்வொன்றும் விளக்கமாக இருப்பதால் அங்குச் செல்பவர்களுக்கு அது பல கஷ்டங்களிலிருந்தும் விடுபட வாய்ப்பளிப்பதாக உள்ளது. எமது நாட்டிலிருந்து ஏராளமான இளைஞர்கள் வேலை வாய்ப்புத் தேடியும், கல்வி கற்கவும் இலண்டன் (பிரித்தானியா) செல்கிறார்கள். அப்படிச் செல்பவர்கள் இப்படியான விடயங்களை முன்கூட்டியே அறிந்து கொண்டால் நல்லதல்லவா. அதற்கு இப்புத்தகம் பக்க பலமாக இருக்கிறது.

தேம்ஸ் நதியின் வனப்பும், நாட்டின் வளத்தோடு அது சங்கமித்திருப்பதும் பற்றிய விவரங்களைப் படிக்கும்போது மூக்கைத் துளைக்கும் நமது கூவத்தின் துர்நாற்றம்தான் நினைவுக்கு வருகிறது. தேம்சில் கப்பல்களும், உல்லாசப் படகுகளும், சொகுசுப் படகுகளும் இரவு பகலாகச் சென்று கொண்டிருக்கிற செய்தி செல்வத்தைப் பெருக்கி மனத்தைக் குளிர வைக்கிறது. இங்கு மிதந்துகொண்டிருக்கும் சொகுசான உல்லாசப் படகுகளில் திருமணங்கள் நடைபெறுகிறதென்னும் செய்தி மகிழ்ச்சி தருகிறது. இப்படியான படகுகள் கூவத்திலும் மிதந்து சென்று அவற்றில் திருமணங்கள் நடை பெற்றால் எப்படி இருக்கும்? உல்லாசப் படகுகள் இரவு பகலாக ஓடிக் கொண்டிருந்தால் நாடே கலகலப்பாகிவிடாதா? இது பற்றிச் சிந்தித்துச்



செயல்பட முடியாதா? இப்படி எல்லாம் சிந்திக்க வைக்கிறது பொன் பாலசுந்தரம் அவர் களுடைய புத்தகம்.

பிரித்தானியாவின் நான்கு பருவங்கள் பற்றி நூலில் விளக்கப்பட்டிருக்கிறது. மிகக் கடுமையான குளிர் காலத்தில் இலண்டனுக்கு வந்தால் எதிர்கொள்ள வேண்டிய கஷ்டங்கள் பற்றிய எச்சரிக்கைக் குறிப்பு களையும் பார்த்தேன். ''18 மணிநேரம் இரவாக இருக்கும் குளிர் காலத்தில் இங்கு வந்தால் உங்கள் பிரயாணம் சூன்யமாகிவிடும்'' என்ற எச்சரிக்கை பயணச் செலவில் செல்பவர்களுக்கு ஒரு புத்திமதியாகும்.

இலண்டனுக்கு வருபவர்கள் ஆங்கிலம் தெரி யாதவர்களாக இருந்தாலும் சமாளிக்கலாம் என்றும், அங்கு 307 மொழிகள் பேசப்படுவதாகவும், அதனால் அங்கு 307 இனத்தவர்கள் இருப்பதாகவும் தகவல் தரப் பட்டுள்ளது. ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண் டிருக்கும் ஒரு நாட்டில் இவ்வளவு மொழிகளும் உலா வருவது ஆச்சரியமாக இருக்கிறது.

நாட்டின் தேசியக் கொடியை எவரும் தாம் விரும்பியபடி உபயோகிக்கலாம் என்பதையும் அதனால் அக்கொடி மார்பு, இடைக்கச்சைகளிலும், அவற்றை விடக் காலணிகளிலும் உபயோகிக்கப்படுகிறது என்பதை யும் படித்து அதிர்ச்சி அடைந்து போனேன். தேசியக் கொடி ஆபாசக் கட்டங்களில் பயன்படுத்தப்படுவது வேதனை தருகிறது. இதையும் அளவு கடந்த சுதந்திரம் என்கிறார்கள்!

சிரேட்ட குடிமகன்களுக்கான சலுகைகள் பிரித் தானியர்களின் கருணை உள்ளத்தைக் காட்டுகிறது. குழந்தைகளை வளர்க்க அரசாங்கம் மாதா மாதம் படி அளக்கிறதென்பது நல்ல விடயமே. இப்படி இன்னும் ''பாதை தடுமாறவைக்கும் போதையில் குஞ்சுகள்'' என்ற தலைப்பில் இளைய தலைமுறையினர் சீரழிந்து வருவதும் படிக்க வேண்டிய விடயங்களாக உள்ளன.

எமது சமையலுக்குத் தேவைப்படும் அவ்வளவு காய்கறிகளும் இலண்டனில் கிடைக்கிறதென்பதை அறிய ஆச்சரியமாக இருக்கிறது. ''மல்லித் தழையா? மரவள்ளிக் கிழங்கா?'' என்ற தலைப்பில் அழகாக விவரங்களைத் தந்திருப்பது இலண்டனுக்கு விஜயம் செய்து இவற்றை எல்லாம் பார்த்து மகிழ மனங்களைத் தூண்டுவதாக உள்ளது.

தமது நாட்டுக்கு வருபவர்களுக்கு ஆறு மாதங் களுக்கு விசா வழங்கும் ஒரே ஒரு உலக நாடு பிரித் தானியாதான் என்பதை அறியத் தந்திருப்பது பலருக்குத் தெரியாத ஒன்று. இப்படிப் பல தெரியாத விடயங் களைப் பாலசுந்தரம் தமது புத்தகத்தில் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

''பிரித்தானியாவும் ஈழத் தமிழரும்'' எனப் புத்தகத்திற்குத் தலைப்புத் தரப்பட்டிருந்தாலும் பொது வில் எல்லா நாட்டவர்களும் படிக்கவேண்டிய புத்தகம் இதுவாகும். ❋

## வெற்றிகரமாக நடைபெற்ற கானக்குயில் பதினைந்தாவது ஆண்டு நிகழ்வு



கடந்த யூன் 30ஆம் திகதி இலண்டன் பல்கலைக்கழக லோகன் மண்டபத்தில் கானக்குயில் போட்டி நிகழ்ச்சி பதினைந்தாவது ஆண்டாக மிகச் சிறப்புடன் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பங்குகொள்ளும் போட்டியாளர்கள் இரசிகர்களின் வாக்கு அடிப்படையில் தெரிவு செய்யப் படுவதை இலண்டன் இரசிகர்களுக்கு அறிமுகப்படுத் திய பெருமை திருமதி யோகா தில்லைநாதன் அவர் களையே சாரும். இந்நிகழ்ச்சியைக் கடந்த 15 வருடங் களாகத் தொடர்ச்சியாக நடத்திவரும் ஸ்ரீமதி தில்லை நாதன் அவர்களின் வெற்றிக்குக் காரணம் அவர் ஒலி பரப்புத் துறையில் 41 வருட அனுபவமும் ஆற்றலும் பெற்றிருப்பதே. தனது அனுபவத்தின்மூலம் இலண்டனில் பல இளம் கலைஞர்கள் உருவாக வழிகாட்டுவது பாராட்டத்தக்கது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலி பரப்பு ஒழுங்கு அமைப்பாளராகப் பணிபுரிந்த அவரின் ஒழுங்கு அமைப்புத் திறனை இலண்டனில் நடைபெறும் ''கானக்குயில்'' நிகழ்ச்சியில் இரசிகர்கள் காணக்கூடிய தாகவிருந்தது.

மண்டபம் நிறைந்த இரசிகர்களுடனும், பிரபல பாடகர் ஜேசுதாசனின் புதல்வர் விஜே அவர்களின் இனிய பாடல்களுடனும், உலகப்புகழ்பெற்ற அறிவிப் பாளர் பி.எச். அப்துல் ஹமீத் அவர்களின் அறிவிப் போடு, எஸ்.கே. ராஜன், துளசி இணை அறிவிப்பும் நிகழ்ச்சியை மேலும் மெருகூட்டின. சித்திராலயா இசைக் குழுவினரின் இசை, அதற்கு ஏற்றாற்போல் சூரியா ஒலி அனைத்தும் பிரமாதமாக அமைந்தன. அதனால் நிகழ்வு களை கட்டியது. இரசிகர்களின் பலத்த கரகோஷத்தையும் பாராட்டையும் பெற்ற ஓர் அருமையான நிகழ்வாகும்.

2007ஆம் ஆண்டின் கானக்குயில்களாக சௌமித்திரா மயூரன், மதுரராஜ் விவேகானந்தன் இளம் கானக் குயில்களாக வித்தியா தினேஷ், ஆர். சுதர்சன் ஆகியோர் இரசிகர்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டனர்.

# திருவாளர் இராஜீவ் காந்தியின் படுகொலை! பின்னணி என்ன?

சோ.மா.கி.சி,

இந்திய அரசியலில் திரு. பி.வி. நரசிம்ம ராவ் என்பவரை அறியாதார் யாரும் இருக்க முடியாது. இந்திரா காந்தி, இராஜீவ் காந்தி ஆகியோரின் அமைச்சரவையில் முக்கியமான, பொறுப்புள்ள அமைச்சராய் இருந்து பணியாற்றியவர். அவருக்கு ஓர் ஆசை. எப்படியாவது இந்திய நாட்டின் பிரதமர் ஆகிவிடவேண்டும் என்பது. அதனை இந்திரா காந்தி மறைந்தவுடன் செயல்படுத்த முயன்றார். ஆனால், யாரும் எதிர்பாராமல் அரசியலை அறியாத, அரசியலை விரும்பாத, விமானம் ஓட்டும் விமானியாக இருந்த இராஜீவ் காந்தி பிரதமர் ஆகிவிட்டார். அது திரு. நரசிம்ம ராவுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

அந்த ஏமாற்றத்தைத் தன் இனத்தாரும், (ஆரியர்) தனக்கு மிகவும் வேண்டியவர்களும், எந்தச் செயலையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்கும் வல்லமை பெற்றவர்களுமான ச. சாமி, சு. சாமி மற்றும் சிலரிடம் கூறி வருத்தப்பட்டிருக்கிறார். அப்போது உருவானதுதான் திரு. இராஜீவ் காந்தி படுகொலைத் திட்டம். அதாவது இராஜீவ் காந்தி உயிருடன் இருக்கும் வரையில் பிரதமர் பதவி பற்றி நரசிம்ம ராவ் நினைக்கவே முடியாது. அதனால், இராஜீவ் காந்தி கொல்லப்பட வேண்டும். அக்கொலை ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது போல் இல்லாமல் பல மாங்காய்களை அடிப்பது போல் இருக்க வேண்டும். அதாவது இராஜீவ் காந்தி தமிழ்நாடு போகும் போது அங்கேயே கொலை நடக்க வேண்டும். அதனால், இந்தியாவின் மற்ற மாநில மக்கள் தமிழ் நாட்டையும், அதன் மக்களையும் வெறுக்க வேண்டும். கொலை செய்யக் கூலிப் படையை அமர்த்த வேண்டும்; அப்படையை இலங்கைத் தமிழரிடம் இருந்து பெறவேண்டும். அதனால், இலங்கைத் தமிழருக்கும், தமிழ் நாட்டுத் தமிழருக்கும் எந்தவிதமான ஒட்டும் உறவும் இல்லாமல் வெட்டிவிட்டு இலங்கைத் தமிழரைத் தனிமைப்படுத்த வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமாகச் சித்திரித்து அதனைத் தடைசெய்துவிட வேண்டும். தமிழ் நாட்டில் இருக்கும் வலிமை வாய்ந்த அரசியல் கட்சியான தி.மு.க. மீதும் பழிசுமத்த வேண்டும் என்று திட்டம் வகுக்கப்பட்டது.

அத்திட்டத்தின்படி கொலை செய்யும் கூலிப் படை அமர்த்தப்பட்டது. அந்தப் படை தமிழீழ விடுதலைப் புலி அமைப்பிடம் இருந்து அமர்த்தப்பட்டதா? அல்லது இலங்கையைச் சேர்ந்த வேறு ஓர் அமைப்பிடம் இருந்து அமர்த்தப்பட்டதா அல்லது அதுபோன்ற செயல்களைச் செய்ய உலகில் எல்லா நாடுகளிலும் தனிப்பட்ட குழுக்கள் உண்டு. அப்படிப்பட்ட ஒரு குழுவிடம் இருந்து அமர்த்தப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. சந்தேகத்தின் பேரிலும், ஊகத்தின் பேரிலும் கூலிப்படையில் தானு, சிவராசன், முருகன், நளினி உள்ளிட்ட சுமார் பத்துக்கு மேற்பட்டோர் இருந்ததாகவும் அவர்கள் யாவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்லப்பட்டது. அவர்கள் வகுத்த திட்டத்தின் படி எல்லாம் சரியாகவே நடந்தது.

1. இராஜீவ் காந்தி தமிழ்நாட்டில் படுகொலை செய்யப்பட்டார். நரசிம்ம ராவ் இந்தியாவின் பிரதமர் ஆனார். இராஜீவ் காந்தி கொலை நடந்த பின் தமிழீழ விடுதலைப் புலி அமைப்பைச் சேர்ந்தவர்கள் மட்டும் அல்லாது ஒட்டுமொத்தமாக இலங்கைத் தமிழர் அனைவரையும், அவர்களுக்கு ஆதரவு தந்த தமிழ்நாட்டுத் தமிழரையும் துரத்தித் துரத்தித் தாக்கிக் கொன்று குவித்தனர்.
2. பலரைச் சிறையில் தள்ளி மகிழ்ந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பாகச் சித்திரித்துத் தடை செய்யப்பட்டது.
3. தமிழ்நாட்டுத் தி.மு.க. மீதும் பழிபோட்டு அத்தேர்தலில் அதனைத் தோல்வி அடையச் செய்தனர்.

திரு. இராஜீவ் காந்தியைக் கொலை செய்யப் போகிறார்கள் என்ற செய்தி முழுமையாகத் தெரியா விட்டாலும், 'ஏதோ ஓர் பயங்கரம் நடக்கப் போகிறது' என்ற செய்தி சிலருக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது. அந்தச் சிலருள் செல்வி ஜெயலலிதா, கருப்பையா மூப்பனார், வாழப்பாடி இராமமூர்த்தி ஆகியோர் அடங்குவர்.

தமிழ்நாட்டில் பொதுத்தேர்தல் நடக்க இருக்கிறது. அதில் போட்டியிட காங்கிரசும் அ.தி.மு.க.வும் கூட்டணி அமைத்து இருக்கிறது. அதற்குப் பிரசாரம் செய்வதற்காகக் காங்கிரஸ் கட்சியின் உயர்ந்த தலைவரும், இந்தியாவின் பிரதமருமான இராஜீவ் காந்தி வந்திருக்கிறார். மேலும், தனிப்பட்ட முறையில் ஜெயலலிதாவின் படுக்கை அறைவரையில் செல்லும் உரிமையும், சலுகையும் இராஜீவ் காந்திக்கு இருந்தது என்றும், அதே உரிமையும் சலுகையும் ஜெயலலிதாவுக்கு இராஜீவ் காந்தி வீட்டிலும் இருந்ததென்றும் சொல்லப்பட்டது. ஆக, இவ்வளவு நெருக்கமான நண்பர், தலைவர், பிரதமர், வந்திருக்கும் போது ஜெயலலிதா என்ன செய்திருக்க வேண்டும்? அவருக்கு அருகில் இருந்து வேண்டிய உதவிகளைச் செய்து தேர்தல் பிரசாரம் செய்திருக்க வேண்டும். அவர் அவ்வாறு செய்யாமல் இராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டபோது பல மைல் தூரத்துக்கப்பால் சென்றிருந்தாரே, ஏன்?

காங்கிரசின் உயர்ந்த தலைவர், நாட்டின் பிரதமர் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறார் என்றால் தமிழ்நாட்டுக்

காங்கிரசின் உயர்ந்த தலைவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? அவருக்கு அருகிலேயே இருந்து அவரைப் பாதுகாத்து, வேண்டிய உதவிகளைச் செய்து அவரை மகிழ்வித்து அனுப்ப முயன்றிருக்க வேண்டும். அவ்வாறு செய்தார்களா? இல்லையே, ஏன்? இராஜீவ் காந்தி திருப்பெரும் புதூருக்குச் சென்றபோது அவருடன் சென்றவர்கள் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி நிருபர்களும், போலீசாரும், பொது மக்கள் சிலரும் மட்டுமே, கருப்பையா மூப்பனாரும், வாழப்பாடி இராமமூர்த்தியும் இராஜீவ் காந்தியை விட்டுச் சுமார் நூறு அடி தூரத்துக்குப் பின்னாலேயே சென்றுள்ளனர். ஏன்?

இங்கு நாம் குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சியில் 100க்குத் 90 விழுக்காடு திருமதி சோனியா காந்திக்குத் தெரியும். தக்க சாட்சியங்களுடன் அவற்றை நிரூபிக்க முடியாது என்பதால் மௌனமாக இருக்கிறார். ஆயினும் சோனியா காந்தி காங்கிரஸ் தலைவராக இருந்தும், நரசிம்ம ராவ் காங்கிரஸ்காரராய், இந்தியாவின் பிரதம ராய் இருந்தும் ஒரு தடவைகூட அவரிடம் முகம் கொடுத்துப் பேசியதில்லை. மேலும், எதிர்பாராத விதமாக இருவரும் ஏதாவது ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நேரிட்டாலும் நரசிம்ம ராவ் இருக்கும் பக்கம் திரும்பாமல் வேறு பக்கம் திரும்பி முகத்தைக் கடுகடு வென வைத்துக் கொண்டிருப்பார். இதனைப் பழைய ஒளி-ஒலி நாடாக்களைப் போட்டுப் பார்த்தால் தெரியும்.

இராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின் பதவி ஆசையால் தங்கள் கட்சிக்காரர்களே பிரதமராய், அதிபராய் இருப்போரைக் கொலை செய்ய முயல்வதாக வும், அதனைத் தடுத்து அத்தலைவர்களைக் கதாநாயகன் காப்பாற்றுவதாகவும் சுமார் பத்துக்கு மேற்பட்ட திரைப் படங்கள் வந்துள்ளன. அவற்றில் நடிகர்கள் அர்ஜுன், கமலஹாசன் போன்றோர் நடித்துள்ளனர். இது 'தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்' என்பது போல இராஜீவ் காந்தியின் கொலைக்கான காரணத்தை அறிந்த வர்கள் தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்துவதாகும்.

மகாத்மா காந்தியைக் கொலை செய்தவர்கள் ஆரிய இனத்தவர் என்பது வெளிப்படையாகத் தெரிந்தும் இந்தியர்கள் அந்த இனத்தவரையே பகைவர்களாகக் கருதுவதில்லை. அதேபோல் இந்திராகாந்தியைப் படு கொலை செய்தவர்கள் சீக்கிய இனத்தவர் என்பது வெளிப்படையாகத் தெரிந்தும் இந்தியர்கள் அந்த இனத்தவர்களையே பகைவர்களாகக் கருதவில்லை. ஆனால், சந்தேகத்தின் பேரிலும் ஊகமாகவும் இராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்கள் இலங்கைத் தமிழர் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் என்று சொல்லப் படுவதால் இந்தியர்கள் இலங்கைத் தமிழினத்தையே பகைவர்களாகக் கருதுவது எந்த வகையில் நியாயம் என்று தெரியவில்லை. தமிழினம் என்றால் அவ்வளவு மலிவானதா? இதைத்தான் 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்றார்களோ! ✱


# 1 STOP SOLICITORS

## COMMISSIONERS FOR OATHS

***"தனா சட்டத்தரணி" தனித்து தனது தனித்துவமான சேவையை***

***ஆகஸ்டு 20ஆம் திகதி முதல் ஆரம்பித்துள்ளார்! உங்கள் வரவினாலும் ஆதரவினாலும் உயர்ந்த அவர் தொடர்ந்து உங்களுக்குத் தரமான சேவையைச் செய்ய உன்னிப்புடன் உள்ளார்!***

***அவசர சேவைக்கு :*** **T. Thana 079 7666 0685**

***அவரது சேவைகள்:***

- Residential Properties
- Entry Clearance Applications, Appeal
- Commercial Leases
- Landlord & Tenant Matters
- Immigration Applications
- Family / Divorce Matters
- Family Re-union
- Power of Attorney Wills & Probate

***For Service, Call at :***

**1st Floor, 246 Hoe Street, Walthamstow, London E17 3AX**

**Tel : 020 8521 4686 Fax : 020 8521 9919**

**E-mail : thanasolicitors@yahoo.co.uk**

# தமிழர் தலைவர் அமரர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் 80ஆவது பிறந்தநாள் சிந்தனைகள்



ஐ.தி. சம்பந்தன், இலண்டன்

ஈழத் தமிழரின் அரசியல் வரலாற்றில் அளப் பரிய சேவையாற்றிய அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் தந்தை செல்வாவின் பின்னர்த் தமிழினத்தின் தலைமைத்துவத்தை ஏற்றவர். அன்னாரது அகவை எண்பதில் அப்பெரும் தலைவர் ஆற்றிய பணிகளை நினைவுகூருவோம்.

ஓர் இனத்தின் விடுதலை வரலாறென்பது பல அரசியல் தலைவர்களின் அர்ப்பணிப்பால் வளர்க்கப் பெற்றது என்பது மறுக்கமுடியாததொன்றாகும். அமரர் அமிர்தலிங்கத்தின் 40 ஆண்டு அரசில் பங்களிப்புப் பல போராட்டங்களினூடாக முன்னெடுத்துச் செல்லப் பட்டது.

தலைவர் அமிர்தலிங்கம் 1948இல் சட்டக் கல்லூரியில் கற்றுவந்த காலத்திலே தந்தை செல்வா வுடனும் அவரது அரசியல் இயக்கத்துடனும் ஏற்பட்ட தொடர்பு 1976இல் தந்தை செல்வா மறையும்வரை இணைபிரியாத உறவாகத் திகழ்ந்தது. அன்றைய அரசியலில் தந்தை செல்வாவின் பலம்மிக்க இளம் தளபதியாக இவர் விளங்கினார்.

இருபது வயது இளைஞனாக இருந்தபோதே தமிழருக்குச் சுயநிர்ணய உரிமையுள்ள தனியரசொன்றை அமைத்துத் தமிழர் தனித் தேசிய இனமாக வாழவேண்டும் என்ற கொள்கையுடன் அரசியலில் தீவிரமாக இறங்கியவர் இவர். துப்பாக்கிச் சன்னங்களால் தனது உயிர் கொய்யப்படும்வரை அக்கொள்கையில் வழுவாதிருந்து வந்தவர்.

தான் தேர்ந்த சட்டத்துறையில் ஆரம்பத்தில் இவர் ஈடுபட்டாலும், வாழ்வின் பெரும்பாகத்தினைத் தமிழர் அரசியலில் தீவிர பங்கேற்று இயங்கியவர். அரசியலைத் தவிர்த்து, சட்டத்துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியிருந்தால் ஒருவேளை இன்று ஒரு பிரபல்யமான தமிழ்ச் சட்டமேதையாக, தன வந்தராக நம்மிடையே வாழ்ந்திருப்பார். ஆனால், தமிழினம் அன்று சிங்கள ஆட்சியாளரால் அடக்கியொடுக்கப்படுவதையும், அவர்களது அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதையும், தமிழ் மண் சிங்களக் குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்படுவதையும், மலையகத் தமிழரின் வாக்குரிமைகள் பறிக்கப்படுவதையும் அவரால் பொறுத்து நின்று வேடிக்கை பார்க்க முடியவில்லை.

ஈழத்தமிழர் ஒரு தனித் தேசிய இனம், அது இலங்கையில் தலைநிமிர்ந்து தன்னாட்சி பெறவேண்டும் என்ற தந்தை செல்வாவின் அரசியல் கோட்பாட்டை முன்னெடுக்கத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார் அமரர் அமிர்தலிங்கம். சிங்கள ஆட்சியாளர்களின் அராஜகத்துக்கெதிராகக் குரல் கொடுக்கும் சிங்கமாகக் கர்சித்தார். அவரது நாடாளுமன்ற உரைகள் சிங்களவர்களையும் சிந்திக்க வைத்தன. தனது பேச்சால், பிரச்சாரத்தால் தமிழ் பேசும் மக்களைத் தமிழரசுக் கட்சியின் கீழ் அணிதிரள வைத்தார். கிராமம் கிராமமாகத் திரிந்து பீரங்கிப் பிரச்சாரங்களை மேற் கொண்டார். தமிழ் மக்களிடையே விடுதலைத் தீயைக் கொழுந்துவிட்டெரியச் செய்தார். தமிழரசு வாலிப முன்னணியைக் கட்டி எழுப்பினார். பல இளைஞர்களை அரசியலுக்குள் நுழையவைத்தார்.

1952இல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா யாழ்ப் பாணம் வந்தபோது தமிழ் வாலிபர்கள் யாழ்ப்பாண மாநகரசபையின் முன்னால் நடத்திய கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட இவர் தாக்குதலுக் குள்ளானார். 1956இல் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்துக் காலிமுகத்திடலில் தந்தை செல்வாவின் தலைமையில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் பங் கேற்றுச் சிங்களக் காடையர்களின் தாக்குதலுக்குள்ளாகி இரத்தக் கறையுடனேயே நாடாளுமன்றம் சென்று சாத் வீகப் போராட்டமொன்றினைச் சிங்கள அரசு வன்முறையால் எதிர்கொண்டதை உலகறியச் செய்ததுடன் அதனை என்றும் மறக்கமுடியாததொரு வரலாற்று நிகழ்வாக்கியவர் இவர்.

1961இல் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட் டத்தில் தம் துணைவியார் மங்கையர்க்கரசியுடன் சிங்களக் காவல்படையினால் கைது செய்யப்பட்டுப் பனாகொடை இராணுவ முகாமில் சிறைப்படுத்தப் பட்டார். தொடர்ந்துவந்த சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தில், திருமலை யாத்திரையில், என்று பல போராட்டங்களில் பங்கேற்றுப் போராளிகளை வழி நடத்தியவர் இவர்.

1976இல் வட்டுக்கோட்டையில் நிறைவேற்றப் பட்ட தமிழீழக் கோரிக்கைத் தீர்மானத்தை மக்களிடையே விநியோகித்தமைக்காக இலங்கை அரசினால் தேசத்துரோகக் குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டு ட்ரயல் அட் பார் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். தமிழ்ச் சட்டவல்லுநர்களின் திறமையான சட்டவாதத் தால் 20 ஆண்டுச் சிறைவாசத்தைத் தவிர்த்துக் கொண்டார்.

1983 இன் இனக்கலவரக் கொடுமைகளைப் பலத்த எதிர்ப்பின் மத்தியிலும் இந்தியாவுக்குச் சென்று அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியிடம் துணிச்சலுடன் எடுத்துக் கூறியவர். இந்தியாவின் நல்லெண்ணத்தைப் படிப்படியாக ஈழத்தமிழர்கள் மீது ஏற்படுத்த இவர் பல முயற்சிகளை அரசியல் சாணக் கியத்துடன் மேற்கொண்டிருந்தார். 1984இல் சிங்கள இராணுவம் வடமராட்சியை ஆக்கிரமித்து யாழ்ப் பாணத்தைக் கைப்பற்ற முனைந்த வேளையில் இந்தியாவின் தலையீட்டுக்கு இவரது அரசியல் அணுகுமுறையே வழிவகுத்தது.

தம்பிமாரின் ஆயுதப் போராட்டம் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுத் தரும் என்னும் நம்பிக்கையுடன் பணிகளை மேற்கொண்டிருந்த நிலையில் எதிர்பாராத அவரின் மறைவு பேரிழப்பாக அமைந்தது. அவரின் எண்ணத்தைத் தம்பிமார்கள் நிறைவேற்றுவார்களாக! ✱



திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்

# முயலகன் நோய் தீர்த்த அற்புதம்

(வைத்திய கலாநிதி - எஸ். வைத்திலிங்கம், இடைக்காடு சுயம்பு)

## தலம் - பாச்சில் ஆச்சிராமம்

*இக்கட்டுரையாளர் 90 வயதை எய்திய நிலையிலும் ஆத்மிக சக்தியில் இன்றும் கச்சிதமாக இலண்டனிலிருந்து எழுதிக் கொண்டிருக்கிறார்.* - ஆசிரியர்

பாரத தேசத்திலே சோழ வள நாட்டிலே கொல்லி மலைத்தொடரை அண்டிய நாட்டுப் பகுதியில் சிற்றரசன் ஒருவன் இருந்தான். கொல்லி மழவன் என்று சேக்கிழார் பெயர் குறிப்பிடுகிறார். சிவபக்தன். அவனுக்கு ஒரு பெண் மட்டும் பரம்பரைக்குக் கிடைத்தது. அந்தப் பெண் வளர்ந்து இளம் பெண்ணாய் வந்த காலத்தில் முயலகன் என்னும் நோய் பற்றிக் கொண்டது. பெரும் பிணியாகும் முயலகன், முயல் வலி என்று சொல்லப் படும். நாம் காக்கை வலி (Epilepsy) என்று சொல்லும் தீராத நோயாயிருக்கலாம். இந்நோய் உணர்வற்றுக் கிடக்கவும் வலிப்பினால் வருத்தவுஞ் செய்யும். அந்த நாட்டு மருத்துவர்கள் எல்லாரும் பரிகாரம் பார்த்துச் சுகப்படாமல் கவலையுற்றிருந்தான் மழவன். சுற்றத்தவர் களும் புலம்பியழுது நின்றார்கள். இறைபக்தியுடைய வனானபடியால் இறைவனையே சரணடைவதென்று துணிந்து அந்தப் பெண்ணைத் திருப்பாச்சில் ஆச்சிரா மம் எனுங் கோயிலுக்குக் கொண்டு வந்து சுவாமிக்கு நேர் முன்னாக இருக்கவிட்டுக் காத்து நின்றான்.

இறைவன் சந்நிதியிலிருந்து பரவும் சக்தியினால் தீராத நோய்கள் தீரும். அலைந்து திரியும் ஆவிகள், வாயு சரீரமுடைய சிறு தேவதைகளின் சேட்டைகள் இறை சந்நிதியின் நேர் அனுபவத்தால்தான் தீரும். தொண்ட மனாறு செல்வச் சந்நிதி கோவிலில் இப்படி நோயாளர்கள் தவமிருந்து சுகப்பட்டுப் போவது கண்கூடு. ஆகவே கொல்லி மழவன் பாச்சிலாச் சிராமத் திறைவனே கதியென்று மகளைக் கொண்டுவந்து இறைவனுக்கே பாரங்கொடுத்து விட்டான். கொல்லி மழவனுடைய பத்தி மேன்மைக்கும் ஒழுக்கத்துக்கும் பரிசாகத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அன்று அங்கு எழுந்தருளி வர இருக்கிறார். இறைவருடைய ஏற்பாடு போல் தெரிகிறது. நாயனார் அந்த நாள்களில் தல யாத்திரை செய்து கொண்டு வந்தார். அன்று மழவ நாட்டெல்லையில் வரும்போது திருத்தொண்டர் முழக்கும் சிவ சின்னங்களின் ஒலியும் கட்டியங்கூறும் ஒலியும் கொல்லி மழவனுக்குக் கேட்டது. ஆளுடைய பிள்ளை யார் எழுந்தருளுவதை அறிந்தான். உடனே நாயனாரின் தகுதிக்கு ஏற்றவகையில் நகரை விரைவாக அலங் கரித்து நிறைகுடம் தூபதீபம் மாலைகளுடன் வீதிநீளம் வெள்ளை கட்டிய பந்தலில் நிலபாவாடை விரித்த மங்கல வாத்தியங்கள் முழக்கி வரவேற்பு ஒழுங்கு களைச் செய்தான். நாயனார் வந்து கொண்டிருக்கும் எல்லைக்குப் போய் அங்கே பல்லக்கின் முன்னே வீழ்ந்து வணங்கினான். ''பிள்ளையார் எழுந்தருளப் புண்ணியஞ் செய்தேன்'' என்று கூவினான். நாயனார் அவனை எழுந்திருக்கச் செய்து கருணையுடன் வந்தார். கோயில் வாசலில் நாயனார் சிவிகையினின்றும் இறங்கிக் கோபுரத்தைத் தொழுதார்; உட்புகுந்தார். வீதிவலம் வந்தார். சந்நிதிக்கு நேரே நின்று மூலவரைக் கும்பிட முயன்றபோது அங்கே மயங்கித் துவண்டு கிடந்த கன்னியைக் கண்டார்.

### புராணம் - பாடல்

**கன்னியிளங்கொடி உணர்வு கழிந்து நிலன்சேர்ந்ததனைக்**
**கண்டு நோக்கி**
**'என்னிது?' என்று அருள்செய்ய மழவன்தான்**
**எதிரிறைஞ்சி அடியேன் பெற்ற**
**பொன் இவளை முயலகனாம் பொருவில் அரும்பிணி**
**பொருந்தப் புனிதர் கோயில்**
**முன்னணையக் கொணர்வித்தேன், இது புகுந்த படி என்று**
**மொழிந்து நின்றான்.**

பிள்ளையார் மழவன் கூறிய மறுமொழியைக் கருணையுடன் கேட்டருளி உடனே அந்நிலையிலே நின்றபடியே அந்தப் பிணியை நீக்கும்படி வேண்டிப் பாடத் தொடங்கினார்.

### பண் தக்கராகம் (காம்போதி)

**துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்**
**சுடர்ச்சடை சுற்றி முடித்துப்**
**பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ**
**ஆரிடமும் பலி தேர்வர்.**
**அணிவளர் கோலம் எலாஞ் செய்து பாச்சில்**
**ஆச்சிராமத் துறைகின்ற**
**மணிவளர் கண்டரோ மங்கையை வாட**
**மயல் செய்வதோ இவர் மாண்பே.**

துணிபட்டுத் துளங்கி விளங்க-தேய்ந்து அழிந்து போய்த் துண்டாகிய நிலையில் வருந்திப் பின் வளர வரம் பெற்று ஒளியுடன் விளங்க-சந்திரன் தக்கனின் சாபத்தால் தேய்ந்து போய் ஒளியின்றி நிலை கலங்கிப் பின் சிவபெருமானைச் சரணடைந்து மீள ஒளிபெற்ற; முன் துளங்கிப் பின்விளங்க-துளங்கி விளங்க-என்று நாயனார் பாடலை ஆரம்பித்தார். தொடக்கத்திலேயே இந்தப் பெண் இப்போது நோயால் வருந்தினாலும், மீள நலம் பெறுவாள் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தி னார். இந்த உரை மங்கலச் சொல்; ஆசீர்வாதம். அடுத்த தாக அவர் இறைவனுடைய கோலத்தைப் போற்று கிறார். சுடர்ச்சடை சுற்றி முடித்து-செவ்வொளி வீசும் சடை அதை முறுக்கிச் சிரசில் முடிபோல் சுற்றி முடிந்து

இந்த வர்ணனை அங்கே கருவறையில் சிவலிங்கத்தின் அதே கோலம். அநேகமான சிலைகளில் சடைகள் விரிந்து பரந்து நிற்கும். இங்கே சடைகளை முற்றும் முறுக்கிச் சடாமுடியாக முடிந்த கோலத்தை ஞானக் கண் கொண்டுதான் கண்டிருக்கிறார். பணிவளர் கொள்கையர் -பாம்புகளை அணிந்தவர். பாம்பு வளையும் பின் நேராகும். சுருண்டு படுத்துத் தூங்கும். இந்த முயலகன் நோயும் அப்படித்தான். உடலுறுப்புகளை வளைத்து வளைத்து முறுக்கியும் மயக்கத்தைக் கொடுத்தும் வருத்தும். இறைவனுக்குப் பாம்புகளால் துன்பமில்லை. இந்தப் பெண் இறைவனைச் சரணடைந்திருக்கிறாள். ஆனபடியால் அவளது துன்பம் நீங்க வேண்டும். ஆரிடமும் பலி தேர்வர். இறைவன் கையிலே ஒடு கொண்டு வீடுகளிலே பிச்சை கேட்பான், பிச்சை-பலி; இங்கே இந்தப் பெண் தானே இறைவனுக்குப் பலியாக வந்து கிடக்கிறாள். இறைவன் பிச்சை கேட்கிறான், ஏற்கிறாள் என்று சொல்வது ஒரு உபசார வழக்கு; வேடிக்கையாக இறைவனைப் புகழும் சொல். பக்கு வான்மாக்களிடம்-முத்திக்குப் போக அண்மித்துக் கொண்டு வரும் உயிர்களிடம் எஞ்சி நிற்கும் வினைகளை இறைவன் ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு முத்தியை அளிப்பதுதான் அந்தக் கருத்து. (Bonus) இங்கே இந்தப் பெண் சரணடைந்து விட்டாள். ஆனபடியால் அவளுடைய வினையின் பயனாகிய இந்த நோயை யாவது நீக்கலாமல்லவா?

அணிவளர் கோலமெலாஞ் செய்து மக்களுக்கு அழகிய உடல்களும் வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங் களும் தந்து இந்தப் பாச்சிலாச் சிரமத்தில் உறையும்-மணிகண்டரோ-'மணிகண்டர்' என்பது இத்தலத்துச் சுவாமி பெயர்; அம்மையின் பெயர் ''பாலசுந்தரி''. நாயன்மார்களுடைய ஞானப் பெருமையை அளவிட முடியாது. தேவாரம் பாடிய நாயன்மார்கள் மூவரும் கோவிலுக்குள் புகுந்ததும், சுவாமி அம்மை பெயர் களைச் சொல்லிப் பாடுவார்கள். தலபுராணக் கதைகளும் சொல்வார்கள். அவர்களுடைய ஞானம் இருந்தவாறு அதிசயம்! மணிகண்டர்-என்றால் நீல நிறக் கழுத்து உடையவர். மணி கண்டரோ? மங்கையை வாட மயல் செய்வதோ?-இந்தச் சொற்களில் வந்த ஓகாரம்-கண்டரோ, ரோ ஓகாரம் மயல் செய்வதோ, தோ ஓகாரம் -இந்த ஓ-ஓகாரங்கள் ஐயப் பொருளில் வந்தவை. அப்படி அமையப் பாடியிருக்கிறார். அவரா? அப்படிச் செய்வாரா? நம்ப முடியாது என்ற மாதிரிப் பொருள். அதாவது இந்த இறைவர் இப்பொழுதே இந்த நோயை நீக்கிவிடுவார். ஐயமில்லை!

இந்தப் பதிகத்தில் இன்னொரு சிறப்பு. வித்தி யாசமாகப் பாடல்களை அமைத்திருக்கிறார். நேராக இறைவரை வரமொன்றுங் கேட்காமல் அங்குக் குழுமி நின்ற அடியார்க்குக் கூறுவதுபோல் அமைத்தருளியிருக் கிறார். அடுத்து வரும் பாடல்களில் குறிக்கிறார்;-இந்த இறைவர் தலையில் கங்கையை வைத்திருக்கிறார். தம் பக்கலில் ஒரு இளம்பெண்ணை வைத்திருக்கிறார். அப்படிப்பட்டவர் இந்த இளம்பெண் வருந்துவதை நீக்கமாட்டாரா? நம்பமுடியவில்லையே! இப்படிப் பாடி வந்து எட்டாவது பாடலில்-இராவணன் பாடலில்-இராவணனுக்குத் தண்டனை கொடுத்ததைக் குறிக்கிறார். தண்டனையின் பின் இராவணனுக்கு மிகவும் அருள் செய்தார் என்பதையும் நாயனாரது குறிப்பாக நாம் கொள்ளலாம். அத்துடன் அருச்சுனருக்கு அருள் செய்ததை இப்பாடலில் குறித்திருக்கிறார். இவற் றுக்கும் மேலாக இன்னுமொரு சிறப்பான அசைக்க முடியாத காரணத்தை எடுத்து நற்சாட்சிப் பத்திரமாகக் காட்டுகிறார்.

**''மூவரிலும் முதலாய் நடுவாய மூர்த்தியை அன்றி மொழியாள் யாவர்களும் பரவும் எழிற் பாச்சில்லாச்சிராமத்துறைகின்ற தேவர்கள் தேவரோ...''**

இங்கே இக்கோவிலிலே பலரும் வழிபடுகிறார் கள். பாடுவார்கள்; புகழ்வார்கள்; ஆனால் இந்தப் பெண்ணிடம் ஒரு சிறப்பு. இவள் மூர்த்தியை அன்றி மொழியாள். மூர்த்தி-இறைவன் பெயர்-மொழியாள்-சொல்ல மாட்டாள். மனத்திலே இருப்பதுதான் சொல்ல வரும். இவள் மனத்திலே இருப்பதுதான் சொல்வதும், இவள் மனத்திலே இறைவன் நாமமாகிய மூல மந்திரம் பதிந்திருக்கிறது. அதனால் அதுதான் பேசவரும். அதைத் தான் சொன்னால் சொல்வாள். அப்படிப்பட்ட அடியவள் அல்லவா? அதனால் இவளுக்கு அருள் செய்யாதிருப் பாரா? நம்பமுடியவில்லையே! திருக்கடைக் காப்புப் பாடலிலே ''நற்றமிழ் ஞானசம்பந்தன் தகைமலி தண்டமிழ் கொண்டிவையேத்தச் சாரருகிலா வினைதானே''-இந்தப் பாடல்களைப் பாடிவந்தால் உங்களை வினைப்பயன் சாராது; போய்விடும். அந்த ஆணையுடன் வினை நீங்கி -முயலகன் நோய் நீங்கி-கொல்லி மழவனின் பெண் திடமாக எழுந்து நின்றாள். எழுந்து நின்ற பெண் தந்தை மருங்கணைந்து நின்றாள். இருவரும் பிள்ளையாரை வணங்கினார்கள். பிள்ளையார் இறைவனை வணங்கினார். பின் மழவனும் மகளும் இறைவனை வணங்கினார்கள். ஆளுடைய பிள்ளையார் அவர்களை ஆசீர்வதித்து அவர்களுக்கு விடைகொடுத்துத் தான் மேலும் வழிபட்டார். இந்த அற்புதம் நிகழ்ந்த காலம் நாய னாருக்கு வயது எட்டு ஆரம்பமான காலம் என்று கொள்ளலாம்.

கொல்லி மழவன் பெண்ணின் முயலகன் நோய் நீங்கியதும் அந்தக் கோவில் நடராசாமூர்த்தியின் பாதங் களில் நசிந்து கிடக்கின்ற முயலகன் என்னும் அசுரனும் மறைந்தான். அங்கு ஊன்றிய பாதத்தின் கீழ் ஒரு பாம்பு இருக்கிறது. இந்தத் தலத்தில் இன்னொரு சிறப்பு. பின்னாளில் சுந்தரமூர்த்தி நாயனார் இங்கு வந்து பொன் வேண்டி நினைந்து பாடினார். தோழன் என்ற உரிமை யோடு பாடினார். ''இவரலாது இல்லையோ பிரானார்'' என்று ஒவ்வொரு பாடலிலும் கேட்டுக் கேட்டுப் பாடினார். நிறையப் பொன் பெற்றார். இந்தத் தலத்தின் மகிமையும் சொல்லில் அடங்காது.

முயலகன் நோய் தீர்த்த இந்தப் பதிகத்தை ஒவ்வொரு நாளும் நேர்த்திக் கடனாகப் பாடிப் பூசித்து வந்தால் வாத ரோகங்களும் நீங்கும். வாத நோய் முற்றி னால் மூட்டுகளை இறுக்கி அசைவைக் கட்டுப்படுத்தி விடும். எலும்பு மூட்டுவலி தசைநார்கள் நரம்புநார்கள் குறண்டுதல் வலித்தல் இவை நீங்கும். (Osteo arthrits, Rheumatoid arthiritis என்பன நீங்கும்). இது நான் அனுபவத்திற் கண்டதாகும். முதியோருக்கு இப்பதிகம் சிறந்த மருத்துவம். *

நூல் நயவுரை

# 1. அலை வனையும் உலகு
# 2. தமிழ்ச் செம்மொழிச் சிறப்பு மலர்

மூத்த நூலகவியலாளர் என். செல்வராசா, இலண்டன்

*(இலண்டனில் இருந்து இயங்கும் ஐ.பீ.சீ. அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் சர்வதேச ஒலிபரப்பில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பிரித்தானிய நேரம் காலை 07.00 மணி முதல் 10.00 வரை ஒலிபரப்பப்படும் ''காலைக்கலசம்'' நிகழ்ச்சியில், ''இலக்கியத் தகவல் திரட்டு'' என்ற பகுதி காலை 7.15 முதல் 8.00 மணி வரை சுமார் 15-20 நிமிடங்கள் ஒலிபரப்பாகின்றது. நூலகவியலாளர் என். செல்வராசா அவர்களால் தொகுத்து வழங்கப்படும் இந்த வாராந்த நிகழ்ச்சி 29-7-07 அன்று ஒலிபரப்பானதன் எழுத்துப் பிரதியாகும். - ஆசிரியர்)*

நீல வானை நினைவுறுத்தும் அழகிய இளம் நீலவர்ணத்தில் **அலை வனையும் உலகு** என்ற பெயருடன் 504 வண்ணப் பக்கங்களில் வெளியாகியுள்ள ஒரு சிறப்பு மலர் பற்றிய அறிமுகத்தை வழங்குகின்றேன். இலண்டனிலிருந்து 1997ஆம் ஆண்டு முதல் வான லையில் வலம்வரும் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம்-தமிழ் என்ற எமது ஐ.பீ.சீ. தமிழ் ஒலிபரப்புத் தொடங்கப் பெற்று 10 ஆண்டுகளை 2007இல் நிறைவு செய்துள்ள நிலையில், அதனைச் சிறப்பாகப் பதிவு செய்யும் வகையில் அலை வனையும் உலகு என்ற ஒரு மலர் தயாரிக்கப்பட்டு ளது.

24 மணி நேரத் தமிழ் வானொலியாக, அனைத் துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ் (IBC Tamil) 1997 ஜுன் 18இல் தனது சேவையைப் பிரித்தானி யாவில் முதன்முதலில் ஆரம்பித்தது முதலாக, அந்த வானொலிச் சேவை ஆழத் தடம்பதித்து வந்துள்ள கடந்த 10 ஆண்டுக்காலச் சேவைகளின் ஒரு அறுவடை யாகவும் குறுக்கு வெட்டுமுகத் தோற்றமாகவும் இம்மலர் தோற்றமளிக்கின்றது. மேலும், இந்த வானொலியின் இயக்கத்துக்காகத் தமது சேவையை அவ்வப்போது பின்புலத்தில் நின்றும், முன்வரிசையில் நின்றும் வழங்கியோரின் ஒன்றுகூடலாகவும்-கருத்துப் பரிமாறல் களாகவும் அலை வனையும் உலகு என்ற இந்தச் சிறப்பு மலர் உருவாக்கப்பட்டுள்ளது. ஒலிபரப்பாளர்கள், செய்தி யாளர்கள், என ஊடகத் துறையில் தேர்ச்சி பெற்றோரின் அனுபவப் பதிவுகளையும், அரசறிவியலாளர்கள், சமூக வியலாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், போன்றோரின் ஆக்கத்தில் உருவான பயன்தரு கட்டுரைகளையும் தன்னகத்தே கொண்ட ஏடாக, இந்த அகவை மலர் எமது கரங்களில் விரிந்துள்ளது.

''எடுத்த காரியம் யாவினும் வெற்றி'' என்ற நம்பிக்கை வாசகத்துடனும் தேசத்தின் குரல் அமரர் அன்ரன் பாலசிங்கத்தின் ஒவியப் படத்துடனும் விரியும் இம்மலரின் ஒவ்வொரு வண்ண இதழும் கருத்துடன் தேர்ந்து தொகுக்கப்பட்டுள்ளது. இதன் ஆக்கத்திற்காக மலர் வெளியீட்டுக்குழு சிந்திய வியர்வையை 504 பக்கங்களிலும் எம்மால் உணர முடிந்துள்ளது. வாழ்த்து கள், கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரை கள், நினைவுச் சித்திரங்கள், மழலைகளுக்கான இலக்கிய வகையறாக்கள் என்று பல்வேறு அம்சங்கள் இம்மலரில் பரந்து கலந்து காணப்படுகின்றன.

உள்ளே பரந்தும் கலந்தும் காணப்படும் இப்பதிவு களை எளிதில் கண்டு அடைவதற்கான சீரிய வழிகாட்டி யொன்றும் பொருளடக்கமாக முதல் நான்கு பக்கங் களிலும் வகைபிரித்துத் தரப்பட்டுள்ளன.

வாழ்த்தும் இதழ்கள் என்ற முதற் பகுதியில் ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள், அரசியல் அறிஞர்களின் வாழ்த்துகளின் விவரங்களும் அவை இடம்பெற்றுள்ள பக்கங்களும் சுட்டப்பெற்றுள் ளன. கவிதை இதழ்கள் என்ற இரண்டாவது பகுதியில், இம்மலரின் ஆங்காங்கே இடம்பெற்றுள்ள கவிதை களைப் படைத்தவர் பெயரும், பக்க இலக்கமும் தரப் பட்டுள்ளன. அகவை மலர் கவிதைப் போட்டியில் இடம்பெற்று முதல் மூன்று பரிசுக்குரியவர்களின் கவிதைகளும் இம்மலரில் உள்ளடங்குகின்றன. (கு.வீரா. பொலிகையூர் வசந்தன், மார்க்கண்டு பாஸ்கரமூர்த்தி ஆகியோரின் பரிசுக் கவிதைகள் இவை). இம்மலரின் இடம்பெற்றுள்ள சிறுகதைகள் அகவை மலர்ச் சிறு கதைப் போட்டியில் பரிசுபெற்ற கதைகளாக அமை கின்றன. வெற்றிச் செய்தியுடன் வருவேன் என்ற முதற் பரிசுபெற்ற கதையின் படைப்பாளியின் பெயர் மலரில் குறிப்பிடப்படவில்லை. இரண்டாம் பரிசு பெற்ற தடை உடைபடு என்ற கதையை செஞ்சோலையைச் சேர்ந்த ச. செம்பருத்தியும், மூன்றாம் பரிசுபெற்ற புன்னகை பிம்பம் என்ற கதையை நோர்வேயிலிருந்து ந. கிருஷ்ண சிங்கமும் எழுதியுள்ளனர்.

இவ்விதழில் வெளியாகியுள்ள அகவை மலர் நாடகப் போட்டியில் தெரிவான நாடகங்களை தாயகம் நா. யோகேந்திரநாதன் (பார்வையில் படாத பக்கங்கள், 1ஆவது பரிசு), முல்லைத்தீவு தே. வசந்தா (விடுதலை, 2ஆவது பரிசு), திருவையாறு நடராசா சுகந்தி (எங்கே நிம்மதி, 3ஆவது பரிசு) ஆகியோர் எழுதியுள்ளனர்.

அலை வனையும் உலகு என்ற இந்த ஐ.பீ.சீ. வானொலியின் பத்தாவதாண்டு நிறைவு மலரில் கலை இலக்கிய அறிவியல் சார்ந்த 18 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அத்துடன் நீண்டகாலமாக ஐ.பீ.சீ. வானொலியில் நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கிவரும் 19 ஒலிபரப்பாளர்களின் மனப் பதிவுகளும், அனுபவச் சிதறல்களும் கட்டுரை உருவில் பதிவாகியுள்ளன. மழலை களுக்கான இரண்டு படைப்புகள் இடம்பெற்றுள்ளன.

புகலிடத் தேசங்களில் வாழும் தாயக உணர்வு கொண்ட ஒவ்வொரு தமிழரின் இல்லத்திலும் இடம் பெறவேண்டிய ஒரு மலராக அலை வனையும் உலகு அமைகின்றது. ஐ.பீ.சீ. வானொலியின் இலண்டன் முகவரியுடன் தொடர்புகொண்டு பிரதிகளை எவரும் பெற்றுக்கொள்ளலாம்.


அடுத்ததாக மலேசியாவிலிருந்து உலகத் தமிழர் களை நோக்கித் தன் கரம் விரித்திருக்கும் **தமிழ்ச் செம் மொழிச் சிறப்பு மலர்** பற்றிய அறிமுகத்திற்கு வருகின்றேன்.

உங்கள் குரல் என்ற மாத இதழ் நீண்டகாலமாக மலேசியாவிலிருந்து வெளிவருகின்றது. இதுபற்றிக் காலைக் கலசம் நிகழ்ச்சியிலும் சில தடவைகள் குறிப் பிட்டுள்ளோம். மலேசியத் தமிழரான அறிஞர் செ. சீனி நைனா முகம்மது அவர்களை ஆசிரியராகவும் தஸ்லிம் முகம்மது இப்ராஹிம் அவர்களைப் பரவலாகவும் கொண்டு வெளியிடப்படும் உங்கள் குரல் சஞ்சிகை, அறிவியல் கட்டுரைகள், கவிதைகள், கடிதங்கள், சிறு கதைகள், தமிழ்ப்பள்ளிச் செய்திகள், தேர்வு வழி காட்டிகள், வெண்பாப் போட்டிகள் என்று பல்வேறு அம்சங்களையும் தாங்கி வெளிவந்துகொண்டிருக்கின்றது. கவிதைகளுக்கும் தமிழ் மொழி அறிவூட்டும் கட்டுரை களுக்கும் இவ்விதழில் முக்கியத்துவம் வழங்கப்படு கின்றது. பெரும்பான்மையான கட்டுரைகள் வடமொழிக் கலப்பில்லாத செம்மொழி வழக்கில் இருப்பது சாதாரண வாசகர்களுக்குச் சற்று சங்கடத்தைத் தரலாம். ஹிட்லரை-இட்டுலர் என்றும், ஷேக்ஸ்பியரை-செகப் பிரியர் என்றும் வாசிக்கும் அனுபவம் நிறையவே இவ்விதழில் எனக்குக் கிடைத்தது.

மலேசியாவின் பினாங்கு மாநிலத்திலிருந்து வெளிவரும் உங்கள் குரல் சஞ்சிகையின் ஆசிரியர் செ. சீனி நைனா முகம்மது பாரிய பணியொன்றை அண்மை யில் நிறைவுசெய்துள்ளார். அதுவே தமிழ்ச் செம்மொழிச் சிறப்பு மலராக 320 பக்கங்களில் உலகத் தமிழர்களின் பங்களிப்புடன் அழகு மலராக மலர்ந்துள்ளது. கட்டுரை கள், கவிதைகள், ஓவியங்கள் என அன்றைய உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுச் சிறப்பு மலர்களை மீள் நினைவூட்டும் வகையில் இம்மலர் அழகுற வெளியிடப் பட்டுள்ளது. சென்னை சூளைமேட்டிலுள்ள உலகத் தமிழர் பதிப்பகத்தின் வாயிலாகத் திரு. இரா. மதிவாணன் அவர்களின் அயராத உழைப்புடன் இம்மலர் இதழ் விரித்து மணம் பரப்புகின்றது.

இந்திய மத்திய அரசு 2004 செப்டெம்பரில் தமிழ்மொழியைச் செம்மொழியாகப் பிரகடனப்படுத்தி யது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். செம்மொழியை ஆங்கிலத்தில் Classical Language என்று குறிப்பிடுவர். இந்திய மத்திய அரசின் தீர்மானத்தினையொட்டி உலகத் தமிழர்களிடையே செம்மொழி பற்றிய கேள்வி பரவலாக எழுந்தது.

'செம்மொழி பற்றிய கருத்தியல் முதன் முதலில் ஐரோப்பாவிலேயே கருக்கொண்டது. முதன் முதலில் கிரேக்கமும், இலத்தீன் மொழியும் இங்குச் செம்மொழி களாகப் பிரகடனப்படுத்தப்பட்டன. செம்மொழிக்கான தன்மை என்பது தொன்மை (antiquity), ஒத்திசைவு (Harmony), தெளிவு (Clarity), தன்னடக்கம் (Restraint), கண்ணியம் (Serenity), இலட்சியம் (Idealism), பொதுமை (Universality), பகுத்தறிவு (Reason), ஒழுங்கு (Order), கண்ணோட்டம் (Humanism) போன்ற கூறுபாடு களின் தொகுப்பாக வரையறுக்கப்பட்டது. இவ்வகையில் 1600 மொழிகளைப் பேசும் மக்கள் குழுக்களைக் கொண்ட இந்தியாவில் இந்திய மொழிகளில் செம் மொழி அந்தஸ்தினைப் பெற்ற மொழிகளாக ஒரு பட்டியல் உள்ளது. அதில் இதுவரை வடமொழி, அரேபி யம், பாரசீகம் ஆகிய மூன்று மொழிகளும் செம் மொழி களாக இடம்பெற்றிருந்தன. கடந்த செப்டெம்பர் 2004 இல் தமிழையும் செம்மொழி யாக அங்கீகரித்துப் பட்டி யலில் நான்காவதாக அதை இந்திய மத்திய அரசு இடம் பெறச் செய்துள்ளது.




இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையிலும், செம்மொழி பற்றிய விரி வான அறிமுகத்தினைத் தமிழர்களுக்கு வழங்கும் வகையிலும் தமிழ்ச் செம்மொழிச் சிறப்பு மலர் என்ற இந்த மலர் தயாரிக்கப்பட்டுள்ளது. செம்மொழி பொது விளக்கம், செம்மொழி நேற்று- இன்று-நாளை, செம் மொழி சிறப்பியல்புகள், செம்மொழி அக்கரை நாடு களில், தமிழ்க் கல்வி கலை நிறுவனங்கள் ஆகிய ஐந்து தலைப்புகளில் இச்சிறப்பு மலரின் கட்டுரைகள் வகுக்கப் பட்டுள்ளன. முதல் மூன்று தலைப்புகளின் கீழும் 27 கட்டுரைகள்-முழுமையான செம்மொழித் தமிழ் பற்றிய பரந்து விரிந்ததும் ஆழ்ந்த ஆய்வியலின்பாற்பட்டது மான தகவல்களைக் கொண்டதாகத் தமிழக மலேசிய அறிஞர்களின் எழுத்தில் வடித்த கட்டுரைகளாக அமைந்துள்ளன.

அக்கரை நாடுகளில் செம்மொழி என்ற நான்கா வது பிரிவில் ஆறு கட்டுரைகள் மட்டும் இடம் பெற் றுள்ளன. இதில் மலேசியத் தமிழ் இலக்கியம், தமிழ்க் கல்வி பற்றி சோ. சுப்பிரமணி, முரசு நெடுமாறன், கிருஷ்ணன் மணியம் ஆகியோரின் மூன்று கட்டுரை களும், சிங்கப்பூர் தமிழ் இலக்கியம், தமிழ்க் கல்வி பற்றி சுப. திண்ணப்பன், ஏ.ரா. சிவகுமாரன் ஆகியோ ரின் இரண்டு கட்டுரைகளும், இலண்டனிலிருந்து நூலக வியலாளர் என். செல்வராஜா எழுதிய ஈழத் தமிழரின் போர்க்கால இலக்கியங்களும் அவற்றின் வெளியீடு களும் என்ற தலைப்பிலான விரிவான கட்டுரையும் இடம்பெற்றுள்ளன.

இறுதிப் பிரிவான தமிழ்க் கல்வி, கலை நிறுவனங்கள் என்ற பகுதியில் தமிழகத்தின் தமிழ்ப் பல்கலைக் கழகங்கள், கல்வி, கலை நிறுவனங்கள் பற்றிய ஆறு கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. தமிழ்ச் செம்மொழிச் சிறப்பு மலரின் ஒவ்வொரு கட்டுரையின் இறுதியிலும் அக்கட்டுரையாசிரியரின் சுருக்கமானதும், போதிய தகவல்களைக் கொண்டதுமான அறிமுகக் குறிப்பு புகைப்படத்துடன் காணப்பட்டிருக்கின்றது. தமிழறிஞர்களைப் பரஸ்பரம் அறிந்து கொள்ளும் வாய்ப்பினை இது உலகளாவிய தமிழ் வாசகருக்கு ஓரளவு வழங்கியிருக்கின்றது.

சங்க இலக்கியப் பாடல் வரிகளை முழுமையாக உள்வாங்கிக் கொண்டு தமது தூரிகையின் துணையால் பலவண்ண ஓவியமாய் வடித்துத் தமிழக ஓவியர் திரு. மாருதி அவர்கள் இம்மலரில் ஆங்காங்கே இடம்பெறச் செய்துள்ளார். இது இம்மலரின் கலை இலக்கியத் தன்மையை மேம்படுத்திக் காட்டுகின்றது. இடைக்கிடையே ஓவியங்களுக்கான விளக்கம் சங்கப் பாடல்களின் துணையுடன் பதிவு செய்யப்பட்டுமுள்ளன. அழகானதும் கவர்ச்சிகரமானதுமான முகப்பட்டை ஓவியத்தைத் தமிழக ஓவியர் மணியம் செல்வன் வரைந்துள்ளார். மானும் மயிலும் கிளியும் இயற்கை வளங்களும் பார்த்திருக்க மலையுச்சியிலிருந்து அருவியாகப் பொங்கிவரும் வெண் நுரை பரப்பும் நீர் வீழ்ச்சியில் அகநானூறு, புறநானூறு மற்றும் சங்க இலக்கிய ஏடுகள் அனைத்தும் வரிசையாக மிதந்து வருவதாக முன்னட்டை ஓவியம் காட்சிப்படுத்தியிருக்கிறது. இம்மலரின் பிரதிகளைப் பெறவிரும்புவோர் இரா. மதிவாணன், உலகத் தமிழர் பதிப்பகம், 4, சௌராஷ்டிரா நகர் 7ஆம் தெரு, சூளைமேடு, சென்னை 600 094. என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி : 0091 44 65180155/9444111951 மின்னஞ்சல் முகவரி : eramathi@rediffmail.com)

மொத்தத்தில் மிக நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் இரண்டு தரமானதும் கனதியானதுமான சிறப்பு மலர்களைக் குறுகிய கால இடைவெளியில் கண்டு மகிழ்ந்த மனநிறைவினையே அலை வனையும் உலகு, தமிழ்ச் செம்மொழிச் சிறப்பு மலர் ஆகிய இரண்டு மலர்களும் எனக்கு வழங்கின. ❋

# பலியெனத் தருவேனே!

## புலவர் வெற்றியழகன்

ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு
அறிந்தே வாழ்பவன்நான் - இந்தப்
பாரினில் முதன்மொழி பைந்தமிழ் எனுமொழி
பாழ்பட விடுவேனா? -ஆறிலுஞ் சாவு

ஊரினில் இல்லை! உலகினில் இல்லை!
உளத்தினில் இல்லையடா - தமிழ்
சீருடன் இல்லை! சிறப்புடன் இல்லை!
சிதைந்திட விடுவேனா? -ஆறிலுஞ் சாவு

அரங்கினில் இல்லை! அலுவலில் இல்லை!
அரசினில் இல்லையடா - தமிழ்
திரையினில் இல்லை! தெருவினில் இல்லை!
தீய்ந்திட விடுவேனா? -ஆறிலுஞ் சாவு

பள்ளியில் இல்லை! பயிற்சியில் இல்லை!
பலகையில் இல்லையடா - தமிழ்
பிள்ளைகள் பேச்சில் பெயரினில் இல்லை!
பிய்ந்திட விடுவேனா? -ஆறிலுஞ் சாவு

கோவிலில் இல்லை! குடும்பத்தில் இல்லை!
கொள்கையில் இல்லையடா - தமிழ்
பாவினில் இல்லை! படைப்பினில் இல்லை!
பாழ்பட விடுவேனா? -ஆறிலுஞ் சாவு

எங்கிலும் எதிலும் எப்பணி தனிலும்
எந்தமிழ் கோலோச்ச - என்
பங்கினை ஆற்றிப் பைந்தமிழ்க் குயிரைப்
பலியெனத் தருவேனே! -ஆறிலுஞ் சாவு

# அயலகத் தமிழர் பன்னாட்டுக் கருத்தரங்கம்

அயலகத் தமிழர் வாழ்வும் இலக்கியமும் (Life and Literature of the Tamil living abroad and outside Tamilnadu in India) என்னும் கருப் பொருளை மையமாகக் கொண்ட பன்னாட்டுக் கருத்தரங்கம் ஒன்றினைத் தமிழ்நாடு-திருச்சி மாவட்டத்திலுள்ள தூயவளனார் கல்லூரி 2007 நவம்பர் 30, திசம்பர் 1, 2 நாள்களில் ஏற்பாடு செய்துள்ளது. இக்கல்லூரி வளாகத்திலுள்ள புதிய நூலகக் கட்டடத்தில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கை இக்கல்லூரியின் தமிழாய்வுத் துறையும் தமிழ் எழுத்தாளர் இணையத் தளமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

ஐரோப்பிய நாடுகளுக்கும் தென் கிழக்காசிய, ஆப்பிரிக்க நாடுகளுக்கும் பொருளீட்டப் புலம்பெயர்ந்தும் குடியுரிமை பெற்றும் வாழும் தமிழர்களின் இன்றைய வாழ்வின் பரிமாணங்களையும் படைப்பிலக்கியங்களையும் தமிழாய்வுப் போக்குகளையும் வெளிக்கொணருவதை நோக்கமாகவும் புலம்பெயர்ந்து வாழும் இந்திய, பன்னாட்டுத் தமிழ் அறிஞர்களின் படைப்பிலக்கியம், ஆராய்ச்சி, வரலாறு ஆகிய பல்திற சாதனைகளை உலகறியச் செய்தலை இலக்காகவும் கொண்டு, நடைபெறவுள்ள இக்கருத்தரங்கம் குறித்த முழுமையான தகவல்களைப் பெற www.tamilthinai.com அல்லது www.tamilwriters.com ஆகிய இணையத் தளங்களுடன் தொடர்பு கொள்ளலாம் அல்லது முனைவர் தி. நெடுஞ்செழியன் (0091 4364 227142/9443214142) முனைவர் அந்தோணி குருசு (0091 431 2721401/2760933) ஆகியோருடனும் தொடர்பு கொள்ளலாம்.

# நான் தமிழ்த் தேசியம் பேசுவது ஏன்?

பழ. நெடுமாறன்

*தமிழர் தலைவர் பழ. நெடுமாறன் அவர்கள் அண்மையில் தினமணி இதழின் ஆசிரியர் திரு. கே. வைத்தியநாதன் அவர்களுக்குச் சிறப்புச் செவ்வி அளித்திருந்தார். அச் செவ்வியிலிருந்து ஈழத் தமிழர்கள் தொடர்பானவற்றை இங்கே தந்துள்ளோம். - ஆசிரியர்.*



**ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும் என்று நினைக் கிறீர்களா?**

இந்தியா தவிர வேறு யாரும் தலையிட நாம் அனுமதிக்கக் கூடாது என்று நினைக்கிறேன். அப்படி அனுமதிப்பது இந்தியாவின் நலனுக்கு உகந்ததல்ல என்றும் நான் நினைக்கிறேன். இதை இந்திரா அம்மையார் புரிந்துகொண்டிருந்தார். இவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

**இந்திரா காந்தியின் அணுகுமுறை இந்த விஷயத்தில் எப்படி இருந்தது?**

1983ஆம் ஆண்டு கொழும்பில் இனக் கலவரம் நடைபெற்று சுமார் 3,000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அப்போது பிரதமராக இருந்த இந்திரா அம்மையார் அன்றைய வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவையும் வெளியுறவுத் துறை ஆலோசகர் ஜி. பார்த்தசாரதியையும் கொழும்புக்கு அனுப்பி வைத்தார். இலங்கை ஒரு சிறிய நாடு. அங்கு நடக்கும் சிறிய பிரச்சினைதானே என்று கருதாமல் இரண்டு சீனியர்களை அனுப்பி வைத்து, இலங்கை அதிபர் ஜெயவர்த்தனேவுக்கு ஒரு விஷயத்தை உணர்த்த விரும்பினார். அதாவது, 'இந்தியா இந்த விஷயத்தைச் சாதாரண விஷயமாக எடுத்துக் கொள்ளாது, ஜாக்கிரதை' என்பதைத் தான் வெளியுறவுத் துறை அமைச்சரையும் அமைச்சர் அந்தஸ்திலுள்ள மூத்த வெளியுறவுத் துறை ஆலோசகரையும் அனுப்புவதன் மூலம் உணர்த்தினார் இந்திரா அம்மையார். உலக நாடுகளுக்கும் 'இந்த விஷயத்தில் யாரும் தலையிடுவதை இந்தியா விரும்பாது' என்று மறைமுகமாக எச்சரிக்கும் செய்கை அது. இவ்வளவு செய்தும், ஜெயவர்த்தனா தனது வாக்குறுதியைக் காப்பாற்றாமல் மழுப்புகிறார் என்று தெரிந்ததும், போராளிக் குழுக்களை அழைத்து வந்து, நமது இராணுவத்தின் மூலம் அவர்களுக்கும் பயிற்சி அளித்தார். ஒருவேளை, இந்திரா அம்மையார் உயிரோடு இருந்திருந்தால், இலங்கைப் பிரச்சினை எப்போதோ சுமுகமான ஒரு முடிவுக்கு வந்திருக்கும் என்பதுதான் எனது கருத்து.

**தமிழ் ஈழத்தை இந்திரா காந்தி ஆதரித்திருப்பார் என்று நீங்கள் கருதுகிறீர்களா?**

நான் அப்படிச் சொல்லவில்லை. ஆரம்பம் முதலே இந்திரா அம்மையார் தமிழ் ஈழத்தை ஆதரிக்கவில்லை. ஆனால், ஈழத் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலும் அதை இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்பதிலும் இந்திரா அம்மையார் தீர்மானமாக இருந்தார்.

**இராஜீவ் காந்தியின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட என்ன காரணம்?**

இராஜீவ் காந்தி வந்தவுடன், இலங்கைப் பிரச்சினையைப் பற்றி நன்றாகத் தெரிந்திருந்த, தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏ.பி. வெங்கடேஸ்வரனை இராஜிநாமா செய்யச் சொன்னதுதான், ஈழப் பிரச்சினைக்கு ஏற்பட்ட மிகப்பெரிய பின்னடைவு. ஜி. பார்த்தசாரதியும் நரசிம்மராவும் கையாண்ட ஈழப் பிரச்சினையை, இரமேஷ் பண்டாரியை அனுப்பிப் பேசச் சொன்ன போது, இராஜீவ் அரசு இந்தப் பிரச்சினையை முக்கியமாகக் கருதவில்லை என்கிற தோற்றத்தை இலங்கைக்கும் உலக நாடுகளுக்கும் ஏற்படுத்திவிட்டார். அப்போது வெளியுறவுக் கொள்கையில் இலங்கைப் பிரச்சினைக்கு ஏற்பட்ட பின்னடைவுதான் இன்றைய நிலைமைக்குக் காரணம்.

**இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்வது இந்தியாவின் நலனுக்கு உகந்ததல்ல என்று கூறினீர்கள். அது ஏன்?**

இந்தியாவின் வடபகுதிதான் பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளின் தாக்குதலுக்கு உட்படும் பகுதியாக இருக்கிறதே தவிர, இந்தியாவின் தென்பகுதி அபாயம் இல்லாத பகுதியாக இருந்து வந்திருக்கிறது. இலங்கையைத் தவிர இங்கே வேறு அண்டை நாடு எதுவும் நமக்குக் கிடையாது. நமக்கு ஆபத்தே இல்லாமல் இருந்த தென்பகுதியில் இப்போது பாகிஸ்தான், இஸ்ரேல் என்று பல அந்நிய சக்திகள் காலூன்றத் தொடங்கிவிட்டன. இந்தியாவுக்குத் தலைவலி கொடுக்க இலங்கையைத் தளமாக்க நினைக்கின்றன நமக்கு விரோதமான சக்திகள்.

**இந்திரா காந்தியின் காலத்தில் அந்நியத் தலையீடு இலங்கையில் இல்லவே இல்லை என்கிறீர்களா?**

நிச்சயமாக இருக்கவில்லை. ஜெயவர்த்தனே அமெரிக்காவுடன் இராணுவத் தளம் அமைப்பது பற்றிப் பேச இருக்கிறார் என்பது தெரிந்ததும், இந்திரா அம்மை

யார் நாடாளுமன்றத்தில் ஓர் எச்சரிக்கை விடுத்தார். 'இந்து மகா சமுத்திரத்தில் எந்த அந்நிய சக்தி நுழைய முயற்சித்தாலும் அது எங்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கையாகத்தான் இந்தியா கருதும்' என்று அவர் சொன்னதுதான் தாமதம், அந்த முயற்சி கைவிடப் பட்டது. இப்போது, இலங்கை இராணுவத்தின் விமானங் களையும் பாகிஸ்தானியர்கள்தாம் ஓட்டுகின்றனர். நாம் பயந்து போய், சீனாவிடமும், பாகிஸ்தானிடமும் இலங்கை ஆயுதம் வாங்கிவிடக்கூடாது என்பதற்காக இந்தியா ஆயுதம் கொடுக்கிறது என்று நமது பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் கூறுகிறார். இந்தியா விற்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்தைத் தில்லியிலிருக்கும் நமது அரசு உணரவே இல்லை.

**இந்திய அரசு விடுதலைப் புலிகளுக்கு நேரடி ஆதரவு கொடுக்க வேண்டும் என்பதுதான் உங்கள் கருத்தா?**

நேரடி ஆதரவு தரவேண்டும் என்றெல்லாம் நான் சொல்லவில்லை. எங்கேயோ இருக்கும் நார்வே இந்தப் பிரச்சினையில் பஞ்சாயத்து செய்யும்படி விட்டது இந்திய அரசு செய்த மிகப்பெரிய தவறு. இப்போது இந்தப் பிரச்சினை தீர்ந்தாலும்கூட அதில் இந்தியாவின் பங்கு இல்லை என்றாகிவிடுகிறதே, அதுதான் தவறு என்கிறேன்.

**அப்படியொரு நிலைப்பாடு எடுத்து நாம் அமைதிப் படையை அனுப்பி அவமானப்பட்டது போதாதா? இன்னொரு முறை இந்தியா இந்தப் பிரச்சினையில் தலையிட்டுத் தலைகுனிந்து நிற்கவேண்டும் என்பது தான் உங்கள் விருப்பமா?**

தப்பான நிலைப்பாட்டை அப்போது எடுத்ததால் தானே அப்படியொரு நிலைமை ஏற்பட்டது. அமைதிப் படை ஆயுதம் தாங்க வேண்டிய அவசியம் என்ன? 'நமது வீரர்கள் வாலிபால் விளையாடுகிறார்கள். இந்திய வீரர்கள்தாம் செத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று ஜெயவர்த்தனே சந்தோஷமாகச் சொன்னார். 'அந்த மோதலுக்குக் காரணம் விடுதலைப்புலிகள் அல்ல' என்று இந்திய அமைதிப்படைக்குத் தலைமை தாங்கிய திபேந்தர் சிங் தான் எழுதிய புத்தகத்தில் தெளிவாகச் சொல்கிறார். மோதலுக்குக் காரணம் 'ரா' உளவுத்துறை செய்த தவறு. இந்த மோதல் ஏற்பட வேண்டும் என்று ஜெயவர்த்தனே விரும்பினார். அது நடந்தது.

**இராஜீவ் காந்தியைக் கொலை செய்தது மிகப் பெரிய தவறில்லையா? அதற்குப் பிறகும் நாம் எப்படி விடுதலைப் புலிகளை ஆதரிக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்?**

யார் யாரைக் கொலை செய்தாலும் அது தவறு என்று சொல்பவன் நான். அதுமட்டுமல்ல, நேரு குடும் பத்துடன் மிகவும் நெருக்கமாகப் பழகியவன். ஏழாயிரம் ஈழத்தமிழர்களை இந்திய இராணுவம் படுகொலை செய்ததே என்று அவர்களும், இராஜீவ் காந்தியை விடுதலைப்புலிகள் கொன்றுவிட்டனர் என்று நாமும் சொல்லிக் கொண்டிருப்பதால் என்ன இலாபம்? நமது நாட்டிற்குள் நுழைந்து நமது முன்னாள் பிரதமரை அவர்கள் கொன்றுவிட்டனர் என்கிறோம் நாம். எங்கள் நாட்டிற்குள் நுழைந்து எங்கள் அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது உங்கள் இராணுவம் என்கிறார்கள் அவர்கள். இது விடுதலைப் புலிகளின் பிரச்சினையோ, ஈழத் தமிழர் பிரச்சினையோ அல்ல. இந்தியாவுக்கே ஆபத்தை விளைவிக்கும் பிரச்சினையாக மாறிவிட்டிருக் கும் நிலையில், நாம் மௌனம் சாதிப்பது விசித்திரமாக இருக்கிறது.

**இந்தப் பிரச்சினையில் திமுக மற்றும் அதிமுகவின் நிலைப்பாடு எப்படி இருப்பதாகக் கருதுகிறீர்கள்?**

அந்த இரண்டு கட்சிகளுமே, சாப்பாட்டிற்கு ஊறுகாய் தொட்டுக் கொள்வதுபோலத்தான் ஈழத் தமிழர் பிரச்சினையை அணுகுகிறார்கள். நியாயமாக இந்தப் பிரச்சினையில், மத்திய அரசு எப்படிச் செயல் படவேண்டும் என்று சொல்ல வேண்டிய பொறுப்பு இங்கே தமிழகத்தில் ஆட்சி செய்யும் கட்சியிடம் தானே இருக்கிறது? ஆனால், முதல்வர் கருணாநிதி திரும்பத் திரும்ப 'மத்திய அரசின் முடிவுதான் எங்கள் முடிவு' என்றல்லவா சொல்கிறார். மேற்கு வங்கத்தில் ஃபராக்கா அணைப் பிரச்சினை வந்தபோது, அன்றைய முதல்வர் ஜோதிபாசு வங்காளதேச அதிபருடன் பேசி எடுத்த முடிவைத்தானே மத்திய அரசு அங்கீகரித்து ஒப்பந்தம் போட்டது. ஜோதிபாசுவுக்கு இருந்த துணிவும் தமிழர் களின் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்கிற உள்ளார்ந்த உணர்வும் முதல்வர் கருணாநிதிக்கு இல்லையே ஏன்?

**தமிழ் ஈழம் அமையுமேயானால் அது இந்தியாவுக்கு ஆபத்தாக இருக்காதா? நாளைக்கே தமிழகம் பிரிந்துபோக அது வழிகோலாதா?**

அது தவறான கண்ணோட்டம். கிழக்குப் பாகிஸ் தான் பிரிந்து வங்காளதேசம் உருவானதற்கு இந்தியா துணைபுரிந்தது. ஒருகாலத்தில் ஒன்றாகத்தான் வங்காளம் இருந்தது. இரண்டு பகுதிகளுமே வங்காள மொழி பேசும் பகுதிதான். மேற்கு வங்கம் பிரிவினை கேட்கிறதா என்ன? தமிழ்நாடும், யாழ்ப்பாணமும் ஒரு காலத்திலும் ஒரே நாடாக இருந்ததில்லை. வங்காளி மீது ஏற்படாத சந்தேகம் தமிழன் மீது மட்டும் ஏன் வருகிறது என்பது தான் எனது கேள்வி. ஆகவே, இந்த வாதத்திற்கு அர்த்தமில்லை.

**நிறைவாக, ஒரு கேள்வி, தமிழகத்தின் இன்றைய அரசியல் நிலைமை பற்றி நீங்கள் என்னதான் நினைக்கிறீர்கள்?**

மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். ஆட்சியும் அதிகாரமும் சுயநலத்துக்காக மட்டும் பயன்படுத்தப் படுகிறது என்பதையும் புரிந்துகொண்டிருக்கிறார்கள். சரியான மாற்றுக்காக மக்கள் காத்திருக்கிறார்கள் என்று தான் நான் நினைக்கிறேன். அந்த மாற்றம் ஏற்படும் நாள் வெகுதூரத்தில் இல்லை. *நன்றி : தினமணி*

# முன்னாள் அமைச்சர் இராம. வீரப்பன் தலைமையில்

# செல்வி சோபனாவின் ஆடல் அரங்கேற்றம்



உலகத் தமிழர் மையத்தின் பொதுச் செயலாளரும், இலண்டன் சுடரொளி இதழின் தமிழகப் பிரதிநிதியுமான உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன் அவர்களின் மகள் செல்வி சோபனாவின் ஆடல் (பரதநாட்டிய) அரங்கேற்றம் சென்னை மியூசிக் அகாடெமி அரங்கில் 20-7-07 அன்று சிறப்பாக நடந்தேறியது.

முன்னாள் அமைச்சரும் கம்பன் கழகத் தலைவருமான இராம. வீரப்பன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் ஔவை நடராசன், பாரதியார் சங்கத் தலைவர் முதுநிலை வழக்கறிஞர் இரா. காந்தி, அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ஏ. ஜெகநாதன், பரத நாட்டியக் கலைஞர் கலைமாமணி ஷோபனா ஆகியோர் பங்கேற்று வாழ்த்திப் பேசினார்கள். முன்னதாக, இரா. மதிவாணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். செல்வி சோபனா நன்றி தெரிவித்துப் பேசினார். திருமதி. நந்தினி தொகுத்து வழங்கினார்.

இரா. மதிவாணன் அவர்களால் தொகுக்கப் பெற்ற 'ஆதித் தமிழரின் ஆடற்கலை' என்னும் நூலினை இராம. வீரப்பன் வெளியிட, டாக்டர் ஏ. ஜெகநாதன் முதல் படியைப் பெற்றுக் கொண்டார். விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் இந்நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இவ்விழாவில் வாழ்த்திப் பேசிய முன்னாள் அமைச்சர் இராம. வீரப்பன் மற்றும் முனைவர் ஔவை நடராசன் ஆகியோர் நிகழ்த்திய உரைகளின் சுருக்கம் வருமாறு.

## இராம. வீரப்பன் உரை :

இன்று ஆடல் அரங்கேற்றம் கண்ட செல்வி சோபனா பலவிதமான திறமைகளைப் பெற்றவர் என்பதோடு நீண்ட காலமாகவே கலைத் துறையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றுவதோடு பல வெளிநாடுகளுக்கும் சென்று புகழ்பெற்றுக் கொண்டிருக்கிறவர். ஏற்கெனவே பல மேடைகளில் ஆடியிருக்கிறார்; பாடியிருக்கிறார். இத்தகைய நிலையில் இவ்வளவு காலம் கழிந்து இந்த அரங்கேற்றத்தை நடத்துவதே இக்கலைமீது இவர் கொண்டிருக்கிற ஈடுபாட்டை நிரூபித்துக் கொண்டிருக்கிறது. தமக்கு நாட்டியம் கற்றுத் தந்த ஆசிரியருக்குச் செலுத்தும் நன்றியுணர்வையும் காட்டுகிறது.

நம் நண்பர் மதிவாணன் அவர்கள் மிகச்சிறந்த தமிழுணர்வு மிக்க உலகத் தமிழர் மையத்தினுடைய பொறுப்பாளராக இருந்து உலகம் முழுவதிலும் இருக்கிற தமிழர்களுடன் தொடர்புகளைப் பெருக்கிக் கொண்டிருக்கிற ஓர் அற்புதமான மனிதர். அவர் பெற்றெடுத்த செல்வி சோபனா சிறந்த நாட்டியக் கலைஞராகத் திகழ்கிறார் என்பது மட்டுமல்ல. கல்வித்துறையில்-நுண்ணுயிரித் துறையில் முது அறிவியல் பட்டமும் பெற்றவர். அமெரிக்க நாட்டிற்கும் மேற்படிப்புக்காகச் செல்ல இருக்கிறார் என்கிற செய்தியையும் கேள்விப்பட்டேன்.

நாட்டியம் என்பது தமிழ் மக்களின் வாழ்க்கையோடு இணைந்த கலை. ஆற்றல்மிக்க இக்கலையை யாரெல்லாம் வாழ்க்கையில் கற்றுக்கொள்ள முடியுமோ அவர்களெல்லாம் கற்றுக் கொள்ளுவது மிகச் சிறந்த செயலாகும். சிறு வயதில் கற்றுக்கொண்டு, பல்வேறு காரணங்களால் பின்னாளில் அதை விட்டுவிடுகிற நிலை பரவலாக இருக்கிறது. தொழிலுக்காகவோ அல்லது பிற காரணங்களுக்காவோ அதனைக் கற்றுக் கொள்ளுவதை விட நம் வாழ்வின் ஒரு முக்கிய அங்கமாகக் கற்பதே சிறந்ததாகும். வாழ்வின் ஒரு பகுதியாகக் கல்வி, விளையாட்டு மு(...)ானவற்றைக் கற்பதைப் போன்று கலையையும் நம் பிள்ளைகள் கற்றுக் கொள்ள வேண்டும். சிறந்த மனிதர்களாக-குடிமக்களாக மாறுவதற்கு இத்தகைய கலைகள் பெரிதும் வாய்ப்பளிக்கின்றன.

செல்வி சோபனாவைப் பெற்றெடுத்து, ஆளாக்கிப் படிக்க வைத்து, அற்புதமான அறிவாற்றலும் கலை நயமும் மிகுந்த பெண்ணாக வளர்த்திருக்கிற அவரது பெற்றோர்களான மதிவாணன் அவர்களையும் கோமதி அவர்களையும் பாராட்டுகிறேன்.

இந்த அற்புதமான நாட்டியத்தை உருவாக்கியதோடு குரலிசைச் செல்வியாக இருக்கிற சோபனாவை நாட்டியச் செல்வியாக மாற்றியிருக்கிற நடன ஆசிரியர் சூரிய நாராயணமூர்த்தி அவர்கள் மிகச்சிறந்த, அனுபவம் மிக்க, ஆற்றல் மிக்க ஆடலாசிரியர் என்பதை இங்கு நிரூபித்திருக்கிறார். அவருக்கும் எனது பாராட்டுகள்.

இங்கே மிகச் சிறந்த நட்டியத்தை ஆடிக் காட்டிய குரலிசைச் செல்வியாக இருக்கிற சோபனா மதிவாணன் இனிமேல் நாட்டியச் செல்வியாகவும் உலகம் முழுவதும் சென்று புகழ் பெற்று விளங்கவேண்டும் என்று வாழ்த்துகிறேன். அதற்குக் காரணமாக இருக்கிற அவரின் பெற்றோர்களும், அப்பெற்றோர்களைப் பெற்றெடுத்த தாத்தா-பாட்டிகளும் சோபனாவின் நாட்டியத்தைப் பார்த்து மகிழ்கிற இந்த அற்புதமான சூழலில் சோபனா இன்னும் மிகச் சிறந்த பெருமையைக் கல்வி, ஆராய்ச்சி இவைகளில் மட்டுமல்லாது நாட்டியத்திலும் இசையிலும் பெறவேண்டும் என்று வாழ்த்தி அமைகிறேன்.

## ஔவை நடராசன் உரை :

ஆடற்கலையில் சிறந்து விளங்குகிற சோபனாவின் பெற்றோர் மதிவாணன் அவர்களையும், கோமதி அவர்களையும் நான் பல்லாண்டுகளாக அறிவேன். சோபனா குழந்தைப் பருவத்திலிருந்தே தன்னுடைய திறமையாலும் பெருமையாலும் நற்பெயர் எடுத்தவர். இளவயதிலேயே ஆடத்தெரிந்த பெண், பாடத் தெரிந்த பெண், படிக்கத் தெரிந்த பெண். பெண்ணுக்கு 3 தகுதி தான் சொல்லுவார்கள். ஆடல், பாடல், அழகு என்ற மூன்றும் சேர்ந்திருக்க வேண்டும் என்பார்கள். ஆடல், பாடல், அழகு என்பதோடு 4 ஆவதாக அறிவும் சேர்ந்த பெண் சோபனா.

சோபனா படித்திருக்கிற படிப்பிருக்கிறதே அது ரொம்ப நுட்பமான படிப்பு. ஒருகாலத்தில் நாட்டியம் கற்றுக்கொண்ட பெண்களெல்லாம் கல்விப் பயிற்சியை விட ஆசிரியர் சொல்லிக் கொடுக்கிற திறமையை மட்டும் வைத்துக்கொண்டு ஆடுவார்கள். ஆனால், இப்போது வளர்ந்து வரும் இளம்பிள்ளைகளெல்லாம் கல்வியில் மிகவும் மேம்பட்டவர்கள். எனவே கல்விச் சிந்தனையோடு கலைகளை வளர்க்கத் தொடங்கும் பொழுது கலைகள் பெரிய மாற்றத்தைப் பெறும், பெரிய சிறப்பைப் பெறும்.

சோபனா ஆடிய ஆட்டத்தைப் பார்த்தால் கால்களை எடுத்து வைத்த நடப்பிலும், கைகளை அசைத்துக் காட்டிய அடைவிலும், கண்களில் குறிப்பை உணர்த்திக் காட்டிய நுட்பத்திலும் பார்த்தால் இது கற்றுத் தந்து பெற்றதைவிடத் தானாகவே அனுபவத்தால் உற்றுப்பெற்ற அறிவும் அதிலே தெரிகிறது. இது ஒரு பெரிய சிறப்பாகும்.

நண்பர் மதிவாணன் அவர்கள் உலகமெலாம் சென்று தமிழ்ப் பணி ஆற்றி வருபவர். சோபனாவும் அப்படி ஒரு மாபெரும் வெற்றியைப் பெறவேண்டும் என்று நான் மகிழ்ச்சியோடு வாழ்த்துகிறேன்.

பரதம் என்று சொன்னாலே ''வளைவது'' என்றுதான் பொருள். ரொம்ப பேர் அதுக்கும் ஒரு கதை கட்டிப் பரத முனிவர் உருவாக்கியதாகச் சொல்லிட்டாங்க. சாமியார்களுக்கெல்லாம் வராது இது. வளைவது என்பது இயல்பாக உடம்பை வளைவதும், நெளிவதும் தான் பரதம்.

இந்த பரதம் என்ற கலை பல்லாயிரம் உணர்ச்சிகளை சொல்லிக்காட்டுவது என்பதனால் பரந்து பட்ட உணர்ச்சிகளைக் கொண்டதனால் பரதம்னு பேரு. இது தான் அதனுடைய அடிப்படை. இதை நன்றாக உணர்ந்து சோபனா இங்கு நடனமாடியதைப் பார்த்தோம். பெண் குழந்தைகளைப் பெற்றவர்களுக்குத்தான் இந்தப் பெரிய வாய்ப்பு வரும். காரணம், குழந்தையை நடக்கும்போது, அடம்பிடிக்கும்போது, அழுகிறபோது, எழுகிறபோது, வருகிறவர்களைப் பார்த்துத் தொழுகிறபோது அல்லது தடுக்கி விழுகிறபோது என்றெல்லாம் குழந்தையின் அசைவினைக் கண்டு மகிழ்ந்த தாய் தந்தையர் நடனக் கலையில் அரங்கேற்றம் செய்வதைக் காண்பது ஒரு மகிழ்ச்சியைத் தருவதாகும். அதற்கு அடுத்து அவர்கள் காண விரும்புவது மகளினுடைய திருமண நிகழ்ச்சியாகும்.

இங்கே பார்த்தீர்களானால், தாத்தா பாட்டி வந்திருக்கிறார்கள். அது வேறு யாருக்குக் கிடைக்கும்? நம்ம பேத்தி ஆடுகிறாள் பார் என்று அடைகிற மகிழ்ச்சி வேறு யாருக்கு வரும்? அதுபோல நண்பர் மதிவாணனுக்கும், கோமதிக்கும் தன்னுடைய மகள் ஆடுகிற ஆடல் எவ்வளவு பெரிய மகிழ்ச்சியைத் தந்திருக்கும். மேடையில் ஆடுகிற அழகும் நம்மை மிகவும் கவர்கிறது.

இதுல இன்னொரு சிறப்பு என்னவென்றால் இந்தப் பாடல்களை மிகவும் நன்றாகத் தெரிவு செய்திருக்கிறார்கள். குறிப்பாக உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் ‘தமிழே உயிரே வணக்கம்! தாய் பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்’ என்னும் பாடலுக்கு சோபனா நடனமாடியதைப் பார்த்தோம். தமிழைப் பழித்தவனைக் கைவாள் அழிக்கும் என்கிற வரிகளுக்கு, ஓங்கிய கைகளைக் காட்டி சோபனா பார்த்த பார்வை - அந்தப் பார்வையில் நீர்த்துளிகளோடு கலந்த தீப்பொறிகளைப் பார்த்து நடனக் கலையின் முழு உணர்வுகளையும் நான் கண்டு மகிழ்ந்தேன்.

எனவே, இனிய தமிழ்ப் பாடல்களை மிக அழகாக உணர்ந்து, இந்தக் குறிப்பைக் காட்டுகிற ஒரு திறன் இருக்கிறதே... அது ரொம்பவும் சிறப்பாகும்.

இந்தக் கலையினுடைய திறன்களைத் தெரிந்த சோபனாவை நான் மகிழ்ச்சியோடு வாழ்த்துகிறேன். இன்னும் இரண்டு மூன்று திங்களுக்குள்ளேயே சோபனா அமெரிக்க நாட்டில் மேற்படிப்பு படிக்க செல்லும் வாய்ப்பு இருக்கிறது. எனவே அமெரிக்கா செல்லுகிற சோபனா படிப்பைத் தொடர்வது போலப் பரதத்தையும் தொடர வேண்டும், நம் தமிழ்க் கலையை உலகெங்கும் பரப்ப வேண்டும் என்று நான் மகிழ்ச்சியோடு வாழ்த்துகிறேன். ✱

# நாதஸ்வர தவில் இசை அரங்கம்

**நாதஸ்வரம்:**
கோண்டாவில் பஞ்சமூர்த்தி, குமரேஸ், இடும்பாவணம் இளையராஜா

**தவில்:**
திருவாளப்புத்தூர் கலியமூர்த்தி, மன்னார்குடி வாசுதேவன்,
இடும்பாவணம் கண்ணன் திருராமேஸ்வரம் ராதாகிருஷ்ணன்

**தாளம்:** சுவாமிநாதன்

**இடம் :**
**DULWICH COLLEGE,**
Dulwich, London SE21 7LD

**காலம்:**
**09.09.2007**
ஞாயிறு மாலை 6 மணி



**தொடர்புகட்கு:**
தெய்வேந்திரன்: 07711 225 336,
பஞ்சமூர்த்தி: 07944 712 969

Printed by Vasan Printers 020 8646 2885

# மலேசியா - கோலாலம்பூரில் நடைபெற்ற
# 10ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டுக் காட்சிகள்























# கரோ தமிழ்ச் சங்க மூத்தோர் நிலையத்தின் கலாச்சார விழா காட்சிகள்



குத்து விளக்கேற்றல்



சுடர் ஒளி போற்றி இசை



முதிர் பெண்களின் கும்மியாட்டம்



பங்கேற்ற பார்வையாளர்களின் ஒரு பகுதி




தலைவருக்குப் பொன்னாடை




திருமதி. யோகா தில்லைநாதன் சிறப்பிக்கப் பெறுகிறார்.



"காலத்தின் கோலம்" குறுநாடகக் காட்சி



யோகா தில்லைநாதன்



ஹரத் தோமஸ்



தரிசனம்
தரணியெங்கும் தமிழொளி பரவிட ...
உலகத் தமிழரின் உணர்வுகளை
ஒளிப்படுத்த ஒரு தொலைக்காட்சி
Tharisanam TV : Europe
TUNING PARAMETERS
Satellite Name : Eutelsat HotBird (13oE)
Frequency : 11.470 GHz
Polarization: Vertical
Symbol Rate : 27.500
FEC: 5/6
www.tharisanam.tv
Mathuram TV is a new tamil television
channel for the Europe!
Information can be found on
www.mathuramtv.tv
Special Introduction Offer
£99*
*Conditions apply
Further details: 020 8920 2111
தமிழன் என்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா..
தரிசனம்
செய்தி நேரம்
தரிசனம்
மதுரம்
72 Chase Side, Southgate, London N14 5PH
Fax: 020 8886 7508

# Srilankan Tamils:
# Anatomy of Indian Involvement

A. K. VERMA

**(The author was the Chief of R & AW at the time of IPKF operations. For too long, Indian intelligence has been blamed for the debacle in Sri Lanka. For the first time, the developments as seen by the Indian intelligence then have been presented)**

The core problem in Sri Lanka is one of identity. The Tamils want to preserve their identity. The Sinhalas want to overrun it. No solution has emerged ever since Sri Lanka became a republic almost sixty years ago.

Today, the Sri Lankan Tamil quest for identity has crystallized around the demand for Ealam. Ironically, this milestone has been reached only because the Sinhalas, in various negotiations conducted through the period, refused to be generous to let the Tamils live as equal citizens and not a suppressed minority. Originally, the Sri Lankan Tamil leadership was moderate, willing to be a part of federal Sri Lanka, provided some minimum conditions were satisfied like recognition of Tamil as a national language, autonomy in the North East of Sri Lanka, equal opportunity in education and employment and non colonization of predominantly Tamil areas by non Tamil Srilankans. Sinhala obduracy and consistent bad faith led to the emergence of young militants who took over the leadership of the Tamil struggle from moderates. Today, as in the past more than 20 years, the shots in the movement are called by V. Prabakaran, the LTTE Supremo.

His experience with the Sinhalas has taught him that the Sinhala leadership of whatever hue cannot be trusted. He has implicit faith that Ealam is an achievable objective and he will be the one who will lead his people to this destination. His confidence in himself and his mission makes him in his own eyes the sole arbitrator of what can or cannot be accepted on behalf of the Sri Lankan Tamils from the Sri Lankan Government.

Unfortunately, the Government of India has been slow in grasping this truth. The failure is largely systemic because policy decisions in the past were often made without the benefit of well conducted policy research and analysis. Structures did not exist which could carry out an objective study of a situation, examining its short term and long term dynamics and throwing up a set of options with likely scenarios, for the policy maker to make his choice. It is evident that a study of this nature would try to reconcile various contradictions and their implications before recommending policy steps. In point of fact, policies those days were made through discussions in a core group, with rarely a position paper being ever presented to the discussants by anyone. No minutes were ever recorded and circulated after discussions which were often attended by bureaucratic overlords whose sole qualification for inclusion in the core group was their over lordship, not expertise, knowledge or understanding of the issues at stake. Bickering was not uncommon and were often initiated by these overlords whose objective would thereby be to register their over lordship.

India displayed no interest in the Sri Lankan Tamil ethnic questions till early 1980s. Prior to that the Indian interest had gravitated around the plantation Tamil immigrants from South India, who for more than 150 years had become the backbone of the plantation economy of Sri Lanka. After Sri Lanka's independence, the Sinhala authorities wanted them, now numbering a million with several of them with residence in Sri Lanka for more than one generation, to be treated as Indian citizens. The Sri Lankan Tamils looked upon the plantation Tamil as a distinct group, separate from them. Consequently, the former did not enter India's focus at that time.

But the rumblings of what was to follow had already started. The Sinhala leadership had displayed consistent insensitivity to implementation of their agreements with Tamil leadership over questions of regional autonomy and other rights of equal citizenship. The communal tempers were constantly rising and erupting in clashes. In July 1983, riots broke out which eventually catapulted ethnicity to the top of the agenda and marked that a point of no return had been reached for the Tamils of North East. The riots had erupted in Colombo and elsewhere after LTTE killed 13 Sri Lankan soldiers in the North on July 13 after an ambush. In these riots several Tamils were killed, including those locked up in prisons. There was credible suspicion of involvement of Sri Lankan Govt.

The riots led to an exodus of Tamils from Sri Lanka into Tamil Nadu, bringing into focus for the first time for the Government of India and people of Tamil Nadu the intensity of the ethnic question. The Indian reactions were guided by its political and strategic interests which required that while Sri Lanka must remain a united country, it should be advised against seeking a military solution of the ethnic problem through internal and external resources. Fearing that the influx might arouse fires of Tamil or Dravidian nationalism in Tamil Nadu also, it was felt, an option should be kept in hand to neutralize any effort by Sri Lankan Government to enforce a military solution in the North East. A decision was therefore taken to keep pressure on Sri Lanka by giving military training to Sri Lanka Tamil groups in India.

Actually there was no danger of igniting Tamil or Dravidian nationalism in Tamil Nadu. Dravidian nationalism had been just an intellectual concept of its progenitor

Periyar EV Ramaswami Naicker, not based in ground reality. This theoretical formulation had also not even included Sri Lankan Tamils in its sweep. Besides in 1962, the idea of even Tamil separatist nationalism had been buried for good by CN Annadurai, founder of DMK. Training of Sri Lankan Tamils in India was, therefore, not a good idea. The situation in Sri Lanka was not comparable to East Pakistan in 1971, which became Bangladesh towards the end of that year. As later events were to prove Sri Lankan Tamils did not hold themselves beholden to India for all the assistance they received.

As Sri Lanka, in panic, looked for assistance from outside powers like US, UK, even China and Pakistan, Indian diplomacy tried to checkmate such efforts and to persuade the SL Govt. to devolve substantially central powers to North and East by creating regional councils. Indian efforts came to naught as Sri Lanka feared such devolution would lead to secession, with Trincomalee becoming the natural capital of Ealam Tamil region. How deep such fears ran was illustrated later by how quickly the demerger of North and East was brought about by the Sri Lankan Govt. after the IPKF left Sri Lanka.

However, India did not give up and hosted meetings in Thimpu in July and August 1985 between Sri Lankan Government and Tamil militants. It was the first time that all the Tamil militant groups came together to make a united set of proposals to the Sri Lankan Government, seeking recognition of identity, self determination and dignity. Unfortunately, the Sri Lankan Government failed to appreciate that this was an occasion to explore various options with the young leadership of the Tamil movement. The talks failed as the Sri Lankan Government could not offer anything to meet the Tamil aspirations. It also became evident that Indian influence did not count for much either with the Sri Lankan Government or the Tamil militant groups.

Failure at Thimpu also indicated that the negotiating process had reached a dead end. Sri Lankan Government felt that it must get back to a military campaign to vanquish the Tamils. The siege of Jaffna followed, with bombing raids and starving of Tamils in the Jaffna Peninsula. This caused a tremendous sense of outrage in Tamil Nadu. India was left with no option except to send IAF relief flights over Jaffna to air drop supplies.

The July 29, 1987 Indo Sri Lankan agreement inevitably followed as yet another manifestation of Indian concerns for arresting the drift towards a long civil war. However, the agreement was another example of a flawed exercise. President Jayewardene of Sri Lanka might have sued for peace with the Tamils through the pact but obviously enough notice had not been taken of the seeds of insurrection which were sprouting in the South among militant Buddhist Sri Lankans who were dead set against any compromise towards Tamil aspirations. Their party JVP was an off shoot of the rural youth movement of the sixties. By 1980s it had acquired formidable strength in urban and quasi urban regions also. The agreement incorporated two major concessions to the Tamils, a single administrative unit with devolved powers in North and East with a single provincial council and elections to this council before December 1987, Prabhakaran's heart was not in it as by that time he had already decided that Tamils deserved nothing short of Eelam. Indian assumptions that he would accept less were illusory. Similarly the dream expectation that a merger of North and East would be genuinely acceptable to the Sri Lankan Government was unreal. The agreement was doomed from the beginning. Indian Intelligence had misgivings about this agreement and had advised against the induction of Indian Military into Sri Lanka which followed the signing of the agreement.

The intransigent attitude of Prabhakaran's LTTE came to surface soon enough. It refused to surrender all the arms which the agreement required. It refused to take part in the elections to the provincial council of the merged North East. The IPKF had in the meanwhile been inducted in Sri Lanka to organize de-militarization of the Tamil areas. In the absence of LTTE co-operation, the Indian authorities allowed IPKF to become coercive.

The Indian decision to opt for military operations against LTTE was based on the army assessment that IPKF would take no more than a week to drive LTTE to its knees. Indian Intelligence was not aware how this assessment had been arrived at. Unfortunately, this assessment was not subjected to any deeper scrutiny and became the basis for Indian army operations against the LTTE. Subsequent events proved that the so called assessment was just wishful thinking.

Nevertheless, the Indo Sri Lanka agreement served some useful purposes in that Sri Lanka agreed not to allow hostile use of Trincomalee port or VOA facilities in Sri Lanka for prejudiced propaganda. But IPKF had ultimately to withdraw, leaving over 1200 dead and with over 3000 injured. The strange spectacle was also witnessed of LTTE and the Sri Lankan Government, under the successor President Premdasa, cooperating against IPKF. The merger of North and East has now been undone. The current President Rajapakshe is offering no more than district development councils to the Tamils in a unitary set up which had been rejected way back in 1985 at Thimpu by the Tamils. The Sinhala leadership has come full circle in its attitude towards the Tamils.

Currently, the Indian Sri Lankan policy seems to be in a limbo. With LTTE banned in India for Rajiv Gandhi's assassination, India has no leverage with this group. India also cannot offer much more than lip sympathy to the Sri Lankan Government which is turning to foreign sources like Pakistan and China for augmenting their assets to be used against LTTE. The merger of North East no longer seems practical with Sri Lanka having successfully split the Tamils in the East under Karuna and created reservations in the minds of Muslim Tamils of East. Rajapakshe seems to be aiming at the attrition of LTTE, an objective which will not easily be met. The Tamils of North East are, therefore, destined to suffer a hapless fate for an unknown number of years in the future.

*(This paper was prepared for a talk at the National Defense College, New Delhi, on July16, 2007. The author can be reached at e-mail:verma_anandkumar@yahoo.com)*

# நூற்றாண்டு காணும் சாரணர் இயக்கம்

**பேராசிரியர் தமிழ்மணி அரங்க முருகையன்**
**தலைவர், உலகத் தமிழ்க் கழகம், பிரித்தானியக் கிளை**

உலகிலே அதிகமாக விற்பனையாகிய பொத்தகங்கள் எவை எவை என்ற வினா எழின் அதற்கு விடை: கிறித்தவ மத நூலாகிய விவிலியம் (The Bible), இசுலாமியரின் மத நூலாகிய திருக்குர் ஆன் (Al Koran), சீனப் புரட்சித் தலைவர் தோழர் மா சே துங்க் இயற்றிய சிறு சிவப்புப் பொத்தகம் (The Little Red Book), சாரணர் இயக்க இளைஞருக்கான கையேடு (Scouting for Boys) என்று தான் பெரும்பான்மையோர் விடை பகர்வர்.

முதலாவதாகக் குறிப்பிடப்பெற்ற விவிலியமும், இரண்டாவதாக வைத்தெண்ணப்பெற்ற திருக்குர் ஆனும் சமயத் தொடர்பானவை என்றும், மூன்றாவதான தோழர் மா சே துங்கின் சிறிய சிவப்புப் புத்தகம் பொதுவுடைமைக் கொள்கைகளை முன்பெல்லாம் ஏழைமையான மக்களைக் கொண்ட - உலகின் அதிக மக்கள் தொகையைக் கொண்ட சீன மக்கள் முன்னேற வழி வகை வகுப்பதான பொத்தகம் என்றும் அறிகையில் அவை எண்ணிக்கையில் மிக அதிகமாக விற்பனையானதில் வியப்பு ஒன்றும் இல்லையல்லவா?

ஆனால், என்ன காரணத்தால் சாரணர் இயக்க இளைஞருக்கான கையேடு குறிப்பிடத்தக்க அளவிலான எண்ணிக்கையில் விற்பனையானது? உலகம் நன்கறியாத-உலகப் புகழ் பெறாத ஒருவரால் இயற்றப்பட்ட அக்குறு நூல் இளைஞர்களை நல்வழிப் படுத்தவும், அவர்கள் வாழ்க்கையில் நம்பிக்கையோடு முன்னேறுவதற்கு வழிவகுப்பதுமாக அது அமைந்ததே அதற்குக் காரணம். அக்குறு நூல் எழுதப்பெற்றதற்கும் இப்போது நூறாண்டு காணும் சாரணர் இயக்கம் தோற்றம் பெறுவதற்கும் இற்றைக்கு ஓர் நூற்றாண்டுக்கு முன் நடந்த ஒரு போர்தான் காரணம் என்றறிய நமக்கெல்லாம் வியப்பே மேலிடும். ஆனால், அதுவே உண்மை!

## வரலாற்று முகாமை மிக்க போயர் (Boer) போர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆப்பிரிக்காவின் தெற்குப் பகுதி (தென்னாப்பிரிக்கா) மட்டுமின்றி உலகில் பல பகுதிகளிலும் அமைதியற்ற சூழல் காணப்பட்டது. பிரித்தானியா, பிரான்சு, ஆலந்து, போர்ச்சுகல் போன்ற பல ஐரோப்பிய நாடுகள் புதிதாகக் கண்டுபிடிக்கப் பெற்ற தொடர் குழல் துப்பாக்கி போன்ற எந்திரங்கள், நெடுந்தொலைவில் உள்ள இடங்களைத் தாக்கி அழித்துத் தங்கள் வலிமையை வெளிப்படுத்தி உலகின் நாற்றிசைப் பகுதிகளிலும் இருந்த பல நாடுகளையும் வென்று தங்கள் குடியேற்ற நாடுகளாக்கித் தங்கள் வல்லரசுத் தன்மையை வெளிப்படுத்த முனைந்திருந்த காலம். தென்னாப்பிரிக்காவில் மேப்கிங்க் (Mafking) என்ற இடத்தில் பிரித்தானிய நாடு ஒரு படைத்தளம் நிறுவி முழுத் தென்னாப்பிரிக்காவையும் கைப்பற்ற எண்ணியிருந்த நேரம்.

அக்கால கட்டத்தில் ஆலந்து நாட்டுப் பணவசதி படைத்த சீமான்கள் பலர் தென்னாப்பிரிக்காவில் தங்கள் கண்ணுக்கெட்டிய தொலைவு வரை உள்ள நிலப் பரப்பை வளைத்துப் போட்டு அதில் வேளாண்மை செய்தும் மாடுகளை மந்தை மந்தையாய் வளர்த்து விற்றும் நிறையப் பொருளீட்டிவந்தனர். போயர்கள் என்று தங்களை அழைத்துக்கொண்ட அவர்களுக்குப் பிரித்தானியப் படைகளின் உள்நோக்கம் தெரியவந்ததால் அதற்கு முட்டுக்கட்டை போடத் தீர்மானித்து எண்ணிக்கையில் ஆறாயிரம் (6,000) வரையான போயர்கள், ஆயிரம் படைவீரர்களையே கொண்ட பிரித்தானியப் படைத்தளத்தை முற்றுகை இட்டு ஆங்குள்ளோர் வெளியே செல்லாமலும், வெளியே இருந்து அவர்களுக்கு யாரும் உதவிக்கு வராமலும், உணவு மற்றும் ஏனைய தளவாடங்கள் வந்துசேராமலுமாக்கிப் படைத்தளத்தைக் கைப்பற்றிப் பிரித்தானியரை அதன் வழி வென்று ஆங்கிருந்து துரத்தத் தீர்மானித்தனர்.

அந்த நேரத்தில் மேப் கிங்க் என்ற அந்தத் தென்னாப்பிரிக்காவிலிருந்த பிரித்தானியப் படைத்தளத்துக்குப் பொறுப்பதிகாரியாய் இருந்தவர் தளபதி (கர்னல் Colonel) பேடன்-பவல் (Baden-Powell) (பிறந்த நாள் 22-2-1857) என்பவராவார். மேற்கு இலண்டனில் பேடிங்க்டன் (Paddington) பகுதியில் பிறந்த இராபர்ட் பேடன்-பவுல் தம் படிப்பை முடித்த பிறகு அந்நாளைய வழக்கப்படி இராணுவக் கல்லூரியில் சேர்ந்து பயின்று அங்கே பயின்றோருள் சிறந்தவராக இரண்டாவது தகைமை நிலை எய்திச் சிறப்பாகத் தேறி இந்திய நாட்டுப் படைத்தளம் ஒன்றில் பணியாற்ற அனுப்பப் பட்டார். வட்டார வரைபடம் உருவாக்கல் (Map Making) எதிரித் தரப்பினரைக் கண்காணித்து அவர்களின் வலிமையைக் குத்துமதிப்பாக அறிந்து எப்படி அவர்களைத் தாக்கலாம் அல்லது தாக்குப்பிடிக்கலாம் என்பன போன்றவற்றையெல்லாம் நன்கறிந்த தளபதி இராபர்ட் பேடன்-பவல் அதற்கடுத்துப் பால்கன் பகுதியிலும், பின்னர்த் தென்னாப்பிரிக்கா மற்றும் மால்ட்டாவிலும் பணியாற்ற அனுப்பப்பட்டுப் பின்னர்த் (மீண்டும்) தென்னாப்பிரிக்காவிலிருந்த மேப் கிங்க் படைத்தளத்துக்குப் பொறுப்பதிகாரியாய் அனுப்பப்பட்டிருந்தார்.

## தாக்குப் பிடிக்க முடிவு

தளபதி இராபர்ட் பேடன்-பவல் நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்தார். தம்மிடம் உள்ளவர்களோ வெறும் ஆயிரம் (1,000) படைவீரர்கள். எதிரி (போயர்கள்) தரப்பில் உள்ளவர்களோ ஆறாயிரம் (6,000) பேர்கள். தங்களிடம் உள்ளது போன்றே எதிரிகளிடமும் நவீன-காலத்திற்கேற்ற சுழல் துப்பாக்கிகள் அவற்றுக்குரிய சன்னம் எனப்படும் இரவைகள் போன்றவை கணிசமான

அளவு இருந்தன. நேருக்கு நேர் பொருதால் போயர்கள் எனப்படும் எதிரிகளைத் தங்களால் வெல்வது என்பது இயலாத காரியம். ஆனால், தங்களிடம் நெடுங் காலத்துக்குப் பிசையப்பம் (இரொட்டி Bread) செய்யப் போதுமான கோதுமை மாவும், உருளைக் கிழங்கு, சருக்கரை, மற்றும் ஏனைய உணவுக்கான பொருள்கள், கணிசமான அளவு மருந்துப் பொருள்கள் போன்றவை கைவயம் இருந்தன. இறைச்சி போன்றவை பெறத் தேவையான அளவில் மாடு போன்றவையும், மற்றும் கிணறு, ஓடை போன்ற தண்ணீர் வசதியும் இருந்தன.

ஆகவே, நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்துப் போயர்கள் முற்றுகையிட்டால் அதை எதிர்கொண்டு முற்றுகையைத் தோல்வியுறச் செய்யத் தாக்குப் பிடிப்பதே சிறந்தது என்று தளபதி பேடன்-பவல் முடிவெடுத்தார்.

நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்தோ அல்லது பார்க்காமலோ முறையான போர்ப்பயிற்சி பெறாத-போர்முறைச் சூக்குமங்களை அறியாத, ஆனால் அதிக எண்ணிக்கையிலான-அதாவது ஆறாயிரம் அளவிலான போயர்கள் படைத்தளத்தைச் சுற்றி வளைத்து முற்றுகை யிட்டனர். படைத்தளத்தினுள் எத்தனை போர்மறவர்கள் இருப்பார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது. ஆனால், எப்படியும் எதற்கும் படைத்தளத்தினுள் இருக்கும் படைவீரர்கள் வெளியே வந்துதானே தீரவேண்டும் என்பது அவர்களது கணிப்பு.

## பாரிமன்னரின் பறம்பு மலை முற்றுகை பேடன் - பவலுக்குக் கைகொடுத்ததோ?

கடையெழு வள்ளல்களுள் ஒருவரான தமிழ்க் குறுநிலமன்னர் பாரியின் பறம்பு மலையை மூவேந்தர் களும் இணைந்து முற்றுகையிட்டபோது வள்ளல் பாரியின் கெழுதகை நண்பரான கபிலர் தம் மாணவர் களின் ஒத்துழைப்போடு மூவேந்தர் முற்றுகையிட்ட பகுதியில் விளைந்திருந்த நெல் கதிர்களைத் தாம் பழக்கிய கிளிகளைக் கொண்டு கொய்து கொணர்ந்து உணவுப் பற்றாக்குறை ஏற்படாமல் பறம்பு மலையில் இயல்பாகவும் எளிதாகவும் கிடைத்த தேன், தினை, சுனைநீரோடு உண்டு அருந்தி வலிவோடு வாழ்ந்து முற்றுகையை முறியடித்ததைப்போல - இந்தியாவில் பணியாற்றியபோது பேடன்-பவல் பாரியின் பறம்பு மலையை மூவேந்தர் முற்றுகையிட்டதைப் படித்தறிந் திருப்பாரோ என்னவோ-வைகறையிலும், அந்தி மயங்கிய நேரத்திலும் பழக்கிய சிறுவர்களைப் பயன்படுத்தித் தங்களுக்கு அதாவது படைவீரர்களுக்குத் தேவையான பொருள்களைப் படைத்தளத்துக்கு வெளியேயிருந்து கொண்டுவரச் செய்தார்.

அவ்வப்போது போர்முறை உத்தியாகச் சீன வெடிகளைப் படைத்தளத்துக்கு வெளியே வெடிக்கச் செய்வார். திடீரென வெடிக்கும் அவ்வொலியைக் கேட்டு எதிர்த் தரப்பினரான போயர்கள் பீரங்கி வெடிக் கிறதோ என்று அஞ்சிப் போருக்கு ஆயத்தம் செய் வார்கள். சில சமயங்களில் என்ன செய்கிறோம் என்றறி யாது தங்கள் துப்பாக்கிகளை வெடிக்கச் செய்து தங்களிடமுள்ள துப்பாக்கி இரவைகளை வீணாக்குவர்.

இப்படி 217 நாள்கள் போயர்களின் முற்றுகை தொடர்ந்தது. போயர்கள் எதிர்பார்த்த பலன் கிட்ட வில்லை. நேருக்கு நேர் மோதிப் பொருதாமல் உயிர்ச் சேதம் இல்லாமல் கர்னல் பேடன்-பவல் முற்றுகையை முறியடித்து மேப்கிங்க் படைத்தளத்தையும் அச்சிற்றூரை யும் எத்தகைய சிறு சேதமும் இன்றிக் காப்பாற்றி விட்டார். ஒரு வழியாக இறுதியில் போயர்கள் பிரித் தானிய நாட்டவரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு விட்டனர்.

கர்னல் இராபர்ட் பேடன்-பவல் வெற்றிவீரராகத் தம் தாயகமான இங்கிலாந்துக்குத் திரும்பினார். பிரித் தானிய மக்கள் அவரைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்ந்த னர். போரில் வெற்றமைக்காகப் பிரித்தானிய நாட்டு மன்னர் - சக்கரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் அவரைப் பாராட்டித் தலைமைத் தளபதியாக (ஜெனரல்) ஆக்கினார். பின்னர் 1920 ஆம் ஆண்டில் அவருக்குப் பிரபுப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

## சாரணர் இயக்கத்தின் தோற்றம்

தென்னாப்பிரிக்க மேப்கிங்க் படைத்தளத்தில் சிறுவர்கள். இளைஞர்கள் ஆணைக்குக் கட்டுப்பட்டு ஆற்றிய அரும்பணி அவர் நெஞ்சில் வேரூன்றி இருக்கவே, அவர்களது திறனை நாட்டுயர்வுக்குப் பயன் படுத்த விரும்பி, இளைஞர்களுக்கான சாரணர் இயக்கத் தினைத் தொடங்க விரும்பி 1907ஆம் ஆண்டில் இங்கி லாந்தில் டோர்செட் பகுதியில் பழுப்பு வண்ணக் கடல் தீவில் தன் நோக்கத்தைச் செயல்படுத்த எண்ணி இருபது இளைஞர்களைக் கொண்ட ஒரு பயிற்சிமுகாமுக்கு ஏற்பாடு செய்தார். அது அவர் எதிர்பார்த்த வெற்றியை வழங்கியதால் சாரணர் இயக்கக் கையேடென நல்லொ முக்க நன்னெறிக் குடிமைப் பயிற்சிகளை உள்ளடக்கிய இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையான இதழாகச் சாரணம் இதழை 1908-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், அந்நாளைய 4 பென்சு விலையில் வெளியிட்டார்.

இளைஞர்கள் ஆர்வத்துடனும், ஆவலுடனும் சாரணர் இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்ட னர். 1909ஆம் ஆண்டில் படர்ந்து தழைக்கத் தொடங்கி யது. சாரணர் இயக்கக் கையேடு குறுநூல் ஐந்து (5) வெவ்வேறு மொழிகளில் பெயர்க்கப்பட்டது. இலண்டனில் அவ்வாண்டில் இடம்பெற்ற சாரணர் பேரணியில் பதினோறாயிரத்துக்கு (11,000) மேற்பட்ட சாரணர்களும், ஆர்வலர்களும் பங்கேற்றனர். 1910-ஆம் ஆண்டில் அப்போதைய பிரித்தானிய நாட்டரசர் எட்டாவது எட்வர்டு (தற்போதைய பிரித்தானிய நாட்டு அரசி எலிசபெத்தின் பெரியப்பா) பேடன்-பவலிடம் சாரணர் இயக்க நெறிமுறைகளை உலகெங்கும் பரப்புக என்று கேட்டுக் கொண்டார். ✱

*(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்)*

## டென்மார்க் கவிஞர்
## வேலணையூர் பொன்னண்ணாவின்
## 'நெஞ்சத்து நெருப்பு' நூல்
## இலண்டனில் வெளியீட்டு விழா!

டென்மார்க் நாட்டில் வாழ்ந்து வரும் பிரபல கவிஞரான வேலணையூர் பொன்னண்ணா அவர் களின் 'நெஞ்சத்து நெருப்பு' என்னும் கவிதை நூலின் வெளியீட்டு விழா 15-9-07 அன்று இலண்டன் குறைய்டன் (Croydon) பகுதியில் நடைபெறவுள்ளது. டென்மார்க் அறிவகம் வெளியீடான இந்நூலின் வெளியீட்டு விழாவை இலண்டன் தமிழ் இலக்கிய மன்றமும் இலண்டன் வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கமும் இணைந்து நடத்தவுள்ளன.

இலண்டன் தமிழ் இலக்கிய மன்றத் தலைவரும், பிரபல பேச்சாளரும், எழுத்தாளருமான பாவலர் கந்தையா இராஜமனோகரன் இவ்விழா விற்குத் தலைமையேற்கிறார். திருமதி பொன்மணி அவர்கள் நூலை வெளியிடவும், மூத்த நூலகவிய லாளர் என். செல்வராஜா சிறப்புரை நிகழ்த்தவும், முதறிஞர் கலாநிதி இளவாலை அமுது புலவர் வாழ்த்துரை நல்கவும் இசைந்துள்ளனர்.

முன்னதாக மங்கள தீபம் ஏற்றல், அமைதி வணக்கம், தமிழ்த் தாய்ப் பாடல் எனத் தொடங்கி நடைபெறும் இவ்விழாவுக்கு வருகை தருவோரை திருமதி கலைவாணி அருளன் வரவேற்றுப் பேசுகிறார். செல்வி இலஜிதா சிவராஜாவின் பரதநாட்டியமும் இடம் பெறுகிறது.

## சிவத்தொண்டர் சபாபதி மகேஸ்வரன் அவர்களின்
## ''பன்னிரு திருமறைத் தொகுதி''

தமிழீழம் ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் இலண்டன் சீமையை வதிவிடமாகவும் கொண்ட அன்பர் சிவதொண்டர் திருவாளர் சபாபதி மகேஸ்வரன் அவர்கள் சைவத் தமிழ் உலகிற்கு அற்புதமான ''பன்னிரு திருமறைத் தொகுதி'' ஒன்றை வெளியிட்டுள்ளார். தேமதுரத் தமிழோசையுடன் சைவநெறி தழைத்தோங்க அரும்பாடுபட்டவர்கள் நம் நாயன்மார்கள், சமயாச்சாரி யர்கள், சிவனடியார்கள் ஆவர்.

இவர்கள் இறைவனிடத்தில் உள்ளன்பு வைத்து அவருடைய அருளைப் பெற்றுப் பல பக்திமிகு திருப் பதிகங்களைப் பாடியுள்ளனர். இவற்றைச் சிறுவயதி லிருந்து சுவைத்தவர் சைவநெறி பேணும் சபாபதி மகேஸ்வரன் அவர்கள்.

தாம்பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டு மென்ற நோக்கோடு சைவத் தமிழ்மக்கள் மிக இலகுவாகத் தேவைக்கேற்பப் படித்து இறையருளைப் பெறக் கூடியவிதத்தில் ஆக்கப்பட்ட அற்புதமான படைப்பே ''பன்னிருதிருமறைத்'' தொகுப்பாகும். பன்னிரு திருமறைப் பாக்களிலுள் நுழைந்து நன்கு ஆராய்ந்து பொருத்தமானதைப் பொருத்தமான சந்தர்ப்பத்தில் படிக்கக்கூடியதாக இப்பாசுர நூலைத் தயாரித்துள்ளார்.

இந்நூலின் அற்புதம் ஒரே குடையின் கீழ் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அதாவது ஆலயங்கள், வீட்டு வழிபாடு, விழாக்கள், சுபமுகூர்த்தம், அம்சங்கள், நிகழ்வு, நோயுற்ற வேளை படித்து மனச்சாந்தி அடையக்கூடியதாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. தாம் விரும்பும் குலதெய்வங்களை வழிபடுவதற்கு ஏற்றவித மாகத் தேவாரங்கள் தொகுக்கப்பட்டிருப்பது பாராட்டத் தக்கது.

இந்நூல் ஒன்றே ஒவ்வொருவர் இல்லத்திலும் இருந்தால் போதும். எந்தச் சந்தர்ப்பத்திலும் தேவை யான பக்திப் பாடல்களைப் படித்துப் பயனடையலாம்.

இந்நூல் விற்பனை மூலம் கிடைக்கப்பெறும் நிதியைத் தமிழர் தாயகத்தில் நல்ல பணிக்குப் பயன் படுத்தப்படுவது மற்றுமோர் நற்செய்தியாகும்.

## அறுவடை!

**புவனேஸ்வரி சபாரட்னம்,** இலண்டன்

இரத்த ஆறு ஓடும் எம் தேசத்தில்
இரத்தம் பாய்ச்சியே அறுவடை செய்வர்.
மனித உயிர்களின் அறுவடை,
தமிழ் உயிர்களின் அறுவடை.
முற்றிய அறுவடை
முதலுக்கு நட்டமாம்-ஆகவே
இளம் தளிர்களும், இனிய குருத்துகளும்
இதயமின்றியே இழுத்து அறுக்கப்படும்!

பேய்களின் ஆட்சியில்
பேச்சுக்கே இடமில்லை.
மூச்சு முட்டும் வரை, நிணங்களின் நாற்றத்தில்
முக்கித் திளைக்கும் முரட்டு முதலைகள்!
ஏராளம் உயிர்களைத் தாராளமாக
அறுவடை செய்வதில் போட்டா போட்டி!
உலக அரங்கில் இரண்டாம் இடத்தில்!
உலகமே இன்று வாய்பொத்தி
வேடிக்கை பார்த்து வியந்துநிற்க
வெட்கமின்றியே வீராப்புப் பேச்சு!
சீ...! இதுவென்ன தேசமோ?
இதுவுமொரு ஆட்சியோ?

## இலங்கையில் தமிழில்

## ஒரு விளம்பர நிறுவனம் - ஆன்மா

இலங்கையில் இதுநாள்வரைக்கும் பல்வேறு விளம்பர நிறுவனங்கள் இயங்கினாலும் விளம்பரங்களைத் தமிழில் தயாரித்து முழுக்க முழுக்கத் தமிழர்களின் கலை கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிக்கும் முறையில் இவ்வாறான தமிழர் வாழ்க்கை நெறியுடன் தொடர்புடைய தயாரிப்புகளுக்கு கூட விளம்பரங்களை அமைக்கவோ விளம்பரப் படங்களை எடுக்கவோ தமிழில் ஒரு விளம்பர நிறுவனம் இல்லாமை அண்மைக்காலம் வரை ஒரு பெரும் குறைபாடாக இருந்துவந்தது.

இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு சென்றாண்டு மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'ஆன்மா' விளம்பர நிறுவனம் சிறப்புடன் செயற்பட்டு வருகிறது. தமிழில் உங்கள் கருத்து (Aanma Tamil Concepts) என்னும் தனிப்பொருளில் ஒரு விளம்பர நிறுவனமாகத் தமது பணிகளைச் செய்துவருகிறது.

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு விளம்பரங்கள் வடிவமைப்பது, நிகழ்வுகள் ஒழுங்கமைப்பு, விளம்பரத் தயாரிப்பு, விளம்பரப் படைப்பு, விளம்பரப் படத் தயாரிப்பு போன்ற பல ஆக்க வேலைகளை உங்களுக்குத் தமிழ் மணக்க மணக்க நிறைவேற்றித் தரும் பொறுப்பை 'ஆன்மா' ஏற்றுக் கொண்டுள்ளது.

## பல பயன் தரும் பனைமரம்

### க.பொ. தம்பிராசா, இலண்டன்

பனங்கொட்டை என எள்ளி நகைப்பர் சிலர். அதை முளைக்க வைத்தால் பனங்கிழங்கு, கிழங்கைக் காய வைத்தால் ஒடியல், அவித்துக் காயவிட்டால் புளுக்கொடியல், வளர விட்டால் வடலி, உயர்ந்து விட்டால் நெடும் பனை, அதன் குருத்தைக் காய விட்டால் அதில் கவியும் எழுதலாம், குறிப்பும் எழுதலாம்.

படுத்துறங்கப் பாயும், அரிசி, மா போட்டு வைக்க பெட்டியும் பின்னலாம். ஓலை விரிந்துவிட்டால் பசுவுக்குத் தீனியாய், மறைப்புக்கட்ட வேலியாய், முகட்டில் கூரையாய்ப் பயன் தரும். மட்டையும் மிச்சமில்லை. நார்கீறி கடகம் பின்னிடலாம், பாளையைச் சீவி கட்டி தட்டி, முட்டி கட்டிவிட்டால் போதை தரும் கள். முட்டியிலே சுண்ணாம்பு தடவி விட்டால் சுவையான கருப்பணி, கருப்பணியை காய்ச்சிவிட்டால் இனிப்பான பனங்கட்டி, கறுப்பான மரம், கருங்காலி போல் வைரம், தறித்து சீவிவிட்டால் கிணற்றடியில் துலாவாய்ப் பயன்படுத்தலாம். கீறுபோட்டுச் சீவி விட்டால் சிலாகை, பெரிதாகக் கூறுபோட்டால் கூரை போடும் மரமாகும்.

உண்ண ஒடியல் பிட்டு, கடித்துத் தின்ன பனாட்டு, குடித்து மகிழ ஒடியல் கூழ் அத்தனையும் தந்தாய், வீடு கட்டிக் கூரை போடவும் படுத்துறங்கப் பாயும் தந்தாய். மறக்கலாமோ உன் தொண்டை.

தமிழர் வாழ்வினிலே துணையாய் நின்றிருப்பாய், நன்றி மறவாமல் நாட்டிடுவோம் நான்கு திக்கும் பனம் விதையை. முளைவிட்டு வளரட்டும் வானுயர!

## பாராளுமன்றம்

## PARLIAMENT

3rd August 2007
The Immigration officer
Home Office
United Kingdom

Sir,

We the following members of Parliament representing the Tamil people in the Northeast region of Sri Lanka, and of the Tamil National Alliance, are currently in the United Kingdom, concluding a visit to several European countries in order to explain to Governments in the said countries inter-alia the horrendous situation pertaining to Human Rights, particularly relating to extra judicial killings, enforced disappearances of Tamil persons, and such other violations. We have met with Hon. Lord Mallock Brown, State Secretary to the Ministry of Foreign Affairs, and other Hon Members of Parliament in the United Kingdom to whom we have explained in some detail the most dangerous situation relating particularly to young Tamils who are suspected of association with the Liberation Tigers of Tamil Eelam (L.T.T.E.)

We are informed that some Tamils who have arrived recently and who have sought Asylum in the U.K. are presently in custody. These persons, we are informed, are engaged in a fast in order to demonstrate their concerns and plight in Sri Lanka.

As democratically elected representatives of the Tamil People in Sri Lanka, truly aware of the current situation in Sri Lanka, we consider it our duty to inform you that if these persons are returned to Sri Lanka in the present dangerous and volatile situation prevalent there, they would certainly face persecution and their personal safety, indeed their lives, would be at grave risk.

We state this because extra judicial executions and enforced disappearances of Tamils is a regular and continuing feature in Sri Lanka and these Tamil persons who have fled Sri Lanka would on their return be identified as persons associated with the L.T.T.E. and prone to subversive activity.

We very strongly urge in the said circumstances that these Tamil persons should not be returned to Sri Lanka, and that they be afforded that opportunity to remain in the United Kingdom.

Yours truly,

**R. Sampanthan, MP**

**Mavai S. Senathirajah, MP**

**G.G. Ponnambalam, MP**

# சிற்பம் அழிவதைக் கண்ட சிற்பி

**சு.வே. கலைவாணன்**

நெல் வயல்கள், அவற்றுடன் தொட்டு நிற்கும் கடலேரி, தென்னந்தோப்புகள், பனந்தோப்புகள், தோட்டங்கள், வளர்ப்பு விலங்குகளின் வளமான சுற்றாடல், தொன்மை வாய்ந்த சைவக் கோயில்கள் சூழ்ந்துள்ள யாழ்ப்பாண மாவட்டத்தின் நாவற்குளி மண்ணில் 1921 மே மாதம் 24 ஆம் தேதி தோன்றியவர் சு.வே. (சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை) இறுதிக்காலம் வரை பிரம்மச்சாரியாகவே வாழ்ந்து தான் பிறந்து வளர்ந்த சூழலுக்கும், சுதந்திரத்துக்கும், சுகத்துக்கும் முற்றிலும் வித்தியாசமான சூழலில் கொழும்பு மாநகரில் 86 ஆவது வயதில் 2007 ஜூன் மாதம் 22 ஆம் திகதியன்று அமரராகிவிட்டார்.

அமரர் சு.வே. யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கற்றுத் தேறிய பின் ஓரிரு ஆண்டுகள் தொழில் வாய்ப்பின்றி இருந்தார். முதலில் மலையகத்தின் டிக்கோயாவில் உள்ள தோட்டப் பாடசாலை ஒன்றில் ஆசிரியர் தொழில் பெற்றார். அங்கிருந்து ஹற்றன் சென் பொஸ்கோ கல்லூரிக்கு நியமனம் கிடைக்கப் பெற்றார். சில ஆண்டுகளில் யாழ் சுண்ணாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலையிலும் அதனைத் தொடர்ந்து யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பணிபுரிந்து 35 ஆண்டுகள் ஆசிரியர் சேவையின் பின் ஓய்வு பெற்றார். ஆரியர் திராவிட பாஷா அபிவிருத்தி சங்கத்தில் கற்றதன் பயனாக ஒரு தமிழ்ப் பண்டிதராக மிளிர்ந்த சு.வே. தமது சேவையைத் தொடர்ந்தார். அரசின் பாடநூல் பிரசுர சபையில் இறுதிக்காலம் வரையில் சேவையாற்றினார் எனலாம்.

புகழொடு தோன்றிய சு.வே. அவர்கள் ஈழகேசரி பத்திரிகையில் சிறுகதைகளை எழுதிவந்தார். கிடைக்காத பலன், மனித மிருகம், புத்தனின் சுவடு, காலத்தின் தண்டனை, பாசம், பிரேமை, மனநிழல், அன்புக்கறை, சிற்றன்னை, தோழன் என்பவை ஈழகேசரியில் மட்டுமன்றி வாசகர் மனங்களிலும் நீண்ட காலம் நின்று நிலைத்தவை. உருவகக் கதைகள், மண்வாசனை, வெறி, பாரிசவாதம், பாற்காவடி, அக்கினி, ஸ்ட்ரைக், புகை, தகிப்ப, பெரியம்மா என்பன வெளிவந்தன. இவற்றுள் 'சிற்பி' சரவணபவன் அவர்கள் வெளியிட்டு வந்த ''கலைச்செல்வி''யில் மணற்கோவில் பிரசுரிக்கப்பட்டிருந்த போது அது தமிழகத்தின் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் பாராட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்க ஒரு முத்திரையாகும்.

மண்வாசனை, பாற்காவடி என்னும் தலைப்புகளில் சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்தன. மணற்கோயில் என்னும் தலைப்புடன் உருவகக் கதைத் தொகுப்பு வெளிவந்தது. கல்வித்திணைக் கழகத்தின் பாடநூல் தொகுப்பாசிரியராக இருந்த சூழல், சுற்றாடற் கல்வி, தமிழ் மொழிப் பாட நூல்களை ஆக்கினார். இவரின் சிறுவர் இலக்கிய நூல்கள் சந்திரமதி, குகன் என்பனவாகும்.

இலங்கை வானொலியில் தொடர்ச்சியாக ஒலி பரப்பப்பட்ட பல நாடகங்களின் ஆசிரியராக இவர் விளங்கினார். 1960-1970 காலப்பகுதியில் வஞ்சி, எழிலரசி, மண்வாசனை, ஒருமைநெறித் தெய்வம், ஏட்டிலிருந்து, கிராமராட்சியம், பொன்னாட்சிக்குளம், நவயுகம் ஆகிய நாடகங்கள் இலங்கை வானொலியில் தொடர் நாடகங்களாக ஒலிபரப்பப்பட்டு வந்தன. இலக்கிய உரைகளையும் சு.வே. அவர்கள் இலங்கை வானொலியில் ஆற்றினார்கள். இலக்கிய ரசனை என்னும் உரை 32 வாரங்களும், திருக்குறட்சித்திரம் என்னும் உரை 36 வாரங்களும் நாட்டுக்கு நல்லது எனும் உரை 24 வாரங்களும் ஒலிபரப்பாகியது.

அமரர் சு.வே.யிடம் காணப்பட்ட நல்லியல்புகளைப் பலரும் பின்வருமாறு ஒப்புக் கொள்கின்றனர். வித்துவச்செருக்கு இல்லாதவர், நெகிழ்ச்சித் தன்மையுடையவர். பணம் சார்ந்ததன்றி அறிவுசார் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டவர். ஒழுக்க சீலர், கண்ணியம் மிக்கவர், கடமையே கண்ணானவர், புன்சிரிப்புடனான முகம், எளிமையும் அடக்கமும் மிக்கவர், பிறர்மனம் புண்படாதபடி கனிவுடன் பேசுபவர், ஆடம்பரம் இல்லாதவர், கர்வம் கொள்ளாதவர், ஆலோசனை தயங்காது வழங்குபவர், உள்ளத்தால் பொய்யாத ஒழுக்கம் பேணியவர்.

அமரர் சு.வே.யினது சிந்தனைப் போக்குகள் பின்வருமாறு இனங்காணப்பட்டன. மரபுவழி இலக்கியத் தடத்தைப் பேணியபடியே நவீன இலக்கியப் போக்கையும் அனுசரித்தவர். நல்ல பேச்சாளர், உருவகக்கதை பிதாமகர், திருமணபந்தத்தில் ஈடுபடவில்லை. நாடகம் காத்திரமான ஊடகம் என்பதில் நம்பிக்கை அதிகம் கொண்டவர், சிறுவர்களுக்கு அறிவூட்டுவதில் தனி ஆர்வம், முற்போக்கு அணியைச் சேர்ந்த அமைப்புகளுடன் தொடர்புகளைப் பேணாதவர், தனக்கென எதனையும் தேடிக்கொள்வதில் நாட்டம் இல்லை, விவசாய விரும்பி, தனக்கெனவே வாழாத விரிந்த இதயத்திற்குச் சொந்தமானவர்.

இலக்கியம் பற்றி அவர் கொண்டிருந்த கருத்து இது. ''மனிதனின் சிந்தனைகளைத் தூண்டி உணர்ச்சிகளைத் தொடுவதுடன் அவனது பாவனா சக்திகளை மிகுதிப்படுத்துவதாயும் மனத்துக்கு இன்பம் அளிப்பதாயும் அமைவதே இலக்கியம்''

தன் படைப்புகள் தன் கண்முன்னே அழிவதைப் பார்ப்பதற்கு இரும்பு மனம் வேண்டும். நாவற்குளியில் மிகுந்த அவதானத்துடன் பேணப்பட்டிருந்த இவரது படைப்புகள், சேகரிப்புகள் எல்லாம் ஈழத்து யுத்தம் காரணமாகத் தீயில் அழிந்தொழிந்து போவதை இரும்பு மனத்தால் கண்ட இரும்பு மனிதர் சு.வே. என்றால் மிகையாகாது. இதனால் அவர் சிற்பம் அழிவதைக் கண்ட சிற்பி.

**ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு ஆழி எனப்படு வார் - குறள் 989.**

*

# தமிழ் சினிமாவின் வரலாறு ③

கே.டபிள்யூ. செல்வராசா, வுட்சேர்ச், கென்ற், இலண்டன்

முதலாவதாக எழுதப்பட்ட படம் 'கச்ச தேவயாணி' என்பதாக முன்னர் தவறாகக் குறிப்பிட்டுள்ளேன் 'வனமோகினி''யே முதலாவதாகும்.

**மங்கம்மா சபதம்** : டி.ஆர். ரஞ்சன் கதாநாயனாக நடிக்கிறார். இவர் ஒரு பி.ஏ. பட்டதாரி. பல்கலைக் கழகத்தில் படிக்கும்போதே கல்லூரி நாடகங்களில் நடித்துப் பெயர் வாங்கியவர். வாள் சண்டை பயின்று வில்லனுக்குரிய உடற்கட்டும், பளபளக்கும் கண்களும் வில்லன் சிரிப்பும் கொண்டவர். இப்படத்தின் கதா நாயகியாக வைஜயந்திமாலாவின் தாய் வசுந்தராதேவி நடிக்கிறார். இவரும் மைசூர் மகாராஜா காலத்தில் மைசூரில் பிறந்து வளர்ந்த அழகியாவார். சுமாராகப் பாடுவார். இதன் கதை ரஞ்சன் இளவரசன் குதிரையில் சென்று வீதியில் செல்லும் பெண்களுடன் சேட்டை விடும் பழக்கம். இளம் பெண்களின் அருகே சென்று ''டீ கொடு'' ''டீ கொடு'' என்பார். இதேபோல் வசுந்தரா தேவியிடமும் சென்றபோது அவர் கோபித்து விலகிப் போகக் கோபம் கொண்ட இளவரசன் உன்னை என் வைப்பாட்டியாக்கிச் சிறையில் வைத்து வாழாவெட்டி யாக்குவேன் என்று கூறுகிறான், அதற்கு மங்கம்மா ''நான் உனக்கு ஒரு மகனைப் பெற்று அவனைக் கொண்டே உன்னைச் சவுக்கால் அடிக்க வைப்பேன்'' என்று சபதம் செய்கிறாள். அவள் மாறுவேடத்தில் இளவரசனிடம் சென்று பாடும் பாடல் ''ஐயய்யா சொல்ல வெட்கமாகுதே ஐயா மேலே ஆசையாகுதே'' என்ற பாடல் பிரசித்தமானதும் பாடசாலைப் பெண் மாணவர் நாட்டியமும் ஆடினார்கள். முடிவில் மங்கம்மா தன் சபதத்தை நிறைவேற்றுகிறாள். சுவாரஸ்ய மான பல முறை பார்க்கத் தூண்டும் படம். 1944-45 களில் வந்த படம் என்று நினைக்கிறேன்.

**அம்பிகாபதி** : எம்.கே. தியாகராஜ பாகவதர் இளமையில் நடித்த படம். சந்தானலெட்சுமி அமராவதி யாகவும் செருகளத்தூர் சாமா கம்பராகவும் நடிக்கிறார் கள். அம்பிகாபதி ஒரு சிறுவனுக்கு வாள் பயிற்சி கொடுப்பதில் ஆரம்பமாகிறது. மிகவும் அழகான, பாகவதர் போல் தலைமுடியும் வைத்த இளம் வாலிப னாகத் தோன்றுகிறார் எம்.கே.டி. அரச சபையில் விருந்து வைபவத்தின் போது அமராவதி வட்டிலில் கறி சுமந்துவர அம்பிகாபதி மெய்மறந்து ''இட்டஅடி நோக எடுத்த அடி கொப்பளிக்க வட்டில் சுமந்து மருங் கசைய'' என்று பாட, சபையில் அரசன் முதல் யாவரும் அதிர்ச்சியுடன் பார்க்க, கம்பர் உடனே ''கொட்டிக் கிழங்கோ கிழங்கென்று கூறுவார் நாவில் வழங்கோசை வையம் பெறும்'' என்ற பாடலை முடித்ததும் கம்பர் 'தெருவில் ஒரு வயோதிக மாது கொட்டிக்கிழங்கு விற்று வருகிறார் அதைத்தான் நானும் அம்பிகாபதியும் பாடி னோம்' என்றார். இவர்களைக் காப்பாற்ற சரஸ்வதி வயோதிக வேடம் பூண்டு கொட்டிக்கிழங்கு விற்பவ ளாக வந்து இவர்களைக் காப்பாற்றுகிறாள். சுவையான சம்பவங்களுடன் எம்.கே.டி., பாகவதரின் பல அருமை யான பாடல்களும் கொண்ட படம். உச்சகட்டமாக அரச சபையில் அம்பிகாபதி 100 பேரின்பப் பாடல் பாடு வதும் ''ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்'' என்ற காப்புப் பாடலுடன் மிகவும் அழகாகச் சில பாடல்கள் எம்.கே.டி. பாடுகிறார். பின்னர் வந்த சிவாஜி கணேசன் நடித்த அம்பிகாபதியை விட இது பல தடவை உயர்ந்தது. ஆனால் சிவாஜியின் நடிப்புக்கு என் மதிப்பைக் கூறாமல் இருக்க முடியாது. இப்படத்தில் நகைச்சுவை மன்னன் என்.எஸ். கிருஷ்ணனும் டி.ஏ. மதுரமும் நடிக்கிறார்கள். அம்பிகாபதி அமராவதி யின் காதலுக்கு உதவி செய்கிறார்கள்.

**திருநீலகண்டர்** : எம்.கே. தியாகராஜ பாகவதர் திருநீலகண்டராக நடிக்கிறார். இவர் சிவன் பால் மிகவும் பக்தி கொண்டவர். இதனால் மனைவியைக் கூட இனித் தீண்ட மாட்டேன் என்று சத்தியம் செய்து சீவித்தார். பாகவதரின் இனிமையான பாடல்கள் நிறைய உண்டு. இதன் உச்சகட்டமாக சிவபெருமான் ஒரு துறவியின் வேடத்தில் (செருகளத்தூர் சாமா நடிக்கிறார்) வந்து ஒரு திருவோட்டைப் பத்திரமாக வைத்துத்தான் திரும்ப வரும்போது தரும்படி கூறிச் செல்கிறார். திருநீலகண்ட ரும் அதைப் பத்திரமாக மண்ணில் புதைத்து வைத்தார். துறவி திரும்பவந்து திருவோட்டைக் கேட்டபோது அவர் புதைத்த இடத்தில் பார்த்தபோது ஓட்டைக் காண வில்லை. பதறிப் போய் முனிவரிடம் சென்று இப் பாடலைப் பாடுகிறார் ''மறைவாய்ப் புதைத்த ஓடு மறைந்த மாயம் ஏதோ மாமுனிவரே அறியேன்-யாருமறியாமல் மறைவாய்க் கறையான் தின்றதோ கள்வர் கவர்ந்து சென்றாரோ பேதை அடியேன் தீவினையோ இறைவன் சோதனையோ... மண் கலம் போனாலென்ன செம்பொற்கலமே செய்து தருவேன்; மறைவாய்...'' இவ்விதம் பாடிய பின் சிவபெருமானின் சோதனை முடிந்து தன்னைத் திருநீலகண்டருக்கு வெளிப்படுத்தி அவரை ஆசீர்வதிக்கிறார். திருநீலகண்ட ரின் கதையை தத்ரூபமாக வெளிப்படுத்திய அருமை யான படம்.

**மீரா** : எம்.எஸ். சுப்புலெட்சுமி மீராவாக நடிக்கிறார். இவர் ராணா என்னும் இளவரசனை மணம் செய்து பின் கண்ணனின் பக்தையாக மாறிக் கண்ணனுக்கு ஊழியம் செய்யத் தன் வாழ்வை அர்ப்பணம் செய்கிறாள் மீரா. ''திறந்த கூண்டிலிருந்து பறந்ததை'' என்னும் பாடல் முதல் எம்.எஸ்.எஸ். பல இனிய பாடல்களை இதில் பாடியுள்ளார். ''ராணா!

கண்ணன் என்னை அழைக்கிறார் நான் போகிறேன்'' என்று கூறிச் செல்லும் காட்சி கணகளில் கணணீரை வரவழைக்கும். கையில் ஒரு யாழை ஏந்திக்கொண்டு பக்தர் கூட்டத்தில் இவர் பாடுவதே பரவசமூட்டும்.

என்னைப் பற்றி இங்கு எழுதவேண்டியுள்ளது. ஆனால் ''காற்றினிலே வரும் கீதம்'' என்ற பாடலுக்கு மகிமை தருவதற்காக இதை எழுதுகிறேன். நான் 7 ஆம் வகுப்பு (1947) லீஸ் ஹெய் ஸ்கூல் (கல்முனை) (பின்னர் வெஸ்லி ஹை ஸ்கூல்) படித்துக் கொண்டி ருக்கும்போது (எனக்கு 13½ வயது) மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளுக்கெனப் பாட்டுப் போட்டி மட்டக்களப்பில் நடந்தது. பாடசாலையார் என்னைத் தெரிவு செய்து அனுப்பினார்கள். என் நணபன் வி. ராஜநாயகம் புல்லாங்குழல் வாசித்தார். இப்பாடலையே ''காற்றினிலே வரும் கீதம்'' பாடினேன். என்னால் நம்ப முடியவில்லை. எனக்கே முதல் பரிசு கிடைத்தது. ரசிகர்கள் மத்தியில் என் மனைவியின் அம்மாவின் அம்மா (பின்னர் மாமியின் அம்மா) இதைக் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார். பரிசு கிடைத்ததும் வாழ்த்துக் கூறி ஒரு முத்தமும் தந்தார். 1983ஆம் ஆண்டு அவருக்கு (தங்கமுத்தக்கா என்று கூறுவார்கள்) சுகயீனம் என்று மட்டக்களப்பில் நானும் என் மனைவியும் அவரைப் பார்க்கச் சென்றோம். அவருக்கு அப்போ 80 வயது. போன சிறிது நேரத்தின் பின் மகன் செல்வம் அந்தக் ''காற்றினிலே வரும் கீதம்'' பாடலைப் பாடிக் காட்டுவீர்களா என்று கேட்டதும் உடனே நான் பாடினேன். அவர் கணகளில் கண்ணீர் மல்க என்னை அருகில் கூப்பிட்டு முத்தம் தந்தார். அதன்பின் நான் சவுதி அரேபியா போய் விட்டேன். அங்குதான் அவர் இறந்த செய்தியை அறிந்தேன். இலண்டன் வந்தபின் 2 வருடம் (2005) இருக்கும். தீபம் தொலைக்காட்சி நிகழ்வில் ஒரு சங்கீத ஆசிரியை சங்கீதத்தைப் பற்றிப் பேசினார். பின் நேயர் பேட்டிக்கு நேரம் தந்தார்கள். ஒரு பெண்மணி அவரிடம் ''காற்றினிலே வரும் கீதம்'' பாடலைப் பாடிக் காட்டுங்கள் என்று கேட்ட போது அவர் ''மன்னிக்கவும் எனக்கு அப்பாடல் ஞாபகத்தில் இல்லை என்றார்'' அப்போ நான் போனில் தீபத்தைத் தொடர்பு கொண்டு அவரிடம் ''இப்பாடல் எனக்குத் தெரியும் படிக்கட்டுமா'' என்றேன். சரி பாடுங்கள் என்றதும் பல்லவியையும் ஒரு சரணத்தையும் பாடினேன். ஏனெனில் மற்ற நேயர்களுக்கும் தருணம் கொடுக்க வேண்டும் என்பதால் பாடிய பின் எப்படி என் பாடல் என்று கேட்டேன். ''நீங்களே பாட்டிலேயே கூறி விட்டீர்கள் காட்டு விளங்கும் கேட்டே மயங்கும் மதுர மோகன கீதம்'' என்று மதுரமோகனமாகவே இருந்தது என்றார். ஆம் இப்பாடல் இசை இருக்கும் வரை மதுர மோகன கீதமாகவே எல்லாருடைய உள்ளங்களிலும் இசைத்துக் கொண்டிருக்கும்.

**என் மகன் :** கிருஷ்ணமூர்த்தி கதாநாயனாகவும் யு.ஆர். ஜீவரெத்தினம் கதாநாயகியாகவும் நடிக்கிறார்கள். யு.ஆர்.ஜி. மிகவும் இளமையாக அதுவும் ஒரு நர்சாக அழகாகக் காட்சியளிக்கிறார். யு.ஆர்.ஜி.யின் இனிமை யான பாடல்கள் பல உண்டு. அந்தக் காலத்தில் அவர் பாடிய ''தெருவில் வாராண்டி, தெருவில் வாராண்டி, வேலன் தேரில் வாராண்டி'' என்ற பாடலைப் பிச்சைக் காரர்கூட பாடிப் பிச்சை எடுப்பார்கள்.

**நீலமலைத் திருடன் :** டி.ஆர். ரஞ்சன் இளமை யில் நடித்த நல்ல படம். ஹை வேயில் நின்று அப் பாதையில் வரும் பணக்காரரை மறித்துப் பணத்தை எடுத்து ஏழைகளுக்குக் கொடுப்பான் இத்திருடன், இவர் பாடிய ''சத்தியமே லெட்சியமாய்க் கொள்ளடா! தலை நிமிர்ந்து எதிர்கொள்ளடா! எத்தனையோ மேடு பள்ளம் வழியிலே! உன்னை இடறவைத்துத் தள்ளப்பார்க்கும் குழியிலே! அத்தனையும் தாண்டி முன் செல்லடா! என்ற பாடல் இன்றைய ஈழத் தமிழருக்கும் பொருத்தமானது.

**ஏழைபடும் பாடு : "Less Misserable"** என்ற ஆங்கில நாவலைத் தழுவி எழுதிய கதை. வி. நாகையா கதாநாயகனாகவும் பத்மினி சிறுமியாகவும் (நாகையா வின் பேத்தி) நடிக்கிறார்கள். சீதாராமன் இப்படத்தில் தான் இன்ஸ்பெக்டர் ஜாவராக நடித்து அதன்பின் அவரை ஜாவர் சீதாராமன் என்று கூறுவார்கள். ஒரு ஏழைக் குடும்ப வாழ்க்கையை மையமாகக் கொண்ட கதை. ''ஜம்சிக்பம் சிக்கபம் சின்னச் சின்னப் பாப்பா சிங்காரப் பாப்பா சின்னஞ்சிறு செல்லமுதே வா'' என்ற பாடலோடு இன்னும் நல்ல சில பாடல்களை நாகையா பாடுகிறார்.

**யயாதி :** தமிழ் இலக்கியக் கதையான யயாதி இளவரசனாக பி.யு. சின்னப்பா நடிக்கிறார். ''யயாதி என்பவர்க்கே மணியும் மாலையும் கொட்டு முரசும்'' என்ற இலக்கியப் பாடலும் இருக்கிறது. எதைக் கேட்டாலும் கொடுப்பார்கள். (உயிரையும் கூட) ஆனால் இளமையை யார் கொடுக்கப் போகிறார்கள். வாழ்க்கை யில் இன்பத்தை அனுபவிப்பதே இளமையில்தானே. அப்படிப்பட்ட இளமையை யயாதியின் தந்தை (அரசன்) யயாதியிடம் கேட்டபோது உடனே தாரை வார்த்துக் கொடுத்து விட்டார். தந்தையின் முதுமைப் பருவத்தை இளமையிலேயே அடைந்து படும் கஷ்டங்கள் வியாதி கள் இவற்றைச் சித்திரிக்கும் படம். பி.யு. சின்னப்பா வின் பாடலும் நடிப்பும் இலக்கியக் கதையைக் கண் முன்னே நிறுத்துகிறது.

**மங்கையர்க்கரசி :** பி.யு. சின்னப்பா, பி. கண்ணாம்பா நடித்த படம் என்றால் நடிப்புக்கும் கதை வசனத்துக்கும் கேட்கவா வேண்டும். சின்னப்பாவின் சில பாடல்கள் நிறைந்த படம், சின்னப்பா ஒரு இளவரச னாகத் தாசிலோலனாகச் சீவிக்கிறார். இக்கதையின் உச்சகட்டமாக சின்னப்பா தேவதாசி என நினைத்துத் தன் தாயைப் (கண்ணாம்பா) படுக்கை அறையில் அவர் கட்டிலில் அணுகியபோது மகனுக்குப் பால் கொடுத்த இரண்டு முலைகளாலும் பால் பீச்சியடிக்கச் சின்னப்பா வின் முகம் பாலால் கழுவப்படுகிறது; உண்மையை உணர்ந்த சின்னப்பா அழுது புலம்பி ஒரே ஓட்டமாக ஓடி அவர் கெட்ட பழக்கத்தை இச்சம்பவத்துடன் கை விடுகிறார். இதுதான் கதையின் சுருக்கம். கண்ணம்பா தான் மங்கையர்க்கரசி. ✱


*(தொடரும்)*

முன்னாள் இந்து சமய விவகார அமைச்சரும்
கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற
உறுப்பினருமாகிய திரு. தியாகராசா மகேஸ்வரன்
இலங்கை நாடாளுமன்றத்தில் எழுப்பிய குரல்

# முப்படையினரின் குழந்தைகளுக்குச் சலுகை

# கருணா, டக்ளஸ் குழுக்களின் பிள்ளைகளுக்குமா?


## நாடாளுமன்றில் மகேஸ்வரன் கேள்வி



பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்க்கும் போது சிறீலங்கா முப்படையிலும் உள்ளவர்களின் பிள்ளைகளுக்கு விசேட சலுகை அளிக்கப்படும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நாடாளுமன்றத்தில் குறிப் பிட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கீடு செய்த ஐக்கிய தேசியக் கட்சியின் நா.உ. மகேஸ்வரன், முப்படையிலுமுள்ளவர்களின் பிள்ளை களுக்கு வழங்கப்படும் விசேட சலுகை கருணா குழுவினரதும், டக்ளஸ் குழுவினரதும் பிள்ளைகளுக் கும் வழங்கப்படுமா? என்று கேள்வி எழுப்பினார்.

இக்கேள்விக்குப் பதில் அளித்த கல்வி அமைச்சர், ''உறுப்பினர் இதில் ஏதும் சஞ்சலப்பட வேண்டிய அவசியம் இல்லை. அரசினால் அங்கீகரிக் கப்பட்ட முப்படையினரின் பிள்ளைகளுக்கு மட்டுமே இந்த விசேட சலுகை அளிக்கப்படும்'' எனறு திட்ட வட்டமாகக் கூறினார். ''அமைச்சர் கூறுவது சரிதான். ஆனால், கருணா குழுவினரும், டக்ளஸ் குழுவினரும் துணைப்படைகள் என்ற பெயரில் இராணுவத்துடன் இணைந்து ஆயுதங்களுடன் திரிகின்றனர். அப்படி யானால் இவர்களும் உங்கள் இராணுவத்தின் ஒரு பிரிவினர் தானே'' என மகேஸ்வரன் மீண்டும் கேள்வி எழுப்பினார். அப்போது இடைமறித்த அமைச்சர் ஜெய ராஜ் பெர்னாண்டோ புள்ளே ''நீங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிள்ளைகளுக்கு விசேட சலுகை வழங்கவேண்டும் என்று கேட்கின்றீர்களா?'' எனக் கேட்டார். ''புலிகள் எப்போதும் துணைப்படைகளாகச் செயற்படமாட்டார்கள். நான் துணைப்படைகளைப் பற்றி மட்டுமே கேட்கின்றேன்'' எனப் பதிலடி கொடுத் துள்ளார் மகேஸ்வரன். ''நிச்சயமாக, அரச படைகளில் கடமையாற்றுவோரின் பிள்ளைகளுக்கு மட்டுமே இந்த விசேட சலுகை வழங்கப்படும்'' எனப் பதில் அளித்துக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த அதன் மூலம் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

# மலேசியத் தமிழ் இலக்கண அறிஞர் சீனி. நைனா முகம்மதுவுக்குத் தொல்காப்பியர் விருது!



தொல்காப்பியத்தில் ஆழ்ந்த புலமையும் பிற இலக்கண நூல் களில் சிறந்த பயிற்சியும் மிக்கவர் களுக்குத் தமிழ்ச்சுரங்கம் ஆண்டு தோறும் தொல்காப்பியர் விருது அளித்துவருகிறது. இது வரை இவ் விருது தொல்காப்பியத்தில் சிறந்த அறிஞர்களான புலவர் வெற்றி யழகன், பேரா. ஆ. சிவலிங்கனார், பாவலரேறு பால சுந்தரம், இலக்கணக் கடல் கோபாலயர், சிவத்திரு அடிகளாசிரியர் ஆகியோருக்கு அளிக்கப் பெற்றுள்ளது.

மலேசிய நாட்டில் தொல்காப்பிய இலக்கண அறிவைப் பரப்பிவரும் தமிழ்த்திரு சீனி. நைனா முகம்மது அவர்களுக்கு இவ்வாண்டு அளிப்பதெனத் தேர்வுக் குழு முடிவு செய்துள்ளது.

அறிஞர் சீனி. நைனாமுகம்மது அவர்கள் தொடர்ந்து இரண்டாண்டுகளாகத் தொல்காப்பிய வகுப்பை மலேசியத் தமிழர்களுக்கு நடத்தி வருகிறார். 'உங்கள் குரல்' என்னும் மலேசியத் தமிழ் இலக்கியத் திங்கள் இதழின் ஆசிரியரான இவர் தொடர்ந்து 'உங்கள் குரலில்' தொல்காப்பிய மரபு, தமிழ் யாப்பியல் தொடர் பான கட்டுரைகளையும் எழுதி வருகிறார். மலேசிய அரசின் கல்வித் துறையின் சார்பில் மலேசிய மாணவர் களுக்கும் ஆசிரியர்களுக்கும் மலேசியாவின் பல பகுதி களில் இலக்கண அறிவைப் புகட்டி வருகிறார். மேலும் பல பொது அமைப்புகளின் ஏற்பாட்டிலும் கவிதைப் பட்டடைகள், இலக்கணப் பயிலரங்குகள், இலக்கியச் சொற்பொழிவுகள் ஆகியவற்றையும் நிகழ்த்தி வருகிறார். 60 ஆண்டு அகவையுடைய இவ்வறிஞர் நல்லார்க் கினியன், இல்லார் கினியன், கரும்பன், அபுபரிதா, இபுனுசெய்யிது ஆகிய புனை பெயர்களில் தமது படைப்புகளை அளித்து வருகிறார். பல நூல்களுக்கு ஆசிரியரான இவர் நம் நாட்டில் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டவுடன் மலேசியாவில் தமிழ்ச் செம் மொழிச் சிறப்பு மலர் என்னும் அரிய தமிழ்த் தகவல் மலரை 'உங்கள் குரல்' சார்பில் வெளியிட்டுள்ளார். இப்பணியைப் பாரதக் குடியரசு தலைவர் டாக்டர் ஆ.ப.ஜே. அப்துல் கலாம் அவர்களும் மலேசியப் பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்களும் சமுதாயச்சுடர் தஸ்லீம் முகம்மது இபுராகிம் அல்ஹாஜ் (மலேசியா) அவர்களும் பாராட்டியுள்ளனர்.

இவ்வாண்டு தமிழ்ச் சுரங்கத்தின் தலைவர் முனைவர் ஆறு. அழகப்பன் மலேசியத் திருநாட்டிற்கே சென்று அறிஞர் சீனி. நைனாமுகம்மது அவர்களுக்கு விருதும் பொற்கிழியும் வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

# தமிழருக்குத் தனியிடம் தேடும் நேரம் வந்துவிட்டது!

'ஹரோவில் தமிழரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருவதால் தமிழருக்கெனத் தனியே ஒன்றுகூடல் மண்டபம், விளையாட்டு மைதானம் என்று தேடிக்கொள்ள முயற்சி எடுங்கள்!, என்று, 20-07-07 பின்னர் விலேஜ் மண்டபத்தில் நடைபெற்ற மூத்த தமிழரின் கலாச்சார மாலை விழாவின் போது ஹரோ நகரசபை உறுப்பினர் திரு. தயா இடைக்காடர் சூளுரைத்தார். இவ்விழா ஹரோ தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது. இந்த மூத்தோர் சங்கம் உதயமாகி, வளர்வதற்கு முக்கிய தூண்டுகோலாக இருந்த இவர், தமிழ் முதியோரின் முகமலர்ச்சியும், சங்கத்தின் வளர்ச்சியும் தனக்கு மிகவும் மகிழ்ச்சி தருவதாகவும் கூறி நிகழ்ச்சிகளைப் பாராட்டினார்.

பிரதம விருந்தினர்களாக அழைக்கப்பட்ட 'கானக்குயில்' கலைநிகழ்ச்சி அமைப்பாளர்களாகிய திரு. ஏ. தில்லைநாதன் அவர்களும், திருமதி யோகா தில்லைநாதன் அவர்களும், ஹரோ அகதிகள் ஒன்றியத்தின் செயலாளர் திரு. அலெக்ஸ் அவர்களும் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். திருமதி. எஸ். செல்வராசா அவர்களின் சுடர்ஒளி போற்றி இசையின் பின்னர்த் தாயகத்தில் சாந்தியும் சமாதானமும் நிலவ ஒரு நிமிட நேர மௌன அஞ்சலியுடன் நிகழ்வுகள் ஆரம்பித்தன. கௌரவ விருந்தினரும், ஹரோ மேற்குப் பாராளுமன்ற உறுப்பினரும், சர்வதேச அபிவிருத்தி உதவி மந்திரியுமாகிய திரு. ஹரத் தோமஸ் அவர்கள் ஆசி வழங்கி மகிழ்ச்சி தெரிவித்தார். சங்கத்தின் சார்பில் திரு. ஆர்.ஜே. குணரெட்ணம் அவர்கள் வரவேற்புரை கூறினார். முதலாவது நிகழ்ச்சியாக மண்டபம் நிறைந்த மக்களின் அமோக ஆதரவையும் பாராட்டையும் பெற்ற மூத்த பெண் அங்கத்தவர்களின் கும்மி நடனம் இடம்பெற்றது. பிரதம விருந்தினரும் தமது விமர்சனத்தின்போது தனக்கு மிகவும் பிடித்த விடயம் 'வயதுவந்த பெண்கள் கவர்ச்சியான உடையலங்காரத்துடன் மேடைக்கு வந்து கும்மியடித்ததே' என்று குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியையும், தொடர்ந்து நடைபெற்ற நாடகத்தையும் உபதலைவர் திருமதி. குணா வேலுப்பிள்ளை தயாரித்து மேடையேற்றியிருந்தார்.

'காலத்தின் கோலம்' என்னுங் குறுநாடகம் மூன்று காட்சிகளாக மேடைக்கு வந்தது. வேகமாகச் சுழலும் காலச்சக்கரத்தில் எமக்குப் பொருத்தமானபடி வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டும் என்பதே கதையின் கருவாக அமைந்திருந்தது. தாயகத்தில் தேர்தல் கால ரகளைகள் ஞாபகமூட்டப்பட்டதோடு இன்றைய மக்களின் அவல நிலைகளும் ஆங்காங்கே தொட்டுச் செல்லப்பட்டிருந்தன. 60, 70 வயதுக்கு மேற்பட்ட நடிகர்கள் என்ற முறையில் சில வசனங்களை ஞாபக மூட்டவேண்டிய நிலைமைகள் ஏற்பட்டபோதிலும் நாடகம் நகைச்சுவை கலந்து விறுவிறுப்பாகச் சென்றது. தொடர்ந்து திருமதி. கே. சண்முகநாதன் அவர்களால் பயிற்சியளிக்கப்பட்ட ஆங்கிலப்பாட்டு இசைக்கப்பட்டது. சங்கத்தின் சார்பில் திரு. ரி. புத்திரசிங்கம் அவர்கள் பிரதம விருந்தினர்கள், விமர்சகர்கள், அனுசரணை ஆதரவு வழங்கியோர் சகலருக்கும் நன்றி தெரிவித்தார்.

அடுத்து பிரதம விருந்தினர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டுச் சங்க அங்கத்தவர்களால் பொன்னாடை போர்த்தியும் பூச்செண்டு வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர். திரு. ஏ. தில்லைநாதன் அவர்கள் விமர்சிக்கையில் நாடகத்தை மேலும் மெருகூட்ட வேண்டிய ஆலோசனைகளைக் குறிப்பிட்டதுடன் மூத்த தமிழரின் ஆர்வத்தையும் ஆற்றலையும் தான் காணக்கூடியதாக இருந்ததாகக் கூறிப் பாராட்டினார். திரு. சுரேஷ் கிருஷ்ணா அவர்களும் மூத்தோரின் முயற்சியைப் பாராட்டி நன்றி தெரிவித்தார். சிறந்த நடிகையாக திருமதி. கே. ராஜரெட்ணம் அவர்களும் நடிகராக திரு. குணரெட்ணம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். முடிவில் சகலரும் இரவு உணவுப் பொதியுடன் மகிழ்ச்சியோடு வீடு சென்றனர். ✱





சிறுகதை

# அவள் ஒரு வானொலி நடிகை

## கலைவாணி

சுதாகர் நன்றாக நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து கொண்டான். தன் மேசையின் மேல் குவிந்து கிடந்த பைல்களை ஒவ்வொன்றாக எடுத்து வைத்துவிட்டுக் கடைசியாக எழுதி வைத்திருந்த கதையினை எடுத்துத் தனக்குள் வாசித்தான். அது அவனுக்குத் திருப்தி யளிக்கவில்லை. மறுபடியும் அதனைத் திருத்தி எழுத முயற்சித்தான். ஏனோ அன்று அவனுக்குக் கற்பனை ஓடவில்லை.

எனவே அதனை அப்படியே வைத்துவிட்டுப் புகைந்து கொண்டிருந்த சிகரெட் துண்டினை எடுத்து உறிஞ்சி இழுத்தான். அந்தப் புகையிலையின் இன்பம் கண்ட அவன் சிந்தனையில் பத்மா மெல்ல மெல்லத் தோன்ற ஆரம்பித்தாள். அவளின் அழகிய முகமே அவனின் கண்முன்னே நிழலாடியது. அவளைச் சுற்றியே அவனின் சிந்தனையும் சுழன்றது. அவளை வைத்தே ஒரு கதையினை உருவாக்கி அவளிடமே சபாஷ் பட்டம் பெற வேண்டும் என்ற எண்ணம் தோன்ற இரு கைகளையும் தலைக்கு மேலே கோத்து மோட்டு வளையத்தைப் பார்த்தான்.

சில கண சூன்ய நிலைக்குப்பின் மறுபடியும் உணர்வு வரப்பெற்றவனாக வாயிலையே நோக்கினான். வாசலில் வளர்ந்திருந்த மல்லிகைச் செடியில் உள்ள பூக்களின் மணம் அவனைக் கவரவே நிதானத்துடன் வாயிலுக்கு வந்தவன் அம்மலர்களை ஆய்ந்து முகர்ந்தான். பத்மாவைச் சுற்றிச் சுற்றி அவனின் சிந்தனை சுழன்ற தனால் இம்மலர்களைச் சூடிக்கொள்ள ஏன் பத்மா வரக் கூடாது என்ற எண்ணம் அவனது மனத்திலே இழை யோடியது.

அவளோ ஒரு வானொலி நடிகை. சிறுவயதி லிருந்தே பாடசாலை நாடகங்களில் பங்கு பற்றிய அவளின் குரலுக்காக, குரலின் இனிமைக்காக, வானொலி நாடகங்கள் அவளைக் கொழும்பு நோக்கி அழைத்தது. கிராமியச் சூழ்நிலையில் வாழ்ந்த அவள் கொழும்பு வந்தபோது வானொலி நாடகங்களில் நடிப்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டாள். அவள் சுதாகருக்கு வானொலி நடிகையாகத்தான் அறிமுக மானாள். அவள் சிறுகதை இலக்கியத்திலும் சிறிது ஈடுபாடு கொண்டவள். சிறுகச் சிறுக அவனின் இதயத்தில் அவள் இடம்பிடிக்கத் தொடங்கினாள். இலக் கியங்களால், நாடகங்களால் ஏற்பட்ட தொடர்பு அவளைத் தனக்கே உரியவளாக்கித் தனது இதய பீடத்தில் அமர்த்திக் கொண்டான் சுதாகர்.

அவள் அவனிடம் பழகுகின்ற விதமே தனி. அவளுடைய குணத்தினை அவனால் எவ்வளவு பழகியும், புரிந்து கொள்ளாததையிட்டு அவன் தனக் குள்ளே விசனப்பட்டுக் கொண்டான். அவளது பிறை போன்ற நெற்றியும் மனத்தைக் கவர்ந்திழுக்கும் கண்களும் அவன் கண்முன்னே தோன்றின. சிறிது நேரம் மௌனமாக இருந்தவன் பூ மரங்கள் நிறைந்த முற்றத்தில் நின்று கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மாலையாயிற்று. தெருவிளக்குகளெல்லாம் எரிய ஆரம்பித்திருந்தன. திடீரென அவன் கண்கள் ஓரிடத்தில் நிலைகுத்தி நின்றன. தூரத்தில் பத்மாவைப் போன்ற உருவம் போவதைப் போன்றிருந்தது. தூரத்தில் பக்க வாட்டிலும் தலைவாரிப் பின்னிய நீண்ட கூந்தலும் அவளாகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றது. அவள் இப்பொழுது எங்கே போகிறாள்? உள்ளம் பதற்றமடைந்தது. இதயம் துடித்தது. அவன் கண்களையே அவனால் நம்பமுடியவில்லை. ஒரு வேளை அவளைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்த தால் ஏற்பட்ட மனப்பிரமையோ! ஓடிப்போய்ப் பார்ப் போமா! என்றது மனம். அவளது அங்க அசைவுகள், நடையுடை பாவனை எல்லாம் அவன் கண்களை ஏமாற்ற முடியவில்லை. அவளேதான் என் பத்மாவே தான் என்று அவன் வாய் முணுமுணுத்தது.

இவ்வேளையில் அவள் எங்கே போகிறாள்? அவனது நெஞ்சத்தை ஒரு சுமை அழுத்தியது.

அவள் தனியாகப் போகவில்லை. அவளுடன் யாரோ ஓர் ஆடவனும் போவதைப் போன்றிருந்தது. நெஞ்சில் அனல் தகித்தது போன்று வெந்தது. அவனா! சிறிது நேரத்தில் மெல்லிய இருளில் நிழல் அசைவதைப் போன்று தெருமுனைத் திருப்பத்தில் இருவரும் மறைந்தனர்.

மறுநாள் பத்மா நடராஜனுடன் வீடு வந்தபோது அவனுக்கு ஆச்சரியம் ஒருபுறம். மனக் கொதிப்பு மறுபுறம். தன் அன்புக்குரிய பத்மா நடராஜனுடன் வந்தது அவனது நெஞ்சுக்குள்ளே இனம் புரியாத ஓர் உணர்ச்சியைக் கொண்டு வந்து நிறுத்தியது. துடிக்கும் இதயத்துடன் அவர்களை வரவேற்றான். என்ன பேசுவ தென்று தெரியாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சிறிது நேரம் அமைதி நிலவியது. நடராஜனே தொடர்ந்தான்.

'மிஸ்டர் சுதாகர்! தங்களை இன்று சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்' என்று ஆரம்பித்து 'பத்மா தங்களைப் பற்றி என்னிடம் நிறைய கூறியிருக் கின்றாள்' என்றதும் என்ன சொல்லியிருப்பாள் என்று சுதாகரின் உள்ளம் வேகமாக அடித்துக் கொண்டது. ஒரு முறை பத்மாவிடம் தன் பார்வையைச் செலுத்தினான். அவளின் விழிகள் இரண்டும் குறுகுறுவென்று இருவரை யும் பார்த்துக்கொண்டேயிருந்தன.

பத்மா இலக்கியத்தில் சற்றுத் தீவிரப் போக்கைக் கடைப்பிடிப்பவள். நடராஜன் எழுதும் ஆண் பெண் உறவு சம்பந்தமான கதைகளையே அதிக ஆர்வத்துடன் வாசித்து வந்தவள். சுதாகரையும் அப்படியான கதை களையே சிருஷ்டிக்கும்படி தூண்டினாள். அவனோ

அதற்குச் சிறிதும் இடம் கொடாமல் சமூக வாழ்க்கைக்குத் தேவையான சிறுகதைகளையே எழுதி வந்தான். எனவேதான் அவள் அவனது கொள்கை யினை மாற்றுவதற்குத் தனக்குத் துணையாக நடராஜனை அழைத்து வந்தாள். இரு துருவங்களையும் மோத விட்டுப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எழவே கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் இருவரையும் இலக்கியச் சர்ச்சையில் ஈடுபடுத்திவிட்டாள் பத்மா.

'மிஸ்டர் சுதாகர், சமுதாய வாழ்வுக்கு அடிப் படையாக இருப்பது ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் குடும்ப வாழ்க்கை. அதாவது சிறந்த தாம்பத்ய வாழ்க்கை அல்லவா? அதனால் ஆண் பெண் உறவு பற்றிய நாவல்கள். கட்டுரைகள் எழுதுவது தமிழிலக் கியத்தின் சகாப்தமாகும். அத்தகைய ஆக்கங்களைப் படைக்கும் நோக்கம் இல்லையோ உங்களுக்கு' என்று அலட்சியமாகக் கேட்டான் நடராஜன்.

தனது செக்ஸ் பற்றிய கருத்துகளை எடுத்து ரைக்கவே முயல்கின்றான் என்பதை சுதாகர் புரிந்து கொண்டான். அவன் சிரித்துக் கொண்டே 'ஆண் பெண் உறவு பற்றிப் பேசுவதற்குக் கூட அனுமதிக்கப்படாத காலம் ஒன்றிருந்தது. எழுத்துலகில் புரட்சி என்றும், நான்கு பேர் மத்தியில் பேசக்கூடாத வார்த்தைகளை எழுதுவதும் இன்று புதுமை இலக்கியமாகிவிட்டன. எழுத்துலகில் இருந்த கட்டுப்பாடுகள், வரம்புகள், எல்லாவற்றையும் இந்த ஆண், பெண் உறவு பற்றிய கட்டுரைகள், நாவல்கள் மறைத்துவிட்டன. அதனால் இலக்கியத்தில் எதையும் எழுதலாம், எழுத உரிமை யுண்டு என்ற கோட்பாடு வளர்ந்து வருகின்றது. இல்லையா? இதனைத் தானா புதுமை இலக்கியம், எழுத்துப் புரட்சி, புதிய சகாப்தம் என்றெல்லாம் கூறுகின்றார்கள்'. அவனின் சொற்கள் ஆணித்தரமாக வெளிவந்தன. ஆவேசம் கொண்டவனைப் போல் ஒரு நிமிடம் தோற்றமளித்தான் சுதாகர்.

நடராஜனும் பத்மாவும் ஏதோ ஒன்றினால் கட்டுப் பட்டதைப் போன்று கேட்டுக்கொண்டு இருந்தனர். அவன் மேலும் தொடர்ந்தான்.

'ஓர் இலக்கியக் கர்த்தாவுக்கு, வாசகர்களுக்குப் பிடித்தமானதை எழுதிப் பொருள் சேர்க்க வேண்டும் என்று ஆசை வளர்ந்து விட்டால் அவனது படைப்பில் இலக்கியம் வளராது. அவனது எழுத்துப் படைப்பு வியாபார மனப்பான்மைக்குப் பலியாகிவிடும். இலக்கி யத்தில் பண்பாடும் பாழாகிவிடும். ஆதலால் மக்களுக்குப் பிடித்தமானதை எழுதுவது எழுத்தல்ல. அது நல்லிலக்கியமும் ஆகாது'.

'அப்பொழுது எப்படியான எழுத்துகளை எழுதுவது சிறந்தது என்று கருதுகிறீர்கள் சுதாகர்?' என்று கேட்டான் நடராஜன்.

'பிடித்தமானதை எழுதுவது எழுத்தல்ல. பிடிக்க வேண்டியதை எழுதுவதுதான் எழுத்து. பாமர மக்களும் எழுத்துகளையும் எழுத்தாளர்களையும் கௌரவிக் கிறார்கள். அதில் கவர்ச்சி இருக்க முடியாது. தரக்குறை வும் இருக்காது. மற்றவர்களுக்குப் பிடித்ததை எழுதும் போதும் அது தனக்குப் பிடித்ததாக இருக்க வேண்டும். அதுதான் மற்றவர்களையும் படிக்கத் தூண்டும் சக்தி யுடையது. இதனை ஏற்றுக் கொள்கிறீர்களா? நடராஜன்' என்றான் சுதாகர்.

'பால் உறவு பற்றி எழுதுவது தவறல்ல. அதில் நெறிமுறை கட்டுப்பாடு, ஒரு வரம்பு இருத்தல் வேண்டும். அப்படியில்லாத எழுத்துகள் மனித வாழ்வைக் குறுகச் செய்கின்றன. கொச்சைப்படுத்து கின்றன. படிப்போர் உள்ளங்களை மயக்குகின்றன. அதனால் பண்பாடு அழிகின்றது. பெருமை குலை கின்றது. எனவே உள்ளக் கிளர்ச்சிகளைத் தூண்டும் இலக்கியங்கள் நமக்குத் தேவைதானா? அத்தகைய இலக்கியங்களைப் படைப்பதைவிடப் பழைமையை அனுசரிப்பதே சிறந்தது அல்லவா!' என்று கூறித் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான். சுதாகரின் கண்களில் ஏதோ ஒரு ஒளி சுடர்விட்டுப் பிரகாசிப் பதைக் கண்டாள் பத்மா. உண்மையைச் சொல்லிவிட்ட ஆறுதல் அவனின் நீண்ட சொற்களில் இருப்பதை உணர்ந்தான் நடராஜன்.

'மிஸ்டர் நடராஜன் என்ன மௌனமாகி விட்டீர்கள்' என்றான் சுதாகர்.

அவன் திடுக்கிற்று. 'இல்லை மிஸ்டர் சுதாகர் பழைமையில் புற உணர்ச்சிக்கே இடமில்லை, எமது சமுதாயம் மதத்தோடு ஒன்றிணைந்து விட்டதால் புற உணர்ச்சிகளைப் புறக்கணித்து விட்ட உப்புச்சப்பற்ற பாதையில் இன்றும் நமது கலைஞர்களும் கலைகளும் நடைபயில வேண்டுமா? வாழ்க்கையில் பத்தாம் பசலிக் கொள்கைகள் தாமே இடம்பெறுகின்றன. வாசகரின் மனத்தில் புதிய உணர்வைத் தோற்றுவிப்பதே புதிய இலக்கியம்' என்றான் நடராஜன்.

சுதாகர் மீண்டும் 'அதில் என்ன இருக்கிறது. சிந்தனையைக் கிளறும் சக்திதான் மேலோங்கி நிற்கிறது. அந்தக் கிளர்ச்சியினால் மனிதன் தன்னை மறக்கிறான். அது அவனை நிலை தடுமாறச் செய்கிறது' இதனைக் கேட்டதும் நடராஜன் புன்னகை புரிந்தான். அவனின் புன்னகை சுதாகரை என்னவோ செய்தது. பத்மா இடை யிட்டு 'நீங்கள் இலட்சியத்திற்காகத்தானே எழுது கிறீர்கள். ஆனால், அனேகமாக இலட்சியங்கள் வெற்றி யடைவதில்லை. இலட்சிய வாழ்வு கொண்டவர்களுக்கு அது கைகூடுவதும் இல்லையே' என்று கூறவே, சுதாகரின் முகம் மாற்றமடைந்தது. அவன் பத்மாவின் கேள்விகளுக்கு மறுமொழியொன்றும் கூறாது தனது முக மாற்றத்தை மறைக்க முயன்றான்.

நடராஜன் பத்மா கூறியதைக் கேட்டு மகிழ்ச்சி யடைந்தாலும் அதனை வெளிக்காட்டிக் கொள்ள வில்லை. மேலும் வாதத்தை வளர்த்துக் கொள்ள விரும்பாத நடராஜன் 'பத்மா நேரமாயிற்று. இன்று வானொலி நாடக ஒத்திகைக்குப் போக வேண்டு மல்லவா?' என்றான். அப்பொழுது தான் பத்மா நேரத்தைப் பார்த்தாள்.

'சுதா! எனக்கு ஒத்திகைக்கு நேரமாயிற்று; நானும் வருகிறேன்' என்று புறப்பட்டாள். நடராஜனும் தனது இருக்கையை விட்டு எழுந்தான்.

*(தொடர்ச்சி அடுத்த இதழில்)*

# இதோ உங்கள் விரல் நுனியில் மலேசியத் தமிழ் உலகம்

மலேசியாவில் முதன்முறையாக ஒரு மாறுபட்ட கோணத்தில் ''மலேசியாவில் தமிழ் இன மொழி வரலாறு'' என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, அடுத்த தலைமுறையினருக்காக இணையத் தளம் ஒன்று தமிழ் மொழியில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த அரிய முயற்சியில் இறங்கி, சாதனை படைத்தவர் திருமதி **கிருஷ்ணா ராஜ்மோகன்.**

**திருமதி. கிருஷ்ணாவுடனான சந்திப்பில் அவர் கூறியது:**

*கே : ஒரு தன்முனைப்பு-தலைமைத்துவப் பயிற்றுநரான நீங்கள் எப்படி இந்தத் தமிழ் இணையத்துக்குள் புகுந்தீர்கள்? இதன் நோக்கம் என்ன?*

ப : ''தம் வரலாறு தெரியாத இனம் வளராது. இது உலகம் கண்ட உண்மை. ஒரு தன்முனைப்புப் பயிற்சியாளருக்குக் கண்டிப்பாகச் சமுதாயச் சிந்தனை இருக்கும். இருத்தல் அவசியம். நல்ல தலைமுறையினரை உருவாக்கும் கடப்பாடு அவர்களுக்கு உண்டு. அதே சமயம், சமுதாயத்தில் வெவ்வேறு காலக் கட்டங்களில் ஏற்படும் சமுதாயச் சீர்கேடுகளைக் களையும் வகையில் அவர்களின் பயிற்சிகள் அவ்வப்போது புத்தாக்கம் செய்யப்படவேண்டும். மற்றவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுவதற்கு முன், அவர்கள் எப்போதும் விழிப்புணர்வோடு இருக்க வேண்டுமல்லவா?

நமது இன்றைய நிலை என்ன? மலேசியத் தமிழர்களின் வரலாற்றுக் குறிப்புகள் நமது இளைய தலைமுறையினருக்குத் தெரிவதில்லை என்பது ஒரு பெரிய குறை. நமது வரலாற்றை உள்ளடக்கித் தமிழ் மொழியில் பல நூல்களும் கட்டுரைகளும் வெளியிடப்பட்டு வருகின்றன என்ற போதும் புத்தகம் படிக்கும் பழக்கம் நம் இந்திய இளையோரிடம் குறைந்தும் மங்கியும் வருவதால், இதுபோன்ற விவரங்களை அவர்கள் தெரிந்து கொள்ள இயலாமல் போய்விடுகிறது.

இளையோர் இதில் ஆர்வம் காட்டுவதில்லை என்று இப்படியே விட்டுவிடவும் முடியாது. தம் இனத்தின் சிறப்புகளை அறியாமல் வாழும் இனம் காலப்போக்கில் ஒதுக்கப்பட்டுவிடும் அல்லது பிற இனத்தில் கலந்து தன் பெருமையை இழந்துவிடுவதோடு தன் பரம்பரையையும் திக்குத் தெரியாத திசைக்கு இட்டுச் செல்லும் அபாயமும் நேரிடும். ஆக, இதற்கு என்னதான் வழி என்று ஆராய்ந்தேன். இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியில், நமது வரலாற்றுக் குறிப்புக்களைச் சேகரித்து வைக்க, இணையமே ஒரு சரியான ஊடகம் என்பதால் இணையத்துக்குள் நுழைய வேண்டியதாயிற்று.

ஆக, இதன் முதல் நோக்கம் : நமது வரலாறு, காலத்தால் அழியாமல் பாதுகாக்கப்பட்டு, அடுத்தடுத்து வரும் தலைமுறையினருக்குப் போய்ச் சேரவேண்டும். வரலாற்றுக் குறிப்புகள் புதிய இளையோரிடையே சீரிய சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வல்லமை படைத்தவை.

இரண்டாவது நோக்கம் : என்னவென்றால், (1) மலேசியாவில் தமிழ் மொழி-இன வளர்ச்சிக்காகப் பாடுபட்ட முன்னோர்களை இந்த இணையத் தளத்தின் வழி அறிந்து கொள்ளல் (2) நமது எழுத்தாளர்களும், அவர் தம் படைப்புகளும், காலக்கரையான்களால் அழித்து விடாமல் பாதுகாத்தல் (3) மறைந்த எழுத்தாளர்களை நினைவில் நிலைத்தவர்களாகப் போற்றுதல். இவ்வாறு எல்லா எழுத்தாளர்களின் விவரங்களும், எந்த ஒரு பாகுபாடுமின்றி, நடுநிலையாக தொகுக்கப்படும்.

மூன்றாவதாக: இந்த இணையத் தளம் இப்போது உலக அரங்கில் உலா வரத்தொடங்கிவிட்டது. நமது எழுத்தாளர்களை உலகுக்கு அடையாளம் காட்டுவதோடு உலகளாவிய தமிழர்களுடன் உறவுப் பாலம் அமைக்கவும் வழி வகுக்கிறது.

ஆங்கிலேயர் ஆட்சி காலம் தொடங்கி இன்று வரையிலான தமிழ் வளர்த்த முன்னோடிகள், தமிழ் வளர்த்த பிற நாட்டு அறிஞர்கள், இலக்கிய வளர்ச்சி, இயக்கங்கள், தமிழ் வளர்த்த இசுலாமியர்கள், கிறித்தவர்கள், மலேசியத் தமிழ் ஏடுகள், பத்திரிகையாசிரியர்கள், மலேசியாவின் பன்மொழி இலக்கியங்கள், மலாயாவில் தமிழ் வளர்த்த நாடகக் கலைஞர்கள், மலாயா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பிரிவு ஏற்படுத்தப்பட்ட காலக்கட்டம், முதல் தமிழ்ப் பள்ளி, முதல் தமிழ்ப்பாட நூல், மலேசியாவின் முதல் தமிழ் ஏடு, முதல் தமிழ் நாவல், முதல் சிறுவர் நூல் போன்ற அனைத்து விவரங்களும் இங்கே கட்டம் கட்டமாகப் பதிவேற்றப்பட்டு வருகின்றன.

மாணவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் வகையில், 'அரும்புகள்' என்ற பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் சிறந்த படைப்புகள், இணையம் வழி நடத்தப்படும் உலக மாணவர் போட்டிகளுக்கு அனுப்பிவைக்கப்படவிருக்கின்றன என்பது மிகச் சிறப்பானதொரு திட்டம்.''

மலேசியத் தமிழ் வரலாற்றில் பதிக்கப்பட வேண்டிய ஒன்றை எந்த ஓர் ஆர்ப்பாட்டமுமின்றி தூர நோக்குச் சிந்தனையோடு தமது சொந்தச் செலவில் இந்த சாதனையை உருவாக்கியுள்ள இவர் உண்மையிலேயே பாராட்டுக்குரியவர். இளைஞர் சிந்தனையில் மாற்றத்தை உண்டு பண்ண, இவர் ஏற்கெனவே இளைஞர் தலைமைத்துவப் பயிற்சிகளில் புதிய உத்திகளை அறிமுகப்படுத்திச் சாதனை படைத்தவர் என்பதும் மாணவர் தத்தெடுப்பு முறையில், ஏழை மாணவர்கள் மூவரைத் தம் சொந்தச் செலவில் உயர் கல்வி வரை கொண்டு சென்றவர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

ஆர்ப்பாட்டமில்லாத இவரது சமூக சேவைகளுக்காக, சில தொண்டூழிய இயக்கங்கள் இவருக்குத் 'தன் முனைப்பு நுன்மதிச் செல்வி' மற்றும் 'பாரதி கண்ட புதுமைப் பெண்' என்ற பட்டங்கள் வழங்கியுள்ளன. மேலும், தனது வாழ்நாள் சாதனையாக, மனித நேய குணநலன்கள் பற்றிய ஆய்வு நூல் ஒன்றை எழுதும் முயற்சியில், இவர் பல நாடுகளுக்குத் தனிப்பயணம் சென்று வருவதை அறியும்போது, இவருக்குப் பாரதி கண்ட புதுமைப் பெண் என்ற பட்டம் பொருத்தமானதே எனத் தோன்றுகிறது. தூரநோக்குச் சிந்தனையோடு உருவாக்கப்பட்ட இந்த இணையத்தளம் வரலாறு படைக்கும் என்பது திண்ணம்.

உறவுப்பாலம் அமைக்க விரும்பும் உலகத் தமிழ் இணையங்கள்/உள்ளங்கள் தொடர்பு கொள்ளலாம்.

www.tamilwriters.net அஞ்சல் முகவரி : PO Box 1208, Pantai Bharu, 59700 Kuala Lumpur, Malaysia

# வெற்றிக்கான சில வழிகள்

சிவவதனி பிரபாகன், கனடா *(சென்ற இதழின் தொடர்ச்சி)*

**வா**ழ்வில் இலக்குகளைவிட முக்கியத்துவம் வாய்ந்தவை வாழ்க்கைப் பாதைகள், எந்த ஊரைச் சென்றடைகிறோம் என்பதைவிட எந்தப் பாதையைத் தெரிவு செய்கிறோம் என்பதைப் பொறுத்தே எம் பயணத்தின் புனிதத்துவம் அமைகிறது.

வாழ்வின் செயல்பாடுகளுக்கான இயக்க விசையை நன்னெறிச் சிந்தனைகள் தருகின்றன.

வெற்றிகளைத் தள்ளிப்போடும் விடயமே காலம் கடத்தும் செயல்கள்.

காலத்தைத் தள்ளிப்போடுவது, காலம் தாழ்த்துவது போன்ற முடக்கிப்போடும் பழக்கங்கள் தூர விரட்டப்பட வேண்டியவை.

பல பிரச்சினைகள் வளரவும் வாய்ப்புகள் தவறிப் போகவும் இத்தகைய பழக்கங்களே காரணமாகின்றன. கால அட்டவணையைத் தயாரித்து வரிசைக் கிரமமாகக் குறித்த கால எல்லைகளுக்குள் வேலையைச் செய்வது பயன்தரும் பழக்கமாகும். குறிப்பாகக் கவனத்தைத் திசை திருப்பும் தூண்டல்களால் தூண்டப்படாது முன்னுரிமை பெற்ற செயல்களின் மேல் கவனத்தை முழுமையாகத் திசைதிருப்பும் பழக்கமானது உதவுகின்ற ஒன்றாகும்.

வாழ்வில் பாதுகாப்பாகவே இருக்க முயல்வதானது நீண்ட கால நோக்கில் பாதுகாப்பைத் தருவதில்லை. சில மூடத்தனங்களையும் விபரீதக் கற்பனைகளையும் விலக்கிவிட்டுச் சவால்களை எதிர்கொள்வதே வெற்றிக்கு வழிவகுக்கும். வெற்றி நோக்கிய பயணங்கள் கண்மூடித்தனமாக இருக்க விடக்கூடாது. எதை எப்படிச் செய்கின்றோம் என்பதில் பூரண தெளிவும் உறுதியும் அவசியம்.

வாழ்வில் வெற்றிபெறக் கற்பனைகளும் கனவுகளும் மட்டும் போதாது. எண்ணியதைச் செய்கின்ற செயலாற்றல் அவசியம். செயலாற்றலை வளர்த்துக் கொள்ளும் இயக்குவிசையானது தன்னம்பிக்கை கொண்ட மனங்களில் இருந்து மட்டுமே உற்பத்தியாக வல்லது.

வெற்றியின் பயன்கள் நெடுந்தூரமாக நீண்டுக் கிடந்தாலும் அந்தப் பயணத்தின் மைல்களாக முன்னகரச் செய்கின்ற சின்னச் சின்ன வெற்றிகளைக் குறுகிய கால இலக்குகளாகக் கொண்டு வெற்றிபெறுவது அவசியமாகும். இறுதி இலக்கை மட்டுமே எண்ணுபவர்களால் இலக்கு நோக்கி உற்சாகமாகப் பயணிக்க முடியாது. இலக்கைத் தொட உதவும் தொடு புள்ளிகளானச் சின்னச் சின்ன வெற்றிகள் வெற்றி நோக்கிப் பயணிப்பதற்கான ஊக்கவிசையைத் தோற்றுவிக்கின்றன.

''வெற்றி என்பது வெற்றி பெறுவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதில்தான் தங்கியுள்ளது'' என்றார் பிரெஞ்சு அரசியல் மேதை மாண்டென்குவின்.

இலக்குகளுக்கான கால எல்லையைக் கணக்கிடும் பொழுது அதில் மெய்ம்மை சார்ந்திருப்பது அவசியமாகிறது. யதார்த்தத்தை விட்டு விலகிய கணக்குகள் பொய்ம்மைக்கால எல்லையைக் கணக்கிட வைக்கும். ஒரு காரியத்தைச் செய்வதற்குத் தடையாக உள்ள அக, புறக் காரணிகள் இந்தக் கணக்கீட்டில் உள்ளடக்கப்படுவது அவசியமாகும். காலக்கணக்கீட்டின் கணிப்பின் போது பின்னடைவுகள், எதிர்பாராத தாமதங்கள், நிருவாகத் தன்மை, மாற்றியமைப்புகள் எனப் பல விடயங்களையும் திறனாய்வு செய்வது அவசியமாகும்.

''நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தத் தெரிந்தவனுக்கு எப்பொழுதுமே அது கைவசமே இருக்கும்'' என்றொரு பொன்மொழியுண்டு.

''அறிவியலின் மகத்தான கனாக்கள் நேரம்; உண்மையில் உயர்ந்த செல்வமும் நேரமும்தாம்'' என்கிறார் ஐன்ஸ்டீன்.

நேரத்தைத் திறமையாக நிருவகிப்பவர்கள் மட்டுமே குறித்த காலத்துள் தம் குறிக்கோள்களை அடைய முடியும். நேரத்தை மீதப்படுத்துபவர்கள் வெற்றியாளராக இருப்பதோடு ஆக்கவளம் நிறைந்தவராகவும் இருப்பார்கள்.

''நீங்கள் மணித்துளிகளைப் பாதுகாத்தால் போதும். மணிகள் தம்மைத் தாமே கவனித்துக் கொள்ளும்'' என்றார் இங்கிலாந்தின் அரசியல் மேதை பிலிப் ...ர்மா ஸ்டான் ஹோப்.

வெற்றி நோக்கிய பயணத்திற்கு மன உறுதி உதவுவதுபோல் வேறொன்றுமில்லை. பயணத்தின் ஆரம்பத்திலுள்ள அதே உற்சாகமும் மன உறுதியும் இலக்கைத் தொடும் வரை குன்றாமல் இருக்குமாயின் நிச்சயம் வெற்றி கிட்டும்.

''வெற்றி பெறுவோம் என்கின்ற மன உறுதியைத் தவிர வாழ்வில் முக்கியமானது எதுவுமில்லை'' என்றார் ஆபிரகாம் லிங்கன். வாழ்நாளில் பல சவால்களை மன உறுதியோடு எதிர்கொண்டு வெற்றி பெற்ற தலைவர் அவர். வாழ்வில் அவர் சந்தித்த சோதனைகளும் தோல்விகளும் ஏராளம். ஆனால் அவை அனைத்தையும் சாதனைகளாக்கினார்.

பிறப்பில் ஏழைமை, கல்வி கற்க வாய்ப்பின்மை, இளவயதில் வர்த்தகத்தில் தோல்வி, 27ஆவது வயதில் நரம்பு வியாதி, அரசியலில் 18 தேர்தல்களில் பல்வேறு பதவிகளுக்குப் போட்டியிட்டுத் தோற்றமை, பொருள் அழிவு, மக்களாட்சியைக் கொண்டுவர நடாத்திய போராட்டங்கள் என எண்ணற்ற வீழ்ச்சிகள் அவர் வாழ்வில், அவரைப் பற்றிக் குறிப்பிட்ட அமெரிக்கத் தளபதி ஸ்டான்டன் பின்வருமாறு கூறினார். ''வாழ்வில் அழக்கூடாது என்பதற்காகச் சிரித்தவர் அவர்.'' அழகான ஆழமான கூற்று அது. உண்மை நிறைந்த கூற்றுமாகும்.

இத்தகைய கண்ணீர்க் கதைகளைச் சுமந்த வெற்றியாளர்கள் பலரைச் சரித்திரம் ஏற்றிக் கொண்டாடுகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற ஒவ்வொரு போராளிகளின் பின்னாலும் இத்தகைய சோதனைகளை வென்ற சாதனைச் சரித்திரங்கள் இருக் கின்றன. அத்தகைய வெற்றியாளர்களின் முழுமை வடிவ மாகத் தமிழீழ மக்கள் தமது வாழ்காலத்தில் தரிசிக்கும் ஒப்பற்ற மனிதப் பெருந்தகையாகத் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் விளங்குகின்றார். ''விடாமுயற்சியின் இடத்தை உலகில் வேறெதுவும் பிடித்துவிட முடியாது'' என்றார் அமெரிக்க முன்னாள் அதிபர் கால்வின் கூலிட்ஜ். அது தேசியத் தலைவரது வரலாற்றில் உண்மையாகியுள்ளது.

வெற்றி என்பது ஒரு நாள் நிகழ்வதன்று. பல நாள் உழைப்பு. இதனை அழகாகக் கூறுகிறார் மாண்டி ஹால் என்ற கவிஞர். ''நான் ஒரே இரவில் வெற்றி பெற்றேன். ஆனால் அதனை அடைய 20 வருடங்கள் ஆயிற்று.'' இதுவே யதார்த்தம்.

வெற்றிகள் பலவீனங்களைப் பலமாக்குகின்றன. வெற்றி பெற்றவர்களின் சரித்திரங்கள் வெற்றி நோக்கிப் பயணிப்பவர்களுக்கு வாழ்க்கைப் பாடங்களாகின்றன.

வெற்றி என்பது மனத்திலும் செயலிலும் எடுத்துக் கொள்ளப்படும் உறுதி. எதிர்காலங்களை வளமாக்கு கின்ற உழைப்பு. வாழ்வை அழகுபடுத்தும் பூவே வாகைப்பூ (வாகை-வெற்றி). இந்தப் பூவை நாமெல் லோருமே சூடிக்கொள்ள வேண்டும்.

மனிதர்களுக்கு அந்நியமானதன்று வெற்றி. மனம் நினைத்தால் வாழ்வே வெற்றிகரமாகும். இதை உணர்ந்தால் வாழ்வில் வெற்றிகள் குவியும். வாழ்வே வென்று பெற்ற வரம் தானே. வரத்தை வாழ்ந்து மகிழ்ந்து பயனெய்துவோமாக! ✱

*நன்றி : 'வாழ்வெனும் வரம்' நூலிலிருந்து*

# தமிழீழம் தனி நாடாவதே இலங்கை அமைதிக்கு வழி!

## பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

ஈழத்தில் தொடர்ந்து நடக்கின்ற கொடுமையும், கொடுங்கோன்மையும் உலகத்தில் வேறு எங்கும் நடந்திராத அக்கிரமும் அநியாயமுமாகும். இந்தியா வைப் போலப் பல இனமக்கள் வாழும் நாடு அல்ல, ஈழம், இரு இன மக்கள் மட்டுமே மண்ணுரிமை கொண்டாடும் நாடு. இந்த மண்ணுரிமையின் இறுதி முடிவை ஈழத் தமிழ் மக்களுக்காகப் போராடுபவர்களே எடுக்க வேண்டும். எனினும் நடுநிலையோடு நாம் கருத்துரைப்பது நம் கடமை. இந்திய நாட்டின் அண்மையில் உள்ள ஒரு சின்னஞ் சிறு நாடு இலங்கை. இந்தியாவில் பல இனங்களும் மொழிவழி மாநிலமாகி, நடுவணரசின் கூட்டாட்சி வழி தங்கள் தங்கள் இன உரிமைகளோடு வாழ்வதைப் பார்த்த பிறகும் இலங்கை இன வெறி அரசுகள் படிப்பினை பெறவில்லை. தந்தை செல்வா காலம் முதல், இலங்கை விடுதலை பெற்றுப் பல ஆண்டுகளாக வேண்டியும் தமிழர்களுக்கு எந்த உரிமையும்-பணிகளும்-சிங்கள இனத்திற்குத் தந்த வாய்ப்புகளும் வழங்கப்படவில்லை.

எவ்வளவோ ஜனநாயக வழியில் எடுத்துக் கூறியும், போராடியும் சிங்கள இனவெறியர்கள் தமிழர் களின் சமன்பாடுகளுக்கும் உரிமைகளுக்கும் வழி வகுக்கவில்லை. மாறாக வன்முறை, பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துத் தமிழர்களை ஒடுக்கினர்.

இந்த அடாவடித்தனமான ஓரின ஆதிக்க வெறி யினால் ஈழத்தில் புரட்சி வெடித்தது. பல குழுக்களாகப் போராடி, இப்போது அப்புரட்சிப் போராட்டம் விடுதலைப் புலிகள் கைக்கு வந்து முழுமையாகத் தமிழீழத் தனிநாட்டுக் கொள்கைக்குப் போராடி வருகிறார்கள்.

கடந்த காலங்களில் சிங்கள இனவெறி அரசு நடத்திய வெறி ஆட்டங்கள் அடுக்கடுக்கான பெரும் கொடிய மன்னிக்க முடியாத பயங்கரச் செயல்களாகும். இன்று செஞ்சோலைப் பசுங்கிள்ளைகளைக் கொன்றழித் தது வரை மன்னிக்க முடியாத பல கொலை வெறி களைச் சிங்கள ஏகாபதிபத்திய அரசு ஈழத்தமிழர்கள் மீது நடத்தியிருக்கிறது. ''தமிழீழ விடுதலைக்காக எழு பதினாயிரம் மக்கள் உயிர் கொடுத்திருக்கிறார்கள். குருதி ஆறுகள், புதை குழிகள், எண்ணிலடங்காதன.

இன்னும், இராசபக்சே ஆட்சி வரை ஒரு சிறு உரிமையும் ஈழத் தமிழர்களுக்கு வழங்கப்படாமல் ஏதிலிகளாக உலகம் முழுவதும் ஈழமக்கள் அலைந்து கொண்டுள்ளனர். முப்படைகளையும் வைத்து இராஜ பக்சே அரசு இன்றும் தமிழர்களைக் கொன்றொழிக் கிறது. யாழ்ப்பாண மக்கள் சொல்லொணாத் துன்பத்தில் துடிக்கிறார்கள். உலகத் தமிழர்கள் செய்வதறியாது கண்ணீர் சிந்துகின்றனர். நார்வே நாட்டின் சமாதான நடவடிக்கையையே, சிங்களத்தார் குறை கூறுகிறார்கள். இத்தனையையும் அறிந்த ஐரோப்பிய, அமெரிக்க உலக சமுதாயம், உண்மை உணர்ந்தும் ஈழத் தமிழர்கள் என்ற காரணத்தால் உரிய முறையில் சிங்கள அரசைக் கண்டிக்க மறுப்பது மிகப் பெரும் உண்மைக்குப் புறம்பானதாகும்.

உலக சமுதாயம் தமிழீழத் தமிழர்கள் மீது கருணை காட்டவேண்டும். இந்திய அரசு மனம் நோகும் வகையில் சில தவறுகள் நடந்திருக்கலாம்.- எனினும் ஆசிய வல்லரசான இந்திய அரசு, தன் அண்டை நாடான இலங்கையைக் கண்டிப்பது இந்திய சனநாயகக் கடமையாகும். இந்தக் கடமையை உரிய முறையில் கடைப்பிடிக்கவேண்டும். இந்தியாவில் நிலவும் மாநில ஆட்சியை ஈழத்தில் அமைக்கும் வகை சமாதான முயற்சி என்பது காலம் கடந்தது. ஆயிரக்கணக்கானோர், உயிர்ப்பலி கொடுத்து, தமிழ் மக்களைப், பச்சிளங் குழந்தைகளை இரத்த ஆற்றில் மிதக்க விட்டபிறகு, உலகமெல்லாம் ஈழத் தமிழர்களை அகதிகளாக அலைய விட்டபிறகு இந்தியா போன்ற மாநில ஆட்சி என்று பேசுவது, ஒரு கேலிக்கூத்தே ஆகும். ஒருமைப்பாடு காணமுடியாத கசப்புணர்வுகள் இரு இனங்களுக் குள்ளும் வேரூன்றி விட்டது.

ஈழத்தமிழ் இனம் ஈழத்தில் சமாதானமாக வாழ வேண்டுமெனில் தமிழீழம் தனிநாடாவதைத் தவிர வேறு வழி இல்லை. இந்த உண்மையை உலகச் சமுதாயம் உணரவேண்டும். இந்தியா, தமிழ்நாட்டுத் தமிழ் மக்களை, உலகத்தில் 90 நாடுகளில் வாழும் தமிழ்ச் சமுதாய மக்களை மதிக்கும் வகையில் எண்ணித் துணிய வேண்டும். தமிழீழம் தனி நாடாவதைக் காலம் நிச்சயமாக அங்கீகாரம் செய்யும். இதுவே காலத்தின் கட்டளை. ✱

*- நன்றி : தமிழ்ப் பணி.*

நூல் நயவுரை

# பிரித்தானியாவும் ஈழத் தமிழரும்

## மூத்த நூலகவியலாளர் என். செல்வராசா, இலண்டன்

*(இலண்டன், ஐ.பீ.சி.-'இலக்கியத் தகவல் திரட்டு' பகுதியில் 19-8-07 அன்று ஒலிபரப்பானதன் சுருக்கம்)*

இலண்டனில் தற்போது எம்மிடையே வாழ்ந்து வரும் பழம்பெரும் பத்திரிகையாளர்களுள் பொன் பால சுந்தரமும் ஒருவர். கொழும்பு லேக் அவுஸ் நிறுவனத்தின் தினகரன் பத்திரிகையில் சிரேஷ்ட உதவி ஆசிரியர்களுள் ஒருவராகப் பணியாற்றியவர். புலம்பெயர்ந்து நீண்டகாலமாக இலண்டனில் இவர் குடியேறி வாழ்ந்து கொண்டிருக்கிறார். 50 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளில் பணியாற்றிய அனுபவம் மிக்கவர் இவர். மும்மொழிகளிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். சுதந்திரன் பத்திரிகையில் பத்திரிகையாளராகத் தன் பயணத்தைத் தொடங்கிய இவர் பின்னர் வீரகேசரி, தினகரன், டெய்லி நியூஸ் போன்றவற்றிலும் ஆசிரியராகப் பணியாற்றி இருக்கிறார். இன்று புகலிடத் தேசங்களில் பத்திரிகையாளர்களாகப் பவனி வரும் பலருக்கு ஆரம்ப கால குருவாக-வழிகாட்டியாக இவர் இருந்திருக்கிறார்.

இவர் அண்மையில் வெளியிட்டுள்ள நூலின் பெயர் 'பிரித்தானியாவும் ஈழத் தமிழரும்' என்பதாகும். இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் வாயிலாகத் திரு. ஐ.தி. சம்பந்தன் அவர்கள் வெளியிட்டுள்ள இந்த நூலின் தலைப்பினைப் பார்த்ததும் இது ஈழத் தமிழர் பிரித்தானியாவில் குடியேறிய வரலாற்றைப் பதிவு செய்யும் ஆய்வு நூலோ என்ற ஐயத்தை எவரும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டா. இந்த நூல் ஒரு வகையில் இலண்டனிலும் பிற புகலிட நாடுகளிலும் தாயகத்திலும் வாழும் ஈழத் தமிழருக்குப் பிரித்தானியாவைப் புரியவைக்கும் ஒரு முயற்சியாக வேண்டுமானால் கருதிக் கொள்ளலாம். நாம் வாழும் நாடுகளை அறிந்து அதற்கமைய நமது வாழ்க்கையை அந்தந்த நாடுகளிலும் தமது தாய் நாட்டிலும் அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதை மக்கள் முன்வைக்கும் ஆதங்கமே இந்த நூல் உருவாக்கத்துக்குக் காரணம் என்று நூலாசிரியரே இங்குக் குறிப்பிடுகின்றார்.

இந்த நூல் தமிழகத்தில் சூளைமேட்டுப் பகுதியிலுள்ள உலகத் தமிழர் பதிப்பகத்தினால் நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் இன்று புகலிட ஈழத் தமிழர்களிடையே மெல்ல மெல்ல அறிமுகமாகிவரும் பதிப்பாளரான இரா. மதிவாணன் அவர்கள் இருக்கின்றார். எம்மவருக்குச் சுடரொளி வெளியீட்டுக் கழகமே மதிவாணனையும் பதிப்பாளராக அறிமுகப் படுத்தியிருக்கிறது.

320 பக்கங்களில் ஆசிரியர் 128 சிறு தலைப்புகளில் இந்த நூலை விரிவாகவும் சுவையாகவும் எழுதியிருக்கிறார். புதினப் பத்திரிகை வாசிப்பது போன்ற உணர்வினை இது தோற்றுவிக்கின்றது. பத்திரிகையாளர் என்ற வகையில் பொன் பாலசுந்தரத்தின் எழுத்து நடை இயல்பாகவும் வாசகர்களைப் பிடித்து இழுத்து வைத்திருப்பதாகவும் அமைகின்றது. பெரும்பாலான செய்திகள் பிரித்தானியாவில் வாழும் எம்மவர்கள் கண்டும் கேட்டும் வந்த பழம் செய்திகளாயினும்கூட வாசிக்கும் போது அவை ஒரு பயணக் கதை போன்று சுவாரசியமாகவே இருக்கின்றன. அந்த வகையில் திரு. பொன் பாலசுந்தரம் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. 128 சிறு தலைப்புகளில் தனித்தனிச் செய்திகளை இவர் தருவதால் தொடர் வாசிப்புக்கான தேவை அங்கு இல்லாது போகின்றது. தொடர்பு அறுந்து விடுமோ என்ற கவலையின்றி எப்போது வேண்டுமானாலும் எந்த இடத்திலிருந்தும் இந்த நூலை வாசிக்கத் தொடங்கலாம்.

இன்று பிரித்தானியப் பிரஜா உரிமை பெற விண்ணப்பிக்கும் எவருக்கும் பிரித்தானியா பற்றியும் பல்லினச் சூழலில் வாழும் அதன் குடிமக்கள் பற்றியும் ஓரளவு தெளிவான அறிவு தேவைப்படுகின்றது. பிரித்தானியப் பிரஜா உரிமை பெற அவர்கள் நேர்முகப் பரீட்சை, எழுத்துமூலப் பரீட்சை, பொது அறிவுப் பரீட்சை என்று பல பரீட்சைகளில் சித்தியடைய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்த நூல் அத்தகையவர்களுக்கு நல்லதொரு தகவல் களஞ்சியமாகவும் கைந்நூலாகவும் இருக்கும் என்று நம்பலாம். மேலும் தாயகத்திலிருந்து எதிர்காலத்தில் பிரித்தானியாவுக்கு வந்து குடியேறும் பசுமையான எண்ணம் கொண்டவர்களுக்கு எதார்த்த நிலையை அறிந்து தம் எண்ணத்தை இறுதிக் கட்டத்தில் மீள் பரிசீலனை செய்து கொள்ளவும் இந்த நூல் பயனுள்ளதாக அமையலாம்.

நீண்டகாலப் பத்திரிகைத் துறை அனுபவமும் புகலிடம் பற்றிய பரந்துபட்ட அறிவும் கொண்ட திரு. பொன் பாலசுந்தரத்திடம் ஈழத்தமிழ் வாசகர்கள் நுனிப்புல் மேய்வதாக அல்லாமல் இன்னும் ஆழமான விடயங்களையே எதிர்பார்க்கின்றார்கள் என்பது உண்மையாகும். ஈழத் தமிழரின் பிரித்தானியாவிற்கான வருகை வரலாறு இன்னமும் இங்கு முறையாகப் பதிவு பெறவில்லை. அவுஸ்திரேலியாவிலும் கனடாவிலும் இதற்கான அஸ்திவாரம் இடப்பட்டு நீண்டகாலம் ஆகிவிட்டது. இத்தகைய ஆழமான, ஆய்வு ரீதியான வரலாற்று நூல்களைத் தேடல் உணர்வும் பன்னாட்டுத் தொடர்பும் சிறந்த ஆங்கில மொழியறிவும் மிக்க திரு. பொன் பாலசுந்தரம் போன்றவர்கள்தாம் எதிர்காலத்தில் பிரித்தானியாவில் எமக்கு எழுதி வழங்க வேண்டும். இவ் வரலாறு முறையாக எழுதப்படாவிட்டால் எமது இரண்டாம் தலைமுறையினருக்குப் பிரித்தானியாவில் தமது மூதாதையர் வந்து குடியேறிய வரலாறு சரியாகப் பதியப்படாமல் போய்விடலாம். எமது வாழ்வியல் போராட்டம் பற்றிய முறையான தகவலே காலக் கிரமத்தில் தெரியாது போய்விடலாம். இத்தகைய பல்லின, கலாச்சாரச் சூழலில் வாழும் எம் பிள்ளைகள் எமது பண்பாட்டுச் சூழல் பற்றிய செய்திகளை அன்னிய மொழி பேசும் நண்பர்களுக்கு எடுத்துச் சொல்ல வழியேற்படாதும்போய்விடும். இதனை மனத்தில் இருத்தி திரு. பொன் பாலசுந்தரம் அவர்களின் விரிவான ஆய்வு நூலைப் 'பிரித்தானியாவில் ஈழத் தமிழர்' என்ற தலைப்பிலாவது விரைவில் எதிர்பார்ப்போம். ✱

# திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!!

**சோம. வள்ளியப்பன்**, மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், சென்னை, தமிழ்நாடு

## திட்டமிடல்

### இலக்கினைப் பகுதிகளாக பிரித்தல்

இதுவரை பல உதாரணங்களை இலக்குகளாகப் பார்த்தோம். இங்கு இலட்சியத்தினைப் பகுதிகளாகப் பிரிக்கும் பகுதிக்கு ஒரு குறிப்பிட்ட உதாரணத்தை முழுமையாக மட்டுமே பார்ப்போம். அந்த உதாரணம் பாலு என்ற பள்ளி மாணவன் எடுத்துக் கொண்ட இலக்கு,

''அடுத்த ஆண்டு இறுதியில் நான் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 500 மதிப்பெண்களுக்கு 490 எடுத்து இருப்பேன்.'' என்பதாகும் (என்று வைத்துக் கொள்வோம்). இது அனைவருக்கும் பொதுவான, எளிதான உதாரணமாக இருக்கும்.

இந்த இலக்கினைப் பாலு அடைவது எப்படி? அதற்கான திட்டமிடல் என்ன?

தற்பொழுது பாலு இருக்கும் நிலை — பாலு அடைய வேண்டிய நிலை

□ ? // X O □

2002 ஜனவரி — பாலு கடக்க வேண்டிய பாதை — 2003 ஏப்ரல்

பாலு என்ற மாணவன் இருக்கும் நிலைமையை அறிய கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை காண வேண்டும்.

**அவன் எப்படிப்பட்டவன்**

1. அவனுடைய பாடங்களும் அவனுடைய படிக்கும் திறனும் என்ன?
2. அவன் படிக்கும் முறை என்ன?
3. எந்தப் பாடங்களில் அவன் கெட்டிக்காரன்?
4. எந்தப் பாடங்களில் அவன் சிரமப் படுவான்?

**அவனுடைய பழக்க வழக்கங்கள்**

5. அவனுடைய பொழுது போக்குகள் என்ன?
6. அவனால் எதை விடமுடியாது?
7. எது அவனுக்கு அறவே பிடிக்காது?
8. அவன் நண்பர்கள் யார்?

**குடும்பத்தினர்**

9. அவனுடைய குடும்பத்தின் வசதி எப்படி?
10. அவனுடைய தாய், தந்தையர் அவன் படிப்பில் கவனம் கொள்கிறார்களா?
11. அவனுடன் பிறந்தவர்களால் அவனுக்கு உதவியா, உபத்திரவமா?
12. அவன் வீட்டுச் சூழ்நிலை படிப்பதற்குச் சாதக மானதா/பாதகமானதா?

**வீடு/போக்குவரத்து வசதி**

13. அவன் வீட்டில் படிக்கும் வசதி எப்படி?
14. அவன் வீட்டிலிருந்து பள்ளி எவ்வளவு தூரம்?
15. அவனிடம் வாகனம் ஏதும் உண்டா? பயணம் எப்படி?
16. அவனுடன் செல்லும் நபர்கள் யார்? அவர்கள் தன்மை என்ன?

**பள்ளி மற்றும் ஆசிரியர்கள்**

17. அவன் பள்ளியின் தரம் எப்படி?
18. அவன் பள்ளியின் சூழ்நிலை எப்படி?
19. அவன் ஆசிரியர்களின் திறமையும்/அக்கறையும் எப்படி?
20. பொதுத் தேர்வைப் பொறுத்தவரை அந்தப் பள்ளியின் ஆர்வம் எப்படி?

**பாடத் திட்டங்கள்**

21. பத்தாம் வகுப்புப் பாடத்திட்டங்களில் இந்த வருடம் மாறுதல்கள் ஏதும் உண்டா?
22. அவற்றின் கனம் என்ன? பாடத் திட்டங்கள் புதியனவா, அன்றி 9ஆவது வரை அவன் படித்த பாடங்களின் தொடர்ச்சிதானா?
23. மொத்தம் எத்தனை பாடங்கள்? (சப்ஜெக்ட்ஸ்)
24. ஒவ்வொரு பாடத்திற்கும் எத்தனை தாள்கள்? மொத்த மதிப்பெண்கள் எவ்வளவு?

**தேர்வுகள்**

25. பொதுத் தேர்வு பெரும்பாலும் எந்த மாதம், எந்த எந்தத் தேதிகளில் நடைபெறும்?
26. பொதுத் தேர்வில் ஒவ்வொரு தாளுக்கும் தரப்படும் நேரம் எவ்வளவு?
27. பொதுத் தேர்வு எங்கு நடைபெறும்? (ஊர், இடம், சூழ்நிலை)
28. பொதுத் தேர்வு நடத்தப்படும் முறைகள் என்ன? (Theory, Practicals, Graph, Maps etc...)

**நேரம்**

29. பொதுத் தேர்விற்குப் படிப்பதற்கு எவ்வளவு நேரம் தேவை?

30. எந்த மாதம்/நாள் வரை பள்ளி வகுப்புகள் நடைபெறும்?
31. எந்த மாதத்திற்குள் பாடத்தை முடிப்பார்கள்?
32. எந்த மாதத்திற்குள் ரிவிஷன் தொடங்குவார்கள்?

**புத்தகங்கள்**

33. பள்ளியில் கொடுக்கும் புத்தகங்கள் யாவை?
34. தேர்வுக்குத் தயாரிக்க வேறு ஏதேனும் புத்தகங்கள் வாங்க வேண்டுமா?
35. வாங்கவேண்டிய புத்தகங்கள் எங்குக் கிடைக்கும்?
36. புத்தகங்கள் என்ன விலை? பிரச்சினை ஏதுமில்லையே?

**கூடுதல் மதிப்பெண் பெற...**

37. வேறு என்ன படிக்க வேண்டும்?
38. அவை நூலகங்களில் கிடைக்குமா?
39. அவை நண்பர்கள், அல்லது சென்ற ஆண்டு படித்தவர்களிடம் கிடைக்குமா?
40. சென்ற ஆண்டில் எழுதியவர்களைச் சந்திக்கலாமா? உபயோகமான தகவல்கள் கிடைக்குமா?

**தேர்வு**

41. கையெழுத்துப் புரியும்படியாக உள்ளதா?
42. வழக்கமாகச் செய்யும் தவறுகள் என்ன?
43. எப்படி எழுதுதல் கூடுதல் மதிப்பெண் பெற உதவும்?
44. எழுதும் வேகம் போதுமானதாக உள்ளதா?

**கூடுதல் பயிற்சி**

45. எந்த எந்தப் பாடங்களில் கூடுதல் பயிற்சி தேவை?
46. எந்த ஆசிரியர் அந்தப் பயிற்சி தர வல்லவர்?
47. அதற்கான நேரம் எப்பொழுது?
48. அதற்கான விலை என்ன / சம்பளம் கொடுக்க வேண்டிய தொகை எவ்வளவு?

**உடல் நலம்**

49. அடிக்கடி வரும் உடல் நலக் குறைகள் ஏதும் உண்டா?
50. பொதுவாக உடல் ஆரோக்கியமானதா?
51. கூடுதல் உழைப்பைத் தாங்க வல்லதா?
52. அதற்கான உணவும் பயிற்சிகளும் எவை?

இந்தக் கேள்விகள் எல்லாம் முக்கியமானவை. ஒவ்வொரு கேள்வியும் முன்பே கேட்கப்படாவிட்டால், யோசிக்கப்படாவிட்டால் அதன் விளைவுகள் பாலுவின் இலக்கை அடைவதில் தடங்கலை ஏற்படுத்தலாம். இந்தக் கேள்விகள் இந்த உதாரணத்திற்கு மட்டுமே என்பதை நாம் அறிவோம். நம் இலட்சியத்தைப் பொறுத்துக் கேள்விகளும் பதில்களும் நிச்சயம் மாறும்.

**விவரமான திட்டமிடல்**

திட்டமிட்டபடி இலக்கை அடைவது சுலபமன்று. அதற்குக் கடின உழைப்புத் தேவை. அந்த உழைப்பும் காலத்தே செய்ய வேண்டும். செய்ய வேண்டிய இடத்தில் செய்ய வேண்டும். இல்லையேல் பலனில்லை.

Detailed Planning தான் எந்த ஒரு சிறு விஷயமும் விட்டுப் போகாமல், இலக்கை அடையப் பயன்படும்.

ஓர் ஆங்கிலப் பாடல் இங்கு உதாரணமாக சொல்லப்படுவது பொருத்தமாக இருக்கும். ஓர் ஆணி சரியான நேரத்தில் கிடைக்காததால் ஒரு பெரிய போரில் மன்னன் தோற்றுவிட்டானாம். அவனிடம் பலவித படை பலங்களும் இருந்தும் ஒரு சிறு ஆணி இல்லாததாலா பெரிய சண்டையில் தோற்க முடியும்? படித்துப் பாருங்களேன் இந்தப் பாடலை (ஆங்கிலப் பாடலின் தமிழ் மொழிபெயர்ப்பு)

**ஓர் ஆணி இல்லாததனால்**
**- குதிரையின் லாடம் போயிற்று.**
**(அந்த) ஒரு லாடம் இல்லாததனால்**
**குதிரையின் கால் போயிற்று**
**(அந்த) கால் போனதால்,**
**குதிரை போயிற்று.**
**(அந்த) ஒரு குதிரை போனதனால்**
**குதிரைப்படை வலுவிழந்தது**
**(அந்த) குதிரைப் படை வலுவிழந்ததனால்**
**போரில் வெற்றி பறி போனது.**

ஆக ஒரு சிறு லாடத்து ஆணி போனதனால் ஒரு போரில் வெற்றி கை நழுவிப் போய்த் தோல்விதான் மிஞ்சியது என்கிறது அந்த For want of a nail என்கிற ஆங்கிலப் பாடல்.

எதிரிகள் வருவதை அறிவிக்க ஒரு குதிரை வீரன் நகருக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்தான். அவனது குதிரைக்குச் சில தினங்கள் முன்பு லாடம் கழன்றுவிட்டது. அரண்மனைக்கு லாடம் கேட்டுச் சொல்லி அனுப்பி இருந்தான். அது அரண்மனையினால் அலட்சியப் படுத்தப்பட்டது. யாரும் கண்டு கொள்ள வில்லை. இந்த நிலையில் எதிரிப் படைகள் வருகின்றன. பார்க்கிறான். குதிரையிலேறிக் காற்றாய்ப் பறந்து, நகருக்குள் வந்து சேதி சொல்லி, போருக்குத் தயாராகும் படிச் சொல்லவேண்டும். ஆனால், குதிரைக்கு லாட மில்லை. எதிரிப் படைகள் எவ்வித எதிர்ப்புமின்றிச் சுலபமாய் நகருக்குள் நுழைந்தன. எதிரிகள் போரில் வென்றனர். 'ஒரு லாடம் நேரத்தே கிடைக்கவில்லை, ஒரு படையே தோற்றது' என்றும் இதையே வேறுவித மாகக் கூறுவர்.

வருடமெல்லாம் நன்றாகப் படித்துவிட்டு, முதல் தேர்வினையும் சிறப்பாக எழுதிவிட்டு, இரண்டாவது தேர்வின் பொழுது சோர்வு அதிகமாகி, மூன்றாவது தேர்வில் ஜூரம் வந்து, மிச்ச தேர்வுகளை எழுதியதே பெரிய விஷயமாக்கிய மாணவர்கள் உண்டு.

ஏன் இப்படி? அவர்கள் உடலில் போதிய வலு இல்லாததே காரணம். ஆகவே லாடத்து ஆணிபோல, ஒருவர் விஷயத்தில் 'உடல் நலம்' இருக்கலாம்', மற்றொருவர் விஷயத்தில் 'கையெழுத்து' இருக்கலாம். வேறு ஒருவருக்கோ 'குறிப்பிட்ட நேரத்தில் எழுதி முடிக்கப் பயிற்சி இல்லாதது' காரணமாக இருக்கலாம்.

இந்த எல்லாமும் சரியாக இருந்தால் மட்டுமே இலட்சியத்தை அடைய இயலும். அதற்கு விவரமான திட்டமிடல் மிக அவசியம். *

(தொடரும்)

# சுவிஸ் நாட்டில் நடைபெற்ற தமிழர் விளையாட்டு விழா

சுவிஸ் தமிழர் இல்லத்தால் எட்டாவது தடவையாக நடத்தப்பட்ட தமிழீழக் கிண்ணத்திற்கான தமிழர் விளையாட்டு விழா நிகழ்வுகள் ஆகஸ்டு மாதம் 11, 12ஆம் நாள்களில் சுவிஸ் சூரிச் வின்ரத்தூர் நகரில் நடைபெற்றது.

உதை பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிளித்தட்டு, வலைப்பந்தாட்டம், மென்பந்து துடுப்பெடுத்தாட்டம், சுவட்டுமைதான மெய்வன்மைப் போட்டி, கயிறு இழுத்தல், குறிபார்த்து எறிதல், குறிபார்த்துச் சுடுதல், முட்டி உடைத்தல் என எமது பாரம்பரிய விளை யாட்டுகளும், சர்வதேச விளையாட்டுகளும் சங்கமித்துக் கொண்டன.

ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி, நோர்வே, சுவீடன், டென்மார்க், பிரித்தானியா, நெதர்லாந்து நாடுகளிலிருந்து பெருமளவில் கழகங்கள் கலந்துகொண்டு, சிறப்பித்த இப்போட்டியில் பிரான்சிலிருந்து மட்டும் பன்னிரண்டு அணிகள் பங்கு பற்றி அதிலும் சாதனை படைத்தது.

முதல் நாள் நிகழ்வுகள் காலை 8.30 மணிக்குப் பொதுச்சுடரேற்றலுடன் ஆரம்பமானது. பொதுச் சுடரினை சுவிஸ் தமிழர் பேரவை பொறுப்பாளர் திரு. கிருஷ்ணா அம்பலவாணர் அவர்கள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து கேணல் சங்கர், லெப். கேணல் விக்ரர், மேஜர் அல்பேட், மேஜர் சோதியா, லெப் சதா, கப்டன். அன்பரசி, லெப் கேணல் புலேந்திரன், லெப் கேணல் கௌசல்யன் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு ஈகைச் சுடரினைப் போட்டி நடத்துநர்களும், உப அமைப்புப் பொறுப்பாளர்களும் ஏற்றி வைத்தனர்.

8.50 மணிக்குத் தமிழீழத் தேசியக் கொடியினைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் திரு. குலம் அவர்கள் ஏற்றி வைத்து விடுதலைப் போரில் விதையாகி வீழ்ந்த மாவீரர்களுக்கும் பொதுமக்களுக்குமாக அகவணக்கம் செலுத்தப் பட்டது. தொடர்ந்து விளையாட்டுத் துறைக் கொடியினை விளையாட்டுத் துறை சுவிஸ்கிளைப் பொறுப்பாளர் திரு. திருக்குமார் அவர்கள் ஏற்ற, தமிழர் இல்லக் கொடியினை சுவிஸ் தமிழர் இல்ல இணைப்பாளர் திரு. மதியழகன் அவர்கள் ஏற்றிவைத்தார்.

ஒலிம்பிக் தீபத்தினை சுவிசின் முன்னணிக் கழகங்களில் ஒன்றான தமிழ் இள நட்சத்திர விளையாட்டுக் கழகத்தின் சிறந்த சகல நிலை ஆட்டக்காரரான செல்வன் யசிந்தன் ஏற்றிவைத்ததும் வீரர்களின் சத்தியப் பிரமாணத்துடன் காலை 9.30 மணிக்குப் போட்டிகள் ஆரம்பமாகி நள்ளிரவு 11.00 மணிக்குத் தேசியக்கொடி இறக்கலுடன் நிறைவுபெற்றது.

சுவிஸ் றோயல் விளையாட்டுக் கழகம் சிறப்பாக விளையாடிக் கால் இறுதி ஆட்டத்தில் டென்மார்க் அணியினையும், அரை இறுதி ஆட்டத்தில் பிரித்தானியா




தமிழ்த் தேசிய விளையாட்டுக் கழகத்தையும் வெற்றி பெற்று இறுதியாட்டத்தில் நெதர்லாந்துடன் மோதி வெற்றிக் கிண்ணத்தைத் தமதாக்கிக்கொண்டது. இந்த ஆண்டுடன் நான்கு தடவைகள் தமிழீழக் கிண்ணத்தை வென்ற பெருமையினையும் பெறுகின்றனர்.

11 வயதுப் பிரிவில் சுவிஸ் இளம் சிறுத்தைகள் விளையாட்டுக் கழகமும் 15 வயதுப் பிரிவில் சுவிஸ், தமிழ் இளநட்சத்திர விளையாட்டுக் கழகமும் பெண்கள் உதை பந்தாட்டத்தில் யேர்மன் தமிழ்த் தேசிய விளையாட்டுக் கழகமும், கிளித்தட்டு ஆண், பெண் இரு பிரிவுகளிலும் புறாக் சுவிஸ் விளையாட்டுக் கழகமும், கரப்பந்தாட்டம் ஓவர்கேமில் சுவிஸ் செல்வா விளையாட்டுக் கழகம் இரண்டாவது தடவையாகவும் வெற்றி பெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்வில் சென்ற ஆண்டு செஞ்சோலை வளாகத்தில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களை நினைவுகூர்ந்து மலர்வணக்கம் செய்யப் பட்டது. அத்துடன் திரு. மயில்வானம் ஜெகன்நாதன் அவர்களால் தயாரித்துத் தமிழர் இல்லத்தால் வெளியிடப்பட்ட வலைப்பந்தாட்ட ஆட்ட விதிகள் என்னும் நூல் வெளியீடும் இடம்பெற்றது.

இந்நூலினைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் வெளியிட்டு வைக்க, வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிப் பொறுப்பாளர் திரு. ராதா பெற்றுக்கொண்டார். ஒலிம்பிக் தீபத்தினை சுவிஸ் வோ மாநிலத்தைச் சேர்ந்த சுவிஸ் உதைபந்தாட்ட அணியில் 13 வயதுப் பிரிவின் பயிற்சியாளராகப் பணிபுரியும் திரு. ராஜா அவர்கள் ஏற்றிவைத்தார்.

வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆண்-பெண் செற்றப், 9, 13, 17, 21, 30 வயதுப் பிரிவுகளுக்கான உதைபந்தாட்டம், மென்பந்து துடுப்பெடுத்தாட்டம் மற்றும் பார்வையாளர் போட்டிகள் என்பன நடைபெற்றன.

கரப்பந்தாட்டத்தில் 30 அணிகளும், வலைப் பந்தாட்டத்தில் 10 அணிகளும், கிளித்தட்டில் 9 அணிகளும், மென்பந்து துடுப்பெடுத்தாட்டத்தில் 16 அணிகளும், சுவட்டுமைதான மெய்வன்மைப் போட்டிகளில் 250ற்கும் அதிகமான மாணவர்களும் கலந்துகொண்ட இவ்விழாவில் ஏழாயிரத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் கலந்துகொண்டனர். *

# நிலம்

ஜோ. ஜெஸ்ரின், யாழ்ப்பாணம்.

உயிர்ச் சுடரில்
பயிர்கள் பவனிவருகின்றது-அங்கே
அமைதிப் பொட்டலங்களை
வசீகரித்த வெளிகளில் நிசப்தம்

கண்ணீர்க் கோடுகளாய்
உருளும் செவிகளில்
ரயிலின் ஆர்ப்பரிப்பு
கடக் கடக் கடக்கென
கடக்கும் காலத்தைச் சுட்டுகின்றது

அறுவடைக்குப் பின்
அனாதையாய்த் தெரிகின்றது
பசும்புல் மேய்ச்சல் நிலம் - அதன்
விதையின் விருட்சத்திற்காய்
விளைச்சல்களைப் பறிகொடுக்கின்றது.

புல்லின் சிறகுகளில்
வான் இறங்கிவந்த பனித்துளி
பகலவன் தரிசனத்தில்
யௌவனப் புழுதியாய்
மறைகின்றது.

உருகிப் பெருகும் மௌனம்
எனது குரலை ஏந்திச்செல்கின்றது
இசையில் கவிந்த வாழ்க்கையில்
எனது பாடல் ஒய்வெடுக்கின்றது.

தண்ணீரில் தரைமணலில்
தவிக்க விட்டுப் பார்க்கும்
சிருஸ்டியின் மகத்துவத்தைக்
காற்று காதோரமாய்க் குசுகுசுக்கின்றது

மரம் வெட்டும் கோடரிக்கு
மரப்பிடி கொடுக்கும் மரம்
மனவருத்தப்படுவதில்லை - இதனால்
பிசுபிசுத்துப்போன வையம்
தன் ஆறாத்துயரை
ஒரு மாரியாய்க் குறைத்தது

விரும்பிய போதெல்லாம்
விளக்கை அணைத்திருக்காவிடில்
இருளைப் பற்றியதான
அருள் பிறந்திருக்குமா?

தாய் மடியில் தவழுகின்ற
சிறு குழந்தையைப் போலத்
தரை மணலில் புரளும்
கரையில்லா எண்ணங்கள்
புறாக்கூட்டமாய் உயரும்போது
சிந்தனைச் சிதறல்களில்
சிறகுகளின் குரல் கனக்கின்றது.


IOM International Organization for Migration

**IOM Consultation on Assisted Voluntary Return - Asia**

**live discussions with returnees sharing their experiences of return**

INVITATION

Representatives from your organisation are cordially invited to attend our **Asia Consultation Day** on **10 September 2007** from **9.30 am** to **4.00 pm** at **The Royal Horseguards Hotel, 2 Whitehall Court, Whitehall, London SW1A 2EJ**

(Nearest Underground Stations: Embankment and Charing Cross)

**Who should attend?**

Leaders and representatives from Asian diasporas and community groups




சிங்கப்பூர் கிரிக்கெட் கிளப் உறுப்பினர்கள் மலேசியாவிலுள்ள பஹாங் சிலோன் சங்கத்துக்கும் குவாந்தன் பன்னாட்டுக் கிரிக்கெட் அமைப்புக்கும் வருகைத் தந்தனர் சுடரொளியின் செய்தியாளர் பரமானந்தன் வழங்கிய சுடரொளி இதழ்களுடன் அவர்கள்.

## தமிழ் ஈழத்தின் வான்படை உதயம்

பேராசிரியர் கோபன் மகாதேவா

கண்ணாம் எம் ஈழத்தின் மண்ணினை நாம் மீட்பதற்குத்
தொண்ணூற்று நான்கினிலே திட்டம் ஒன்றை முன்வைத்தேன்.
விண்வெளியை எமதாக்கி வேகமுடன் வட-கிழக்கார்
வன்மை வரின் தடுத்தாள வான்படையும் வேண்டும் என்றேன்.

பம்பரம் போல் சுழன்று உலையும் போலி நடை அரசினரின்
வம்பான வான்தாக்கல் வாகனங்கள் வெடித்து உடைக்க
எம்கலங்களில் இன்று அதிசயமாய்ப் பறந்து அடித்துத்
தம்பிமார் தமிழ் இனத்தின் தன்மானம் தாங்கி உள்ளார்.

விண்ணை இன்று வசம் செய்த வீரத் தமிழ்த் தம்பியார்கள்
பண்புடனே பொறை காத்துப் பல்லினம்சேர் பேச்சுகளால்
அண்மைப் பிரதேச இராச்சியங்கள் நிறுவுவது
திண்ணம், உலகரங்கில் வெல்வார், இது உறுதி.

## செல்போன் பயங்கரம்

# 20 நிமிடங்களுக்கு மேல் பேசாதீர்கள்

### விஞ்ஞானிகள் எச்சரிக்கை தகவல்



**சு**மார் 40 ஆண்டுகளுக்கு முன்பு 10 அக்கம் பக்கத்துக் கிராமங்களுக்கு மத்தியில் ஒரே ஒரு ஊர்ப் பண்ணையார் வீட்டில் மட்டும் இருந்தது அந்த டெலிபோன்.

அழகான பெண்ணின் இடைபோல, கன்னங் கரேல் உருவத்தில், சுமார் 2 கிலோ எடை அளவு கொண்ட அந்தப் போனில் வளையம், வளையமாக 10 ஓட்டைகள் இருக்கும். குறிப்பிட்ட எண்ணை விரலால் இடமிருந்து வலமாகச் சுற்றிவிட்டால் 'ஸ்பிரிங்' போல ரிவர்ஸ்சில் வந்து டிரிங்... டிரிங்... என்று மணியடிக்கும். அப்போதெல்லாம் உலகம் முழுவதும் ஒரே ஒரு 'ரிங்டோன்' தான்!

இப்போது ஒரே சட்டைப் பையில் விதம் வித மாக 4 செல்போன்களைத் தாராளமாக வைத்திருக் கிறார்கள். ஒருபுறம் வேடிக்கையாகவும் இருக்கிறது. காதில் 'ஹெட்போனை' வைத்துக் கொண்டு நடுரோட்டில் தனக்குத்தானே பேசிக்கொண்டு போவதைச் செத்துப் போன நமது தாத்தா-பாட்டி பார்க்க நேர்ந்தால் ''பாவம், யாரு பெத்த புள்ளையோ! இப்படிப் பைத்தியம் புடிச்சு அலையுது'' என்பார்கள்.

கற்பனைக்கும் எட்டாத இந்தச் செல்போனை யார் கண்டுபிடித்தது? சிகாகோவைச் சேர்ந்த 'மார்ட்டின் கூப்பர்' என்பவர் தாம் இந்த நவீன செல்போனைக் கண்டுபிடித்தவர்.

1973-ஆம் ஆண்டு ஏப்பிரல் 3-ஆம் தேதி உலகின் முதல் செல்போனைக் கண்டுபிடித்து முதன்முதலாகப் பேசியதும் இவர்தாம். பிரபல 'மோட்டோரல்லா' கம்பெனி தான் முதல் செல்போனை உலகிற்குக் காட்டியது. இந்த நிறுவனத்தைச் சேர்ந்த மார்ட்டின் கூப்பர் முன்னதாக வயர்லெஸ்-ஆன்டனா சம்பந்தமான கடை வைத்திருந்த வர் என்பது விசேஷம்.

எனினும் இந்தச் செல்போனுக்கு அடிப்படை ஆதாரத்தை அமைத்துக் கொடுத்தது அமெரிக்காவின் நியூஜெர்சியை அடுத்து 'முர்ரேஹில்' பகுதியில் உள்ள 'பெல்' லேபரட்டரிதான். இவர்கள்தாம் வயர்கள் இல்லாத வாக்கி-டாக்கி ரேடியோவை 1947-இல் கண்டு பிடித்து இராணுவ உபயோகத்திற்காகத் தந்தார்கள். இது அதிக எடை கொண்டதாக இருந்தது. இதனை 1960 வாக்கில் ஓரளவுக்கு நவீனமாக்கினார்கள்.

இதைத் தொடர்ந்துதான் 1973-இல் மார்ட்டின் கூப்பர் நவீன உயர்ரக செல்போனைக் கண்டுபிடித்தார். 1990-இல் உலகம் முழுவதும் செல்போன்கள் முற்றிலும் நவீன யுகத்திற்கு போய்விட்டன.

செல்போனைக் கண்டுபிடித்ததற்காகக் கடந்த 2003-இல் வார்தான் இன்போசிஸ் பிசினஸ் டிரான்ஸ்பர் மேசன் விருது கிடைத்திருக்கிறது மார்ட்டின் கூப்பருக்கு!

முதல் செல்போனை 'மோட்டோரல்லா' கண்டு பிடித்தாலும் இன்று உலகம் முழுவதும் செல்போன் வியாபாரத்தில் சக்கைப் போடு போடுவது 'நோக்கியா' நிறுவனம்தான்! உலகில் 36 சதவீதம் பேர் இதைத்தான் வைத்திருக்கிறார்கள். இது தவிர எல்.ஜி. மிட் சுபிசி, பேனாசோனிக், சோனி எரிக்சன், சன்யோ, சாம்சங், சைமன்ஸ், தோஷிபா, பிலிப்ஸ் நிறுவனங்களும் போட்டியில் உள்ளன.

இன்றைக்கு உலகம் முழுக்க சுமார் 350 கோடி பேர் செல்போன் வைத்திருக்கிறார்கள். இவர்களில் அதிகம் பேர் செல்போன்கள் வைத்து முதல் இடத்தில் இருப்பவர்கள் சீனர்கள்தாம். இங்கு 50 கோடி பேர் களிடம் செல் இருக்கிறது. இந்தியாவைப் பொறுத்த வரையில் கடந்த 2007 ஜூன் மாதக் கணக்குப்படி பதினெட்டே முக்கால் கோடிப் பேர்களிடம் செல்போன் இருக்கிறது. இந்தியாவில் மாதத்திற்கு 73 இலட்சம் செல்போன்கள் விற்கின்றன. வருகிற 2010-ஆம் ஆண்டுக்குள் 50 கோடி செல்போன்கள் விற்பனை யாகும் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது.

உலகின் பல நாடுகளில் ஜனத்தொகையை விடவும் செல்போன்களில் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இதில் லக்சம்பர்க்காரர்கள் 164 சதவீதம் செல் போன் வைத்து உலகின் முதல் இடத்திலும், ஹாங்ஹாங்கினர் 117 சதவீதம் செல்போன் வாங்கி 2-ஆம் இடத்திலும் இருக்கின்றனர்.

வருகிற 2015-ஆம் ஆண்டு உலகின் 90 சதவீதம் பேரிடம் செல்போன் இருக்குமாம். 'அதிர்ச்சி' இங்கிருந்து தான் ஆரம்பமாகிறது. ஒருவேளை இந்தச் செல்போனே உலகை அழிக்கக் காத்திருக்கும் சுனாமி எமனாக இருக்கலாம். எந்த ஒரு அபாயகரமான சூழ்நிலையை யும் அது வரும் முன்பே கண்டுபிடித்து உலகுக்கு எச்சரிக்க வேண்டியது விஞ்ஞானிகளின் கடமையாகும். அந்த வகையில் செல்போன் பற்றிய அதிர்ச்சித் தகவல் கள் வேகமாக வெளியே வர ஆரம்பித்திருக் ன்றன.

அமெரிக்க அரசின் உணவு மற்றும் மருந்து நிர்வாக மையம் ஆராய்ச்சி நடத்தி செல்போனின் அதீத பயன்பாட்டால் மூளையில் புற்றுநோய் வர வாய்ப்பு இருப்பதாகக் கண்டுபிடித்தது. எனினும் அறிக்கைக்குப் போதுமான ஆதாரங்கள் இல்லாமல் இது ஒரு தற்காலிக முடிவு என்று விட்டுவிட்டார்கள். செல்போன் என்பது சமீபத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது என்பதால் இது பற்றிய உண்மைகளை அறிய கால அவகாசம் தேவைப் படும் என்று உலக விஞ்ஞானிகள் அறிவித்த பட்சத்தில் உலக சுகாதார மையமும் முன்னர் அமெரிக்கா

கண்டுபிடித்த விஷயத்தில் மூக்கை நுழைத்து 'ஆம்' என்று கூறியிருக்கிறது.

கடந்த 10 வருடங்களாகத் தொடர்ந்து செல் போனை உபயோகித்து வந்த 3 ஆயிரம் பேரை பரிசோதித்துப் பார்த்தபோது அவர்களில் 40 சதவீதம் பேருக்கு மூளையில் கேன்சர் கட்டிகள் உருவாகி உள்ளது. இவை 2 விதமான புதிய கேன்சர் நோயாக உள்ளன.

பொதுவாகச் செல்போனில் இருந்து வெளிவரும் 'ரேடியேசன்' என்ற கதிர்வீச்சு மிகக் குறைந்த அளவு தான் என்றாலும் அது மனித உடலின் திசுக்களை ஓரளவு பாதிக்கத்தான் செய்கிறது.

செல்போனில் அதிக நேரம் பேசிக் கொண்டிருப் பவர்களுக்குத்தான் இத்தகைய ஆபத்து. காதையும் உட்காதையும் மூளையுடன் இணைக்கின்ற 'ஆக்யூஸ்டிக் நியூரோம்ஸ்' என்கிற நரம்பு பாதிப்பும் இவர்களுக்கு ஏற்படுகிறதாம். அதிக அளவு செல்போன் உபயோகிப் பவர்களுக்கு மூளைச் செயல்பாடுகள், தூக்கம், விழிப்பு ணர்வு ஆகியவற்றில் மாற்றம் ஏற்படுவதாகவும் கண்டு பிடித்து இருக்கிறார்கள்.

இதில் மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் விஷயம். உடல் திசுக்கள் முழு வளர்ச்சி அடையாத நிலையில் குழந்தைகளும் செல்போன் பயன்படுத்தி வருகின்றனர். செல்போன் கதிர்வீச்சுகள் இவர்களின் திசுக்களை மிக எளிதாகவே பாதித்துவிடும் என்ற நிலையில் இவர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆகும் போது நீண்டகாலம் செல்போனை பயன்படுத்தியவர்கள் ஆகிறார்கள். எனவே அதிக ஆபத்து இவர்களைச் சூழ்ந்திருக்கிறது என்கிறார்கள்.

இதுபற்றி அயிஸ் செல்சின், லாவரிசாலிஸ் என இரு விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆராய்ச்சி செய்த வண்ணம் இருக்கிறார்கள். இது தவிர உளவியல் ரீதியான ஆராய்ச்சி முடிவுகளும் தற்போது வெளிவர ஆரம்பித்திருக்கின்றன.

செல்போனை அதிகம் பயன்படுத்துபவர்களில் 60 சதவீதம் பேருக்குக் கோப குணமும், தலைவலியும், பெருகுவதாக அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஒரு வேளை செல்போனால் கேன்சர் நோய் உறுதி செய்யப் பட்டால் 2015-இல் உலகில் 90 சதவீதமான மக்களின் கதி என்னவாகும். - ''இப்பவே கண்ணைக் கட்டுதே''

**எச்சரிக்கை டிப்ஸ்**

செல்போன் என்பது அடிப்படைத் தகவல் பரிமாற்றத்திற்காகத்தான் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், அதனை நம்மவர்கள் நீண்ட நேர அரட்டைக் கச்சேரிக் காகப் பயன்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். பேசுவது காதலியாக இருந்தாலும்கூட ஒருவரிடம் 20 நிமிடங் களுக்கு அதிகமாகப் பேசாதீர்கள். நட்புகளை வளர்த்துக் கொண்டு அதிகம் பேரிடம் இடைவெளியின்றிப் பேசா தீர்கள். போதிய ஓய்விற்குப் பிறகே அடுத்தவரிடம் பேச வேண்டும். ஒரே சமயத்தில் பல போன்களில் பேசாதீர்கள். வள, வள பேச்சுகளைத் தவிருங்கள். இரவில் செல்போனுக்கும் ஓய்வு கொடுத்துவிடுங்கள். ✱

*நன்றி : மாலைமலர் (30-07-07)*


## திருமண சேவை

**தங்கள் தேடல் மணமகனா? மணமகளா? உள்நாடா? வெளிநாடா?**
**எவ்வகைத் தெரிவுக்கும் வேல் அமுதனே!**

வேல் அமுதனிடம் இன்று தமிழினப் பல் சமூகப் பதிவுகள் மொத்தம் 1850 கைவசமுண்டு! அவற்றுள் உள்நாட்டு மணமகன்மார் 330, வெளிநாட்டு மணமகன்மார் 575, உள்நாட்டு மணமகள்மார் 745, வெளிநாட்டு மணமகள்மார் 200. ஒவ்வொன்றும் தனித்தனி கடிதக் கோப்புகளுள் 1. விவரங்கள் 2. சாதகக் குறிப்பு 3. சான்றுகள், பிரதிகள் 4. போட்டோ ஆல்பங்கள் 5. சோதிட சாதகப் பொருத்த அட்டவணைகள் ஆகிய இணைப்புகளுடன் ஒரே பார்வையில் காணக்கூடியதாகவுள்ளது. நீங்கள் விரும்பக்கூடியதா? உங்களுக்குப் பொருந்தக்கூடியதா? என இலேசாக அறியக்கூடியதாக நவீன பாணியில் அழகாக வசதிப்படுத்தப்பட்டுள்ளன!



**இன்னுமேன் தயக்கம்?... 'இன்றே சுயதெரிவு முறை முன்னோடி, புகழ் பூத்த தனிநபர் நிறுவனர், சர்வதேசத் திருமண ஆற்றுப்படுத்துநர், குறும்பசிட்டியூர் மாயெழுவேல் அமுதனுடன் தொடர்பு கொள்ளுங்கள்!**

தொலைபேசித் தொடர்புக்கு முன்னுரிமை வழங்கப்பட்ட நாள்கள்
அரசு விடுமுறை நாள்கள் தவிர்ந்த, **திங்கள், புதன், வெள்ளி** நாள்கள் மாத்திரமே!

இலங்கை நேரம் : **மாலைமணி 4.30 - 8.30 வரை!**

கொழும்பு நேரடித் தொலைபேசி : **2360488, 4514396, 0602158067**

**வேல் அமுதனை நேரில் சந்தித்தல் முக்கியம்!**

முடியாதவர்கள் தங்கள் பிரதிநிதி ஒருவரை அனுப்பிச் சந்திக்கச் செய்யலாம்!

3-3 Metro Apartment, (Opposite Wellawatte Police Station Via 33rd Lane)
55th Lane, Colombo-06, Sri Lanka

கதை நேரம் - 9

# கூட்டாளிகளா?-எச்சரிக்கை!

தி.க. சந்திரசேகரன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், திருப்பத்தூர், தமிழ்நாடு

ஒரு காட்டில் வாழ்ந்து வந்த வயதான சிங்கம் நரி, முதலை ஆகிய மூன்றும் ஒருமுறை கூட்டு சேர்ந்தன. அவற்றிற்குள் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது! அதன்படி இவை மூன்றும் வேட்டையாடிக் கிடைக்கும் விலங்குகளை ஒன்றாகக் கொண்டு வந்து போட்டுப் பின்னர்ப் பங்குபோட்டு உண்ண வேண்டும். விதவித மான சாப்பாடு கிடைக்கும் என்பதற்காகவே இந்தத் திட்டம்.

அன்று அந்த வயதான சிங்கம், ஒரு முயலைக் கொண்டு வந்து பொது இடத்தில் போட்டது. நரி மிகவும் சிரமப்பட்டுத் துரத்தி, ஒரு பெரிய மானைக் கொன்று இழுத்துக்கொண்டு வந்தது. தண்ணீர் குடிக்க வந்த ஒரு பசுவைக் கொன்று, அதனைப் பொது இடத்துக்குக் கொண்டு வந்தது முதலை. இப்போது அந்த மூன்று பிராணிகளும் தாங்கள் வேட்டையாடிக் கொண்டு வந்து போட்ட முயல்-மான்-பசு ஆகிய விலங்குகளை, நாக்கில் எச்சில் ஊறப் பார்த்தபடி நின்றன.

தொண்டையைக் கனைத்தபடி சிங்கம் கேட்டது, ''இந்த இரையை நாம் எப்படிப் பங்கு போட்டுக் கொள்வதாம்?'' என்றது. சற்றும் தாமதிக்காமல் முதலை விடையளித்தது, ''அரசே, நீங்கள் எங்கள் எல்லோருக் குமே அரசர், பெரியவர்; ஆகவே நீங்கள் பசுவை உங்கள் சாப்பாட்டுக்கு வைத்துக் கொள்ளுங்கள். இந்த நரி இருக்கிறானே, அவன் பொடிப் பயல். அவன் முயலை எடுத்துக் கொள்ளட்டும். நான் வேண்டு மானால் மானை எடுத்துக் கொள்கிறேன்.

உடனே சிங்கத்திற்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. முதலை பேசிக்கூட முடிக்கவில்லை. அதன் அருகில் வேகமாகச் சென்று காலை ஓங்கிப் பலமாக முகத்தில் ஓர் அறை விட்டது. அவ்வளவுதான், முதலை கதிகலங்கிவிட்டது. ஏற்கெனவே மேட்டில் இருந்த அதன் வலது கண், தெறித்து விழுவதைப் போல் இன்னும் கொஞ்சம் வீங்கி மேலே ஏறிக் கொண்டது! கண்ணில் இரத்தம் கசிந்தது.

பின்னர்ச் சிங்கம் நரியைக் கேட்டது, ''நரியாரே, நீர் சொல்லும், இரையை எப்படிப் பிரித்துக் கொள்வது?''

நரி மிகவும் பணிவாகக் கூறியது, ''அரசே! நீங்கள் தாம் எங்கள் அரசர்! எங்களுக்கு எல்லாமே நீங்கள்தாம்! இப்போது பிற்பகல் சாப்பாட்டுக்கு நீங்கள் மாட்டைச் சாப்பிடுங்கள். இன்று மாலைச் சிற்றுண்டிக்கு நொறுக்குத் தீனியாக முயலைச் சாப்பிடுங்கள். இரவு விருந்துக்கு இருக்கவே இருக்கிறது மான்!''

அதைக் கேட்டதும் சிங்கம் மகிழ்ந்து போய் விட்டது, ''ஆஹா! எவ்வளவு சரியாகச் சொன்னாய்! நல்ல முடிவு! ஆமாம், நீ எப்படி இவ்வளவு நன்றாக, நியாயமாகப் பேசக் கற்றுக் கொண்டாய், உனக்கு எப்படி இத்தகைய நல்ல அறிவு வந்தது?''

உடனே நரி கூறியது, ''எப்போது முதலைக்கு அடி விழுந்து அதன் வலது கண் கொஞ்சம் மேலே பிதுங்கித் தெரித்தாற் போல வந்துவிட்டதோ, அப்போதே எனக்கு அறிவு வந்து விட்டது அரசே!''

வாழ்க்கை முழுக்க நாம் பாடங்களைக் கற்றுக் கொண்டே இருக்கிறோம். சிலர் மகிழ்ச்சியாக, வாழ்க்கையை இனிமையாக அனுபவித்தபடியே பாடம் கற்கிறார்கள். ஆனால் சிலரோ, கசப்பான கொடுமை யான முறையில், முதலையைப் போல் பாடம் கற்கிறார்கள்.

இது ஒரு கூட்டாளிகளைப் பற்றிய பாடம். சிங்கம், முதலை, நரி ஆகியவற்றின் கூட்டணி பொருத்த மில்லாத கூட்டு. இம்மூன்று உயிரினங்களில் சிங்கம் மிகவும் தன்னலம் பிடித்த விலங்கு. பேராசையும் அதிகம். அது வேட்டையாடிக் கொண்டு வந்த இரை தான் மிகச்சிறிய இரை! வெறும் குட்டி முயல்! ஆனால், அந்தச் சிங்கம்தான் எல்லாவற்றையும் விழுங்க ஆசைப் படுகிறது. முதலையும், நரியும் இப்படிப்பட்ட ஒரு விலங்கோடு பழகினால் என்ன நடக்கும்? அதே போல் வாழ்க்கையில் நாம் யாருடன் கூட்டுச் சேர்வதாக இருந்தாலும் அவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ளாமல் எந்த முடிவையும் எடுக்கக் கூடாது.

இக்கதையில் சிங்கம் ஒரு கேள்வி கேட்டவுடன் முதலை உடனே பதிலைக் கூறிவிட்டுப் பரிசாக முகத்தில் ஓர் அறையையும் வாங்கிக் கொண்டது. நம்மை விடப் பெரியவர்கள், வல்லவர்களோடு உரையாடும்போது மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர் களுடைய மனநிலைக்கு ஏற்பப் பேசவேண்டும்.

அதே நேரத்தில் நரி மிகவும் தந்திரமாகப் பதிலளித்து, தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொண்டது. சிங்கம் என்ன விடையை எதிர்பார்த்ததோ, அதே விடையைக் கூறியது! இந்த நுணுக்கத்தையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். இதற்குப் பின்னால் வயதான சிங்கத்தோடு கூட்டு வைத்திருக்காமல், நிச்சயம் முதலையும், நரியும் பிரிந்திருக்கும். புத்திசாலிகள் - சுயநல முரடர்களுடன் கூட்டுச் சேர மாட்டார்கள்! ✱



21 பிறிக்சொற்க் றோட்,
தோண்டன் கீத், குறைய்டன்

தொலைபேசி
020 86989 3466

# ஸ்ரீ சக்தி கணபதி ஆலயம்

ஆறாம் ஆண்டு

# அலங்காரத் திருவிழா விஞ்ஞாபனம்

## 05.09.2007 புதன் முதல் 19.09.2007 புதன் வரை

பக்தப் பெருமக்களே !

எல்லாம் வல்ல ஸ்ரீ சக்தி கணபதி பெருமானின் ஆறாம் ஆண்டு அலங்காரத் திருவிழாவானது நிகழும் மங்களகரமான சர்வஜித் வருடம் ஆவணித்திங்கள் 20ஆம் நாள் (05.09.2007) புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் புதன்கிழமை வரை (19.09.2007) வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

| திகதி | கிழமை | தினசரி | காலை | மாலை | நிகழ்ச்சி |
|---|---|---|---|---|---|
| 05.09.07 தொடக்கம் | புதன் | 10.00 | கணபதிஹோமம்<br>21 கலச அபிசேகம் | 7.00<br>8.00 | கலை நிகழ்ச்சி<br>மஹா தீபாராதனை |
| 19.06.07 வரை | புதன் | 12.00 | மஹா தீபாராதனை<br>தொடர்ந்து அன்னதானம் | 8.30 | விசேட அலங்காரத்தில்<br>விநாயகர் வீதியுலா, மகாபிரசாதம் |
| 05.09.07 | புதன் | 9.00 | தேவதா அனுக்ஞை | | **(இலட்சார்ச்சனை ஆரம்பம்)** |
| 06.09.07 | வியாழன் | 10.00 | துவஜாரோகணம் (கொடியேற்றம்) | | |
| 10.09.07 | திங்கள் | | | | **மாம்பழத் திருவிழா** |
| 12.09.07 | புதன் | | | | **வேட்டைத் திருவிழா** |
| 14.09.07 | வெள்ளி | | | | **சப்பறத் திருவிழா**<br>(இலட்சாரச்சனை பூர்த்தி) |
| 15.09.07 | சனி | 10.00 | **தேர்த் திருவிழா**<br>108 சங்காபிசேகம் | 5.00<br>8.00 | தேர் வெளிவீதிப்பவனி<br>பச்சைசாத்துதல் |
| 16.09.07 | ஞாயிறு | 12.00 | **தீர்த்தத் திருவிழா**<br>(வெளிவீதியில் நீர்த்தடாகத்தில்) | துவஜாவரோகணம் | கொடியிறக்கம் |
| 17.09.07 | திங்கள் | | | | **பூங்காவனம்** |
| 18.09.07 | செவ்வாய் | | | | **திருவூஞ்சல்** |
| 19.09.07 | புதன் | | | | **வைரவர் மடை**<br>(வெளிவீதியில் பொங்கல்) |

அடியார்கள் அனைவரும் காலையும் மாலையும் இடைவிடாது ஈலயத்திற்கு வருகை தந்து ஸ்ரீ சக்தி கணபதிப் பெருமானின் பேரருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**ஆலயக்குருக்கள், நிர்வாகத்தினர், உபயகாரர்கள் மற்றும் விநாயக அடியார்கள், மேலதிக தொடர்புக்கு : 020 8689 3466**



ABBY & CO
உங்கள் உறவுகளுக்கு உலகின்
எப்பாகத்துக்கும்
பணமாற்றீடு செய்ய சிறந்த நிறுவனம்
ABBY & CO
125 Mitcham Road, Tooting, SW17 9PE
Tel : 0208 672 0266
இரண்டாவது கிளை
367, London Road, Croydon, CRO 3PB
Tel : 0208 6897555
எங்கள் புதிய முகவரிக்கு
வாருங்கள்
Smith Brothersக்கு அருகில்
விடுமுறையை கழிக்க
சென்னைக்கு
போறீங்களா ?
வசதியாக குடும்பத்தோடு தங்க
Non A/c Flatகள்
A/c Flatகள்
திருமணத்தை
நடாத்துவதற்கான
ஏற்பாடுகள் வாகன
வசதிகள் அனைத்துக்கும்
தொடர்புகட்டு
M SRI 07801227110